# TNPSC தேர்வுப்பெட்டகம்


## நடப்பு நிகழ்வுகள் பிப்ரவரி - 2018

www.tnpscthervupettagam.com













SHANKAR IAS ACADEMY™

THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

Plot No 1742, 1st Floor, 18th Main Road,
Anna Nagar West,Chennai - 600 040
Tamilnadu, Contact:044-43533445 | 044-45543082
www.shankariasacademy.com

# பொருளடக்கம்

**TNPSC துளிகள்** ........ **3**

**தமிழ்நாடு செய்திகள்** ........ **5**

**தேசியச் செய்திகள்** ........ **8**

**சர்வதேசச் செய்திகள்** ........ **43**

**பொருளாதாரச் செய்திகள்** ........ **57**

**அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்** ........ **63**

**சுற்றுச்சூழல் செய்திகள்** ........ **70**

**மாநிலச் செய்திகள்** ........ **78**

**பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்** ........ **91**

**விளையாட்டுச் செய்திகள்** ........ **98**

**முக்கிய தினங்கள்** ........ **103**

**இதரச் செய்திகள்** ........ **107**

# TNPSC துளிகள்

- இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தின் முனாபோவையும் (Munabao) பாகிஸ்தானின் கோக்ராபாரையும் (Khokhrapar) இணைக்கும் இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கு இடையேயான தார் லிங்க் எக்ஸ்பிரஸ் (Thar Link Express) மேலும் மூன்று வருடங்கள் செயல்பட பாகிஸ்தான் அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- மத்திய இரயில்வே அமைச்சகமானது மஹாராஷ்டிரா மாநிலத்தின் மராத்வாடா பகுதியில் மிகப்பெரிய இரயில்வே கட்டுமானத் தொழிற்சாலையை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. மகாராஷ்டிரா மாநிலத்தின் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றான மராத்வாடாவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் பொருளாதார மேம்பாட்டை கொண்டு வருவதற்காகவும் இந்த தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.
- தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலை பல்கலைக் கழகத்தின் (Tamilnadu Music and Fine Art University) புதிய துணைவேந்தராக புகழ்பெற்ற இசை வல்லுநரான பிரமிளா குருமூர்த்தி நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாதுகாப்பு உபகரணங்கள் உற்பத்தித் துறையானது (Department of Defence Production) செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence) பயன்பாட்டை ஆராய்வதற்காக N.சந்திரசேகரன் தலைமையில் ஓர் பணிப்படை பிரிவை (Task Force) அமைத்துள்ளது.
- தேர்வுகளை எதிர்கொள்ளும் மாணவர்களுக்காக இந்திய பிரதமர் நரேந்திர மோடி "Exam Warriors" என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.
- சூழலியலைப் பாதுகாப்பதற்காக மாநிலத்தின் முதல் வண்ணத்துப்பூச்சிப் பூங்காவை உத்திரப்பிரதேச அரசானது கான்பூரில் தொடங்கி வைத்துள்ளது.
- இந்திய ஒலிம்பிக் சங்கம் (Indian Olympic Association - IOA) தன்னுடைய இணை செயலாளரான விக்ரம் சிங் சிசோடியாவை நடைபெறவிருக்கின்ற காமன்வெல்த் போட்டிகளுக்கான இந்தியாவின் திட்டப்பணி தலைவராக (Chef-de-mission) நியமித்துள்ளது.
  - 21வது காமன்வெல்த் போட்டியானது 2018ஆம் ஆண்டின் ஏப்ரல் 4 முதல் 15ஆம் தேதி வரை ஆஸ்திரேலியா நாட்டின் கோல்டு கோஸ்ட் நகரில் நடைபெறவுள்ளது.
- ஒடிசாவின் மாநில தேர்தல் ஆணையராக நபா குமார் நாயக் நியமிக்கப்பட்டுள்ளார்.
- மத்திய உள்துறை அமைச்சரான ராஜ்நாத் சிங் "மேரே சப்னோன் கா பாரத்" (Mere Sapnon Ka Bharat) என்ற நூலை வெளியிட்டுள்ளார். தருண் விஜயால் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) தொகுக்கப்பட்ட இந்நூல் முன்னாள் பிரதமர் வாஜ்பாயின் நேர்காணல்களின் தொகுப்பு ஆகும்.
- விக்கெட் கீப்பராக 400 கிரிக்கெட் வீரர்களை ஆட்டமிழக்கச் செய்துள்ள முதல் இந்தியர் மற்றும் நான்காவது சர்வதேச வீரர் என்ற சாதனையை முன்னாள் இந்திய கேப்டன் மகேந்திர சிங் தோனி படைத்துள்ளார். சர்வதேச அளவில் இந்த சாதனைப் பட்டியலில் இலங்கையின் குமார் சங்ககாரா, ஆஸ்திரேலியாவின் ஆடம் கில் கிறிஸ்ட் மற்றும் தென் ஆப்பிரிக்காவின் மார்க் பவுச்சர் ஆகியோர் முதல் மூன்று இடங்களில் உள்ளனர்.
- ஆயுதப் படைகளை நவீனமயப் படுத்துவதற்கான மூலதன கையகப்படுத்துதல் திட்டத்தினை (Capical Acquisition Protect) விரைவுபடுத்தவும், கண்காணிக்கவும், வினய் ஷீல் ஒபராய் தலைமையில் 13 பேர் கொண்ட குழுவை மத்திய பாதுகாப்புத்துறை அமைத்துள்ளது.
- குஜராத் பல்கலைக்கழகம் பழமையான மொழியான சமஸ்கிருதத்தை பிரபலப்படுத்துவதற்காக சமஸ்கிருத பேச்சுப் போட்டி ஒன்றை அறிவித்துள்ளது. நாட்டில்

சமஸ்கிருத பேச்சுப் பயிற்சிக்கான மையம் இதுவே முதலாவதாகும்.

- தெற்கு மத்திய ரயில்வே (South Central Railway - SCR) மண்டலமானது தனது அதிகார பொறுப்பில் இருக்கும் அனைத்து இரயில் நிலையங்களிலும் 100 சதவீதம் எல்இடி (LED) விளக்குகளைப் பொருத்தியுள்ளது.
    - அனைத்து இரயில் நிலையங்களிலும் எல்இடி விளக்குகளைப் பொருத்திய நாட்டின் முதல் இரயில் மண்டலம் இதுவாகும்.
    - இந்த நடவடிக்கையின் விளைவாக நாட்டில் 32 இலட்சம் யூனிட்டுகள் வரை மின்சாரம் மிச்சப்படுத்தப்படும். இதனால் அரசுக்கு ஆண்டிற்கு 2.7 கோடி ரூபாய் அளவுக்கு செலவு குறையும்.
- பீகார் மாநில அரசு சிகரெட் சில்லறை விற்பனைக்குத் தடை விதித்துள்ளது. இதன் மூலம், உத்தரகாண்ட், இமாச்சலப்பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப், டெல்லி மற்றும் ஏனைய பிற மாநிலங்களைத் தொடர்ந்து பீகார் 12ஆவது இடத்தில் உள்ளது.
- பிரதான் மந்திரி உஜ்வாலா யோஜனா திட்டத்தின் பயனாளர்கள் இலக்கை 5 கோடியிலிருந்து 8 கோடியாக அதிகரிக்க பொருளாதார விவகாரங்களுக்கான கேபினேட் அமைச்சரவைக் குழு அனுமதி வழங்கியுள்ளது. திருத்தப்பட்ட இந்த இலக்கினை 2020 ல் அடைய முடிவு செய்யப்பட்டுள்ளது.
- மத்தியப் பிரதேச மாநிலத்தின் குவாலியர் மாவட்டத்தை “மாற்றுத் திறனாளிகளுக்கு உபயோகமான” மாவட்டமாக (Divyang Friendly) குடியரசுத் தலைவர் அறிவித்துள்ளார்.
- உலகின் முதல் ரோபோட் ஸ்கி (பனிச் சறுக்கு) போட்டி தென்கொரியாவில் நடைபெற்றுள்ளது.
- “அக்ரி கான் 2018”மற்றும் “அக்ரி எக்ஸ்போ 2018”எனும் வேளாண்மை மீதான சர்வதேச கருத்தரங்கை உத்திரப் பிரதேச மாநிலத்தின் கான்பூரில் உள்ள சந்திர சேகர ஆஸாத் வேளாண்மை மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் இந்திய குடியரசுத் தலைவர் துவக்கி வைத்தார்.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர் மற்றும் வரலாற்று ஆய்வாளரான P.ஜம்கேத்கர் வரலாற்று ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சிலின் (Indian Council of Historical Research ) அடுத்த தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் இராணுவம் கடற்படை, விமானப்படை, மற்றும் கடலோரக் காவல் படை மூன்றும் இணைந்து செயலாற்றும் தன்மையை (interoperability) கட்டமைப்பதற்காக இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் பாஸ்சிம் லேஹர் (Paschim Lehar) எனும் முப்படைகளுக்கிடையேயான கடல்சார் போர் பயிற்சியை (Tri-service Maritime Exercise) நடத்தியது.
- சத்தீஸ்கர் மாநிலத்தின் பால்ராம்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள பாலுபானி கிராமம் நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து தற்போது தான் முதல்முறையாக மின் இணைப்பைப் பெற்றுள்ளது.
- பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்தின் விளம்பர தூதராகவும், பாகிஸ்தான் கிரிக்கெட் விவகாரப்பிரிவின் தலைவருக்கு ஆலோசகராகவும் பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சோயிப் அக்தர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- சீனாவின் மாண்டரின் மொழியை பாகிஸ்தானின் அதிகாரப்பூர்வ மொழிகளுள் (Official Language) ஒன்றாக அறிவிப்பதற்கான தீர்மானத்திற்கு பாகிஸ்தானின் செனேட் அவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

- ✓ பாகிஸ்தானிய பஞ்சாப் மாகாணத்தின் பஞ்சாபி மொழியும், பஷ்தோ (Pashto) மற்றும் பல்வேறு பிற பூர்வீக மொழிகளும் பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் மிகுதியாக பேசப்பட்டாலும் இதுவரை அவை அதிகாரப்பூர்வ மொழிகளாக அறிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- ❖ பாரதி ஏர்டெல் மற்றும் சீனாவின் டெலிகாம் சாதன உற்பத்தி நிறுவனமான ஹவாய் நிறுவனம் (Huawei) இந்தியாவின் முதல் 5G பயன்பாட்டு சோதனையை வெற்றிகரமாக முடித்துள்ளதாக அறிவித்துள்ளது. வினாடிக்கு 3GB இணைய வேகத்தை இச்சோதனையில் இவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

# தமிழ்நாடு செய்திகள்

## ஓமந்தூரார்-அரசு விழா

- ❖ சுதந்திர இந்தியாவில், தமிழகத்தின் முதல் முதல்வரான ஓமந்தூர் P.ராமசாமி ரெட்டியாரின் பிறந்த நாளை முதல்முறையாக அரசு விழாவாக கொண்டாட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.
- ❖ நாடு சுதந்திரமடைந்த பிறகு, அன்றைய மதராஸ் மாநிலத்தின் முதல்வராக மார்ச் 23, 1947 முதல் ஏப்ரல் 6, 1949 வரை ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பதவி வகித்தார்.

### *இவருடைய பங்களிப்புகள்*

- ❖ மதராஸ் மாநிலத்தில் தேவதாசி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.
- ❖ சுதந்திரமடைந்த பிறகு, நாட்டிலேயே முதல்முறையாக அரசு பொதுப் பணிகளில் பின்தங்கிய மக்களுக்கு இடஒதுக்கீட்டை கொண்டு வந்தவர் இவரேயாவார். பின்தங்கிய மக்களுக்கு 14.29 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.
- ❖ மேலும், பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினருக்கு 14.29% இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

## ஜல்லிக்கட்டு விவகாரம் – அரசியலமைப்பு அமர்வு

- ❖ அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 29(1)ன் கீழ் ஜல்லிக்கட்டை தங்களுடைய கலாச்சார பாரம்பரியமாக தமிழ்நாடு மக்களால் பாதுகாக்க முடியுமா என்பதன் மீது முடிவை எடுக்க உச்சநீதி மன்றமானது ஜல்லிக்கட்டு விவகாரத்தை உச்சநீதி மன்றத்தின் அரசியலமைப்பு அமர்வுக்கு (Constitution Bench) மாற்றியுள்ளது.
- ❖ குடிமக்களுடைய கல்வியியல் மற்றும் கலாச்சார உரிமைகளை பாதுகாக்கும் ஓர் அடிப்படை உரிமையே விதி 29 (1) ஆகும். இது அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி III-இல் கூறப்பட்டுள்ளது.
- ❖ அரசியலமைப்பு சட்டத்தின் விதி 29(1)-ன் கீழ் ஓர் கூட்டு கலாச்சார உரிமையாக (collective cultural right) ஜல்லிக்கட்டிற்கு அரசியலமைப்புப் பாதுகாப்பு (Constitutional Protection) வழங்குவது தொடர்பான கோரிக்கையை உச்சநீதி மன்றமானது முதல் முறையாக கருத்தில் ஏற்றுக்கொண்டுள்ளது.

## மின்னணு - தகவல்கள் உருவாக்கம்

- மின்னணு தகவல்கள் மற்றும் தொலைக்காட்சி வழி பயிலும் கல்விக்கான பாடக்குறிப்புகள் உருவாக்கத்தில் தொடர்ந்து இரண்டாவது முறையாக அண்ணா பல்கலைக் கழகத்தில் உள்ள கல்விக்கான பல்துறை ஆய்வு மையம் (Educational Multi Media Research Centre - EMMRC) முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- நாட்டில் மொத்தமாக இது போன்ற 21 ஆய்வு மையங்கள் உள்ளன.
- அண்ணா பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள இந்த ஆய்வு மையம், தகவல் மற்றும் தொலைத் தொடர்பு திறன் மூலமான கல்விக்கான தேசியத் திட்டத்தின் (National Mission on Education through Information and Communication Technology - NMEICT) கீழ் பல்வேறு மின்னணு தகவல்களையும், தொலைக்காட்சி வழி கல்விக்கான பாடக்குறிப்புகளையும் தயாரித்து வருகின்றது.

## காவிரி நீர் விவகார தீர்ப்பு

- காவிரியில் இருந்து தமிழகத்துக்கு 177.25 டி.எம்.சி. தண்ணீர் திறக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையில் நீதிபதிகள் ஏ.எம்.கான்வில்கர், மற்றும் அமிதவ ராய் ஆகியோர் அடங்கிய அமர்வு மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்தத் தீர்ப்பை வழங்கியது.
- காவிரி நடுவர் மன்றமானது தமிழ்நாட்டின் நிலத்தடி நீர் இருப்பான 20 டி.எம்.சி நீரைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அந்த 20 டிஎம்சியில் 10 டிஎம்சியை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வதாகக் கூறி இந்தத் தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

### *பெங்களூரின் குடிநீர் தேவை*

- பெங்களூருவின் குடிநீர் தேவை அதிகரித்திருப்பதாலும், அங்கு நிலத்தடி நீரின் அளவு மிகமிகக் குறைவான அளவில் இருப்பதாலும், நீர் தேவையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்ப்பு வழங்கப்படுவதாக உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. காவிரி நடுவர் மன்றம், தமிழ்நாட்டின் நிலத்தடி நீரின் அளவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை எனவும் கூறியுள்ளது.
- பெங்களூரு நகரமானது காவிரியாற்றின் வெளியிலமைந்திருந்த போதிலும் பெங்களூருவிற்கு 4.75 டி.எம்.சி நீரை ஒதுக்கீடு செய்துள்ளது.
- நதிநீர் தொடர்பான இந்த தீர்ப்பு அடுத்த 15 ஆண்டுகள் வரையில் எவ்வித மாற்றமின்றி செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ளது. புதுச்சேரி (7 டிஎம்சி) மற்றும் கேரளா (30 டிஎம்சி) ஆகியவற்றிற்கான நீர்ப்பகிர்வில் எந்தவொரு மாற்றமுமில்லை.
- மாநிலங்களுக்கிடையே பாயும் ஆறுகள் “தேசியச் சொத்து” எனவும், அவற்றின் மீது எந்த மாநிலமும் உரிமை கொள்ள அதிகாரம் இல்லை எனவும் உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.
- 802 km நீளமுடைய காவிரி ஆற்றில் 70 டிஎம்சி நீர் சாதாரண நாட்களில் இருக்கும்.
- இத்தீர்ப்பு இறுதியானதென்றும் மேல்முறையீடு செய்ய இயலாதென்றும் கூறியுள்ளது.

| எண் | மாநிலம் | நீரின் அளவு (TMC) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு | 404.25 |
| 2 | கர்நாடகா | 284.75 |
| 3 | கேரளா | 30 |
| 4 | புதுச்சேரி | 7 |

## தலைமை தேர்தல் அதிகாரி - தமிழ்நாடு

- இந்திய ஆட்சிப் பணி அதிகாரியான சத்யபிரத சாஹீ தமிழ்நாட்டின் அடுத்த தலைமை தேர்தல் அதிகாரியாக (Chief Electoral officer - CEO) நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது தலைமை தேர்தல் அதிகாரியாக உள்ள ராஜேஸ் லக்கானிக்கு பதிலாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- 1997 ஆம் ஆண்டின் ஐ.ஏ.எஸ் பணிப்பிரிவைச் சேர்ந்த இவர் ஒடிஸா மாநிலத்தவராவார்.
- நடப்பில் இவர் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு வாரியத்தின் நிர்வாக இயக்குநராக (Chennai Metropolitan Water Supply and Sewerage Board-CMWSSB) உள்ளார்.

## தமிழக மரக்களஞ்சியம்

- மரம், மரம் வளர்ப்பு குறித்த தகவல்களை உள்ளடக்கிய 'தமிழக மரக்களஞ்சியம்' என்ற செல்லிடப்பேசி செயலியை தமிழக வனத்துறை அறிமுகம் செய்துள்ளது.
- புதுமை முயற்சி திட்டத்தின்கீழ் மாநில வனத்துறையால் இந்தச் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.
- மரப்பண்ணையம் மேற்கொள்ளத் தேவையான அனைத்து தகவல்களும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டு இந்தச் செயலியில் இணைக்கப்பட்டுள்ளன.
- இச்செயலியில் 150 மரங்களுக்கான தகவல்களும், அவற்றின் வளர்ப்பு தொழில்நுட்பங்களும் வழங்கப்பட்டுள்ளன .
- இம்மரங்கள் 19 மர இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தமிழகத்தின் மண் வகைகளுக்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும் எவ்வகை மர வகைகளை வளர்க்க முடியும் என்பதும், ஊடுபயிர் மற்றும் வேளாண் காடுகளின் மாதிரிகளும், இதன் ஒரு பகுதியாக இணைக்கப்பட்டுள்ளன.
- 'மரக் களஞ்சியம்' என்னும் இச்செயலியை ஆன்ட்ராய்டு ரக செல்லிடப்பேசிகள் மற்றும் ஆப்பிள் கைபேசிகளிலும் பதிவிறக்கம் செய்து கொள்ளலம் .

# தேசியச் செய்திகள்

## 6-வது பணக்கார நாடு – இந்தியா

- நியூ வேர்ல்டு வேல்த் எனும் அமைப்பால் வெளியிடப்பட்டுள்ள உலக பணக்கார நாடுகள் பட்டியலில் இந்தியா 6-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- உலகின் பணக்கார நாடாக அமெரிக்கா முதலிடம் பெற்று விளங்குகின்றது.
- 2-வது மற்றும் 3-வது இடத்தில் முறையே சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் உள்ளன.

***உயர் நிகர சொத்து மதிப்புடைய தனிநபர்கள்***

- மேலும் இந்த அறிக்கையில் இந்தியாவில் 3,30,400 உயர் நிகர சொத்து மதிப்புடைய தனிநபர்கள் (HNWI – High Net Worth Individuals) உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த அம்சத்தில் இந்தியா 9-வது இடத்தில் உள்ளது. அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.
- தங்களுடைய நிகர சொத்து மதிப்பில், 1 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (United States Dollar) அல்லது அதற்கும் அதிகமாக பண மதிப்பைக் கொண்ட தனிநபர்கள், உயர் நிகர சொத்து மதிப்புடைய தனிநபர்கள் என்றழைக்கப்படுவர்.

## ஐ.என்.எஸ். கரன்ஜ்

- மும்பையில் உள்ள மஸாகான் கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வரும் ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களில் மூன்றாவது கப்பலான ஐ.என்.எஸ். கரன்ஜ் நீர்மூழ்கிக் கப்பலை இந்தியக் கடற்படை தொடங்கி வைத்துள்ளது.
- 1969 முதல் 2003 வரை இந்திய கடற்படையில் செயல்பாட்டில் இருந்த கல்வாரி வகுப்பு கப்பலான ஐ.என்.எஸ். கரன்ஜ் கப்பலினுடைய பெயரே ஸ்கார்பீன் வகுப்பின் மூன்றாவது கப்பலான இதற்கும் சூட்டப்பட்டுள்ளது.
- ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களே இந்தியக் கடற்படையின் முதல் நவீன வழக்கமான நீர்மூழ்கிக் கப்பல் தொடராகும்.
- திட்டம் 75-ன் கீழ் பிரெஞ்ச் நிறுவனமான DCSN-ன் தொழில்நுட்ப உதவியுடன் மும்பையிலுள்ள மஸாகான் கப்பல் கட்டுந்தளத்தில் 6 ஸ்கார்பீன் நீர்மூழ்கிக் கப்பல்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு வருகின்றன.
- இதற்கு முன் இந்தியக் கடற்படையில் இணைக்கப்பட்டுள்ள முதல் இரு ஸ்கார்பீன் நீர்மூழ்கிக் கப்பல்களாவன :
    - ஐ.என்.எஸ். கல்வாரி
    - ஐ.என்.எஸ். கந்தேரி
- 6 ஸ்கார்பீன் நீர்மூழ்கிக் கப்பல்களில் இன்னும் வெளியிடப்பட வேண்டிய பிற மூன்று நீர்மூழ்கிக் கப்பல்களாவன:
    - ஐ.என்.எஸ். வேலா (Vela)
    - ஐ.என்.எஸ். வாகிர் (Vagir)
    - ஐ.என்.எஸ். வக்ஷீர் (Vagshree)
- இவை கட்டமைக்கப்பட்டு படிப்படியாக 2020-ல் செயல்பாட்டிற்கு வரும்.

### *ஸ்கார்பீன் நீர்மூழ்கிகளின் அடக்க குறிப்புகள்*

- ஸ்கார்பீன் வகுப்பு நீர்மூழ்கிக் கப்பல்களானது கப்பல் எதிர்ப்பு ஏவுகணைகள் (Anti-ship missile) பொருத்தப்பட்ட டீசல்-எலக்ட்ரிக் எஞ்சினுடைய தாக்குதல் கப்பல்களாகும்.
- எதிரிகளின் ரேடாரில் புலப்படாமல் மறைய வல்ல தொழில்நுட்பமும் (Stealth technology), துல்லிய வழிகாட்டு ஆயுதங்களுடன் முடக்குத் தாக்குதல்களை தொடுக்கவல்ல திறனும் இந்த நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு உள்ளது.
- 6 ஸ்கார்பீன் நீர்மூழ்கிகளில் முதல் 4 நீர்மூழ்கிகள் டீசல்-எஞ்சினுடைய வழக்கமான (Conventional) கப்பல்களாகும்.
- கடைசி இரு கப்பல்கள் காற்று உந்துவிசை அமைப்பை (Air Independent Propulsion) கொண்டவையாகும். இதனால் இவை குறிப்பிட்ட நாட்கள் கழித்து நீரின் மேற்பரப்பிற்கு வந்து ஆக்ஸிஜன் பெற்று தன் மின்கலன்களை மீள்நிரப்பம் செய்ய தேவையில்லை. நீடித்த நாட்களுக்கு மூழ்கியபடியே இருக்க இயலும்.

## Gem 3.0

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது அரசு மின் சந்தையின் (Gem 3.0 – Government e-market place) 3-வது பதிப்பை வெளியிட்டுள்ளது.
- Gem-ன் இந்த புதிய பதிப்பானது தரப்படுத்தப்பட்ட மற்றும் செறிவூட்டப்பட்ட அட்டவணை மேலாண்மையையும் (Standardised and Enriched Catalogue Management), ஆற்றல் வாய்ந்த தேடுபொறியையும், பயன்பாட்டாளர்களுக்கு மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு வசதியையும் (User rating) தர வல்லது.

### *Gem*

- பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் அரசுத் துறைகளின் சரக்கு மற்றும் சேவை கொள்முதலை வசதிப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள ஆன்லைன் சந்தை தளமே Gem ஆகும்.
- இது இந்தியாவின் தேசிய கொள்முதல் இணைய வாயிலாக கருதப்படுகின்றது.
- மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகத்தில், அளிப்பு மற்றும் விநியோகித்தலுக்கான பொது இயக்குநரகத்தின் (Directorate General of Supplies and Disposal) கீழ் இந்த இணைய வாயில் செயல்படுகின்றது.

## உலகின் சிறந்த ஜனநாயக நாடுகள்

- எகானமிஸ்ட் இன்டெலிஜென்ஸ் யூனிட் (Economist Intelligence Unit) எனும் இங்கிலாந்தைச் சேர்ந்த நிறுவனம் வெளியிட்டுள்ள 2017ஆம் ஆண்டிற்கான வருடாந்திர உலகளாவிய சிறந்த ஜனநாயக நாடுகள் குறியீட்டில் (Global Democracy Index) உலகின் 165 சுதந்திர நாடுகளுள் இந்தியா 42 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இந்த குறியீட்டில் மீண்டும் முதலிடம் பெற்று சிறந்த ஜனநாயக நாடாக நார்வே விளங்குகின்றது.
- 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட இந்த குறியீட்டில் இந்தியா 32வது இடத்தைப் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்போது 10 இடங்கள் பின் தங்கி 42வது இடத்தைப் பெற்று "சற்று பலவீனமான ஜனநாயக நாடாக" (Flawed Democracy) வகைப்படுத்தப்பட்டு உள்ளது.

- இந்தியாவில் மத அடிப்படைவாத போக்கு அதிகரித்திருப்பதும், சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை அதிகரித்திருப்பதும், தனியாக சில அமைப்புகள் அதிகாரத்தை கையில் எடுத்து செயல்படுவதும், இந்தியா இப்பட்டியலில் பின் தங்கியதற்கான காரணங்களாக கூறப்பட்டுள்ளன.
- உலக நாடுகளில் நிலவும் ஜனநாயக போக்கைப் பொறுத்து, இக்குறியீட்டில் 4 வகைப்பிரிவின் கீழ் உலக நாடுகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- அந்நான்கு வகைப் பிரிவுகளாவன
    - முழுமையான ஜனநாயக நாடுகள்- Full Democracy
    - சற்று பலவீனமான ஜனநாயக நாடுகள்- Flawed Democracy
    - ஜனநாயகம் – சர்வதிகாரம் கலந்த நாடுகள்- Hybrid Regime
    - முழுமையான சர்வதிகார நாடுகள்- Authoritarian Regime
- சுதந்திர தேர்தல் நடைமுறை, அரசியல் கலாச்சாரம், அரசின் செயல்பாடுகள், சிவில் சமூக அமைப்புகளுக்கான சுதந்திரம், பன்முகத்தன்மையை பேணுதல் போன்ற ஐந்து அளவுருக்களின் அடிப்படையில் 165 உலக நாடுகள் மதிப்பிடப்பட்டுள்ளன.

## மத்திய பொது பட்ஜெட் - 2018

- 2018-19 ஆம் ஆண்டிற்கான மத்திய பொது பட்ஜெட்டை நான்காவது முறையாக மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.
- இது ஆளும் NDA அரசின் கடைசி முழு பட்ஜெட்டாகும்.
- GST-ன் அமலுக்குப் பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் வருடாந்திர பட்ஜெட் இதுவாகும்.

### *மத்திய பொது பட்ஜெட்*

- மத்திய பொது பட்ஜெட்டானது ஓர் வருடாந்திர நிதி நிலை அறிக்கை என இந்திய அரசியலமைப்பின் விதி 112-ல் விவரிக்கப்பட்டுள்ளது.
- 2016 வரை மத்திய பட்ஜெட்டானது பிப்ரவரி மாதத்தின் கடைசி அலுவலக தினத்தன்று தாக்கல் செய்யப்பட்டு வந்தது.
- ஆனால் 2017ஆம் ஆண்டு முதல் பொது பட்ஜெட் ஆனது பிப்ரவரி மாதத்தின் முதல் தேதி அன்று தாக்கல் செய்யப்பட்டு வருகின்றது.
- புதிய நிதி ஆண்டின் தொடக்கமான ஏப்ரல் மாதத்தின் தொடக்கம் முதலே பட்ஜெட் கூறுகளை செயல்படுத்துவதற்காக வேண்டி இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டது.
- சுதந்திர இந்தியாவின் முதல் பட்ஜெட்டானது 1947, நவம்பர் 26 அன்று நாட்டின் முதல் நிதி அமைச்சரான K.ஷண்முகம் செட்டியாரால் தாக்கல் செய்யப்பட்டது.
- 1970-71ல் பிரதமர் இந்திரா காந்தி பட்ஜெட் தாக்கல் செய்தார். நாட்டில் பட்ஜெட் தாக்கல் செய்த முதல் மற்றும் ஒரே பெண் இவரேயாவார்.
- இந்தியாவின் முன்னாள் பிரதமரும் நிதி அமைச்சருமான மொரார்ஜி தேசாய் இது வரை அதிகபட்சமாக 10 முறை நாடாளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்துள்ளார்.
- பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில், பொது பட்ஜெட்டின் ஒரு பகுதியாகவே ரயில்வே பட்ஜெட் இருந்தது.

- ஆனால், 1924ஆம் ஆண்டு ஆக்வோர்த் கமிட்டியின் (Acworth Committee) பரிந்துரையின் அடிப்படையில் முதல் முறையாக இரயில்வே பட்ஜெட் பொது பட்ஜெட்டிலிருந்து பிரிக்கப்பட்டது.
- 2017ஆம் ஆண்டு இரயில்வே பட்ஜெட்டானது பிபேக் தேப்ராய் குழுவின் (Bibek Debroy Committee) பரிந்துரையின் அடிப்படையில் பொது பட்ஜெட்டுடன் இணைக்கப்பட்டது.

## 7வது இந்திய ஆற்றல் மாநாடு

- இந்திய ஆற்றல் மாநாட்டின் (Indian Energy Congress) ஏழாவது பதிப்பு அண்மையில் புது தில்லியில் நடைபெற்றது.
- இந்த மாநாட்டின் கருத்துரு – "ஆற்றல் 4.0 – 2030 நோக்கிய ஆற்றல் மாற்றம்" (Energy 4.0 – Energy Transition towards 2030)
- இந்திய உலக ஆற்றல் குழு (World Energy Council India) மற்றும் மின், நிலக்கரி, புது மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு, வெளியுறவுத் துறை, அணுசக்தி துறை போன்ற மத்திய அமைச்சகங்களின் கூட்டிணைவால் இந்த வருடாந்திர மாநாடு நடத்தப்படுகின்றது.
- ஆற்றல் தொழிற்துறையில் உள்ள தேசிய மற்றும் சர்வதேச நிபுணர்கள் மற்றும் கொள்கை முடிவெடுப்பாளர்கள் தங்களுடைய அனுபவம், ஆற்றல் துறைசார் அறிவு, நிபுணத்துவம் போன்றவற்றை பகிர்ந்து கொள்வதற்கு தேவையான தனித்துவ மேடையை உருவாக்கித் தருவதே இந்த சர்வதேச ஆற்றல் மாநாட்டின் நோக்கமாகும்.

## அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதி – பதவி நீக்கம்

- உச்சநீதி மன்ற தலைமை நீதிபதியால் அமைக்கப்பட்ட நீதிபதிகள் அடங்கிய விசாரணைக் குழுவானது (In-house Panel) அலகாபாத் உயர்நீதி மன்ற நீதிபதி நாராயணன் சுக்லா மீதான குற்றச்சாட்டை ஆராய்ந்து, எதிர்மறை அறிக்கை ஒன்றை அளித்துள்ளதன் அடிப்படையில் நாராயணன் சுக்லாவை பதவி நீக்கம் (Impeachment) செய்யவதற்கு உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா குடியரசுத் தலைவருக்கு பரிந்துரை வழங்கியுள்ளார்.
- மாணவர் சேர்க்கைக்கு தடை விதிக்கப்பட்ட ஓர் லக்னோ தனியார் மருத்துவ கல்லூரிக்கு சேர்க்கைக்கான அனுமதி வழங்கிய வழக்கில் இவர் மீது குற்றச்சாட்டு தொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- 1968-ன் நீதிபதிகள் விசாரணைச் சட்டமானது (Judges Enquiry Act, 1968) நீதிபதிகளின் பதவி நீக்கம் தொடர்பான நடைமுறைகளை ஒழுங்குபடுத்துகின்றது.
- நிரூபிக்கப்பட்ட நடத்தைக் கேடு, நிரூபிக்கப்பட்ட திறமையின்மை (Proved misbehaviour and incapacity) ஆகிய இரு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நீதிபதிகள் பதவி நீக்கம் செய்யப்படுகின்றனர்.
- உச்சநீதி மன்ற மற்றும் உயர்நீதி மன்றங்களுடைய நீதிபதிகளின் பதவி நீக்கம் தொடர்பான பாராளுமன்றத்தின் விரிவான பதவி நீக்க நடைமுறைகளின் மேற்கொள்ளலுக்குப் பிறகே குடியரசுத் தலைவரால் பதவி நீக்க ஆணையை வழங்க இயலும்.

## சர்வதேச கலா மேளா திருவிழா

- முதல் சர்வதேச கலா மேளா திருவிழா (International Kala Mela) அண்மையில் புதுதில்லியில் நடத்தப்பட்டது.
- மத்திய கலாச்சார அமைச்சகத்தின் இந்திரா காந்தி தேசிய கலை மையத்துடன் (Indra Gandhi National Centre for Arts) இணைந்து லலித் கலா மேளா அகாடமியானது இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைந்துள்ளது.

### *திருவிழாவைப் பற்றி*

- கலைஞர்களுக்கும் (Artist) கலை வல்லுநர்களுக்கும் இடையே (Connoisseur) நேரடி தொடர்பை ஏற்படுத்துவதற்காகவும், லலித் கலா அகாடமியின் முக்கிய பணியான கலைகளைப் பற்றிய விழிப்புணர்வையையும், கலைகள் குறித்த அறிவூட்டலையும் மக்களிடையே மேற்கொள்வதற்காகவும் இத்திருவிழா நடத்தப்படுகிறது.
- பல்வேறு உள்நாட்டு மற்றும் சர்வதேச கலைஞர்கள் தங்களுடைய கலை வேலைப்பாடுகளை காட்சிப்படுத்த ஓர் மேடையை இத்திருவிழா வழங்குகின்றது.

### *லலித் கலா மேளா அகாடமி*

- லலித் கலா மேளா அகாடமி (அல்லது) கலைகளுக்கான தேசிய அகாடமியானது இந்தியாவின் கவின் கலைகளுக்கான (Fine Arts) தேசிய அகாடமியாகும்.
- உள்நாட்டு அளவிலும் வெளிநாட்டளவிலும் இந்தியாவின் கலைகளைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துவதற்காகவும், அவற்றை பரப்புவதற்காகவும், மேம்படுத்துவதற்காகவும் 1954 ஆம் ஆண்டு புது தில்லியில் ஓர் தன்னாட்சியுடைய நிறுவனமாக லலித் கலா அகாடமி அமைக்கப்பட்டது.

## CSIR தொழில்நுட்ப பரிமாற்றம்

- அறிவியல் மற்றும் தொழிலக ஆராய்ச்சி குழுவின் (Council for Scientific Industrial Research) ஆய்வுக் கூடங்களில் கண்டறியப்படும் தொழிற்நுட்பங்களை ஆய்வுக் கூடங்களிலிருந்து வெளிக் கொண்டு வந்து அவற்றை தொழிற்துறையின் நன்மைக்கு தொழிற்பயன்பாடுகளாக (Realization of Technology) மாற்றுவதற்கு, சிறு தொழிற்துறையுடன் (Small-Scale Industry) தொடர்பு கொள்ள மத்திய அறிவியல் மற்றும் தொழிற்நுட்ப அமைச்சகமானது CSIR-ல் ஓர் தொடர்புகொள் தொழிற்முறையை (Communicative Mechanism) அமைத்துள்ளது.
- சிறு தொழிற்சாலை துறையானது நாட்டில் வேளாண்மைக்கு அடுத்து அதிகளவில் வேலை வாய்ப்பினை வழங்கும் துறையாகும்.
- சிறு தொழிற்சாலைகள் துறைகளானது நாட்டின் பொருளாதாரத்தில் 40 சதவீதம் மொத்த தொழிற்துறை மதிப்புகளை (Gross Industrial Value) வழங்குகின்றது.

### *CSIR பற்றி*

- CSIR ஆனது தன்னாட்சியுடைய, நாட்டின் முன்னணி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (Research & Development) நிறுவனமாகும்.
- இது 1942ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- 1860ஆம் ஆண்டின் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (Societies Registration Act-1860) கீழ் அமைக்கப்பட்ட ஓர் தன்னாட்சியுடைய ஆராய்ச்சி நிறுவனமாகும்.

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் இது செயல்படுகின்றது.

## தெற்காசிய பிராந்தியத்தின் ஐந்தாவது பொது கொள்முதல் மாநாடு

- தெற்காசிய பிராந்தியத்தின் ஐந்தாவது பொது கொள்முதல் மாநாடு (South Asian Region Public Procurement Conference ) அண்மையில் புது டெல்லியில் நடைபெற்றது,
- மத்திய நிதி அமைச்சகத்தின் பொது கொள்முதல் பிரிவு (Public Procurement Division) மற்றும் அனைத்திந்திய மேலாண்மை சங்கம் மூலமாக இந்த கருத்தரங்கை இந்திய அரசு ஒருங்கிணைத்துள்ளது.
- இந்த மாநாட்டின் கருத்துரு -"பொது கொள்முதல் மற்றும் சேவை விநியோகிப்பு".
- பொது கொள்முதல் தொடர்பான அம்சங்களின் திறனான செயல்பாட்டிற்காக உலக வங்கி (World Bank), ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank), இஸ்லாமிய வளர்ச்சி வங்கி (Islamic Development Bank) ஆகியவையிடமிருந்து நிதியுதவி பெற்று செயல்படுத்தப்பட்டு வரும் தெற்காசிய பொது கொள்முதல் பிணையத்தின் [South Asia Region Public Procurement Network - SARPPN] கீழ் இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.
- 8 தெற்காசிய நாடுகளின் பொது கொள்முதல் துறையின் தலைமை அதிகாரிகள் மற்றும் முக்கிய பங்கெடுப்பாளர்கள் ஒருவரையொருவர் சந்திக்கவும், பொது கொள்முதலில் உள்ள சிறந்த நடைமுறைகள் மற்றும் புத்தாக்கங்களை தங்களிடையே பகிர்ந்துக் கொள்ளவும் ஒரு மேடையை ஏற்படுத்தித் தருவதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாகும்.

## குசும் திட்டம்

- சோலார் மின் உற்பத்தியை (Solar Farming) மேற்கொள்வதற்கு விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக கிசான் உர்ஜா சுரக்ஷா இவம் உத்தான் மஹாபியான் (Kisan Urja Suraksha evam Utthaan Mahaabhiyan-KUSUM) என்ற திட்டத்தை துவங்க உள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- பரவலாக்கப்பட்ட சோலார் மின் உற்பத்தி மூலம் ஐந்தாண்டுகளில் 28250 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதே இந்த திட்டத்தின் நோக்கமாகும் .
- நாடு முழுவதும் விவசாயிகளுடைய தரிசு நிலத்தில் 10000 மெகாவாட் சோலார் மின்உற்பத்தி கட்டமைப்புகளை நிறுவுவதும், வேளாண்மைக்கான பயன்பாட்டிற்காக 17.5 லட்சம் சோலார் பம்புகளை வழங்குவதும் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்
- விவசாயிகளுடைய தரிசு நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள சோலார் மின் கட்டமைப்பினால் உற்பத்தி செய்யப்படுகின்ற கூடுதல் மின்சாரத்தை, விவசாயிகள் அரசின் மின் வழங்கல் கட்டமைப்பிற்கு (Power Grid) விற்பனை செய்ய வாய்ப்பினை வழங்கி, அதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு சோலார் பம்புகளுக்காக 60 சதவீதம் மானியம் வழங்கப்படும். இது மத்திய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்து கொள்ளப்படும். 30 சதவீத தொகையானது வங்கிக் கடன் மூலமாக தரப்படும். மீதியுள்ள 10 சதவீதத்தை விவசாயிகள் அளிக்க வேண்டும்.

## முன்னணி சிந்தனைச் சாவடி – இந்தியா

- பென்சில்வேனியா பல்கலைக்கழகத்திலுள்ள லௌடர் கல்வி நிறுவனத்தின் சிந்தனைச் சாவடி மற்றும் குடிமைச் சங்கங்கள் திட்டத்தில் (Think Tank and Civil Societies Programme) இந்தியாவின் அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையமானது (Centre for Science and Environment) உலக அளவில் 16-வது முன்னணி சுற்றுச்சூழல் கொள்கைகளுக்கான சிந்தனைச் சாவடியாகவும், இந்தியாவின் முதல்நிலை சுற்றுச்சூழல் சிந்தனை சாவடியாகவும் தரவரிசைப்படுத்தப் பட்டுள்ளது.
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையமானது புது தில்லியில் அமைந்துள்ள ஓர் பொது நல ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை (Public Interest Research and Advocacy Organisation) நிறுவனமாகும்.
- சுற்றுச்சூழல் சார்ந்த 5 முக்கிய களங்களில் இது தன் செயல்பாடுகளை கொண்டுள்ளது.
    - சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வுக்கான மக்களை தொடர்பு கொள்ளுதல்
    - ஆராய்ச்சி மற்றும் ஆலோசனை
    - கல்வி மற்றும் பயிற்சி
    - அறிவு இணையவாயில் சேவை
    - மாசுபாடு கண்காணிப்பு
- அறிவியல் மற்றும் சுற்றுச்சூழலுக்கான மையமானது "Down to Earth" எனும் மாத இதழை வெளியிடுகின்றது.

## என்கோர் பயிற்சி

- என்கோர் எனும் கிழக்கு கடற்படைப் பிரிவின் செயல்பாட்டுத் தயார்தன்மை சோதனை பயிற்சி (Eastern Naval Command Operational Readiness Exercise-ENCORE) அண்மையில் முடிவடைந்துள்ளது.
- வங்காள விரிகுடா மற்றும் தென் இந்தியப் பெருங்கடலில் நடைபெற்ற இந்த ஒரு மாதகால செயல்பாட்டுத் தயார்தன்மை பயிற்சியில் இந்திய கடற்படையின் போர் கப்பல்களும், நீர்மூழ்கிகப்பல்களும் இந்திய விமானப்படையின் போர்விமானங்களும் பங்கு பெற்றன.
- கடற்படை மற்றும் விமானப்படையின் தாக்குதல் பிரிவுகளினுடைய போரிடும் திறனின் பல்வேறு அம்சங்களை சோதனை செய்வதற்காக இந்த பயிற்சி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## தனி மாநிலக் கொடி - கர்நாடகா

- மாநிலத்திற்கு தனிக் கொடியை ஏற்படுத்துவது தொடர்பாக கர்நாடகா மாநில அரசினால் அமைக்கப்பட்ட 9 பேர் குழுவானது மாநிலத்திற்கு தனிக் கொடியை ஏற்படுத்த பரிந்துரை வழங்கியுள்ளது.
- மேலும் மாநிலத்திற்கு தனிக் கொடியை வடிவமைப்பது மற்றும் அதற்கு சட்ட நிலைப்பாட்டை (Legal Standing) வழங்குவது போன்றவற்றின் மீதும் 9 பேர் குழுவானது தனது அறிக்கையை வழங்கியுள்ளது.
- மாநில சின்னமான கண்டபெருண்டாவை (Gandaberunda) மையத்தில் கொண்ட

மூவர்ணமுடைய கொடியை இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது.

❖ கண்டபெருண்டா என்பது இரு தலையுடைய புராணப் பறவையாகும்.




❖ மூவர்ணத்தில் முதலில் மஞ்சள் நிறமும், இடையில் வெள்ளை நிறமும், கீழ் புறத்தில் சிவப்பு நிறமும் அமைய வேண்டி இக்குழு பரிந்துரை வழங்கியுள்ளது.

❖ மாநில அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன், கர்நாடக மாநில அரசானது தனி மாநிலக் கொடி தொடர்பான முறையான வேண்டுகோளை மத்திய உள்துறை அமைச்சகத்திடம் வழங்க உள்ளது.

❖ ஏனெனில் தனி மாநிலக் கொடியை ஏற்படுத்துவதற்கு 2002 ஆம் ஆண்டின் தேசிய கொடிச் சட்டத்தில் (Flag Code 2002) மேற்கொள்ள வேண்டிய திருத்தத்திற்கு, உரிய திருத்த அதிகாரமானது மத்திய உள்துறை அமைச்சகத்தின் வரம்பின் கீழ் உள்ளது.

❖ இந்திய அரசியமைப்புச் சட்டத்தில் அதிகாரப்பூர்வ முறையில் மாநிலங்கள் தனி கொடியை ஏற்படுத்திக்கொள்வது தொடர்பாக எந்த கூறும் (No Provision) இல்லை.

❖ இருப்பினும் ஜம்மு காஷ்மீர் மட்டுமே தனக்கென தனிக் கொடி வைத்துள்ள இந்திய மாநிலமாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 370–ன் கீழ் சிறப்பு அந்தஸ்தை ஜம்மு காஷ்மீர் பெற்றுள்ளதால் இது சாத்தியமானது. ஜம்மு காஷ்மீர் 2015 ஆம் ஆண்டு தனக்கான தனிக்கொடியை அமலுக்குக் கொண்டுவந்தது.

## CriSidEX

❖ CRISIL (formerly Credit Rating Information Services of India Limited) மற்றும் இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியால் (SIDBI- Small Industries Development Bank of India) உருவாக்கப்பட்ட CriSidEX என்ற சிறு, குறு, தொழிற் நிறுவனங்களுக்கான (Micro and Small enterprises-MSEs) இந்தியாவின் முதல் தொழில் உணர்வுக் குறியீட்டை (Sentiment Index) மத்திய நிதி மற்றும் பெரு நிறுவன விவகாரத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

❖ 8 அளவுருக்களின் அடிப்படையில் பூஜ்ஜியம் மற்றும் 200 வரையிலான மதிப்பீட்டளவில் சிறு குறு நிறுவனங்களின் வணிக உணர்வுகளை (business sentiment) கணக்கிடும் ஓர் கூட்டுக் குறியீடே CriSidEX ஆகும்.

❖ இக்குறியீட்டின் வழியே பெறப்படும் மதிப்பீடானது சிறு, குறு தொழிற்சாலைகளின் வணிகத்தில் உள்ள முக்கிய சிக்கல்கள் மற்றும் உற்பத்தி சுழற்சியில் உள்ள மாற்றங்களை அடையாளப்படுத்த உதவும்.

❖ இது நிறுவனங்களின் சந்தை செயல்திறனை (market efficiencies) அதிகரிக்க உதவும்.

## ரயில் மேம்பாட்டு ஆணையம்

- மத்திய அரசானது ஒரு தலைவர் மற்றும் மூன்று உறுப்பினர்களை உள்ளடக்கிய ரயில் மேம்பாட்டு ஆணையம் (Rail Development Authority -RDA) ஒன்றை அமைக்க அனுமதியளித்துள்ளது.
- ரயில்துறை சார் சேவைகளின் விலை நிர்ணயிப்பு, வாடிக்கையாளர் நலன், வருவாய் உற்பத்தி, பிற போக்குவரத்து துறைகளுடன் போட்டியிடல் போன்றவற்றின் மீதான முடிவெடுப்புகளில் இந்திய ரயில்வே-விற்கு உதவுவதற்காக இந்த ஆணையம் அமைக்கப்பட உள்ளது.

## ஸ்டார்ட்-அப் தரவரிசை கட்டமைப்பு

- நாட்டிலுள்ள ஸ்டார்ட் -அப்களை தரவரிசைப்படுத்துவதற்கு மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்காக மூன்று புதிய தரவரிசைப்படுத்து கருவிகளை தொடங்கியுள்ளது.
- இப்புதிய மூன்று கருவிகளாவன
    1. மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஸ்டார்ட்-அப் தரவரிசை கட்டமைப்பு
    2. ஸ்டார்ட்-அப் இந்தியா கிட்
    3. இந்தியாவில் ஸ்டார்ட் - அப்களை மேம்படுத்துவதற்கான சிறந்த நடைமுறைகளின் தொகுப்பு.
- இந்த தரவரிசை கட்டமைப்பானது ஒரு வினையூக்கியாக செயல்பட்டு, ஸ்டார்ட் -அப் இந்தியா தொடக்கமானது இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும்.
- இந்த தரவரிசை கட்டமைப்பானது உள்ளூர் அளவில் வலுவான ஸ்டார்ட்-அப் சூழலமைப்பை (Startup Ecosystem) கட்டமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு முன்னெடுப்புகளின் தாக்கத்தை அளவிட உதவும்.

## மினமாட்டா உடன்படிக்கை – பின்னேற்பளிப்பு

- மத்திய அமைச்சரவையானது மெர்க்குரி மீதான மினமாட்டா உடன்படிக்கைக்கு (Minamatta Convention) பின்னேற்பளிப்பதற்கான (ratification) முன்மொழிவிற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்தியா மினமாட்டா ஒப்பந்தத்தில் 2014-ஆம் ஆண்டு, செப்டம்பர் 30-ஆம் தேதி கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தமானது இந்தியாவிற்கு புதிய மின்சக்தி நிலையங்களிலிருந்து வெளிவரும் மெர்க்குரி உமிழ்வுகளை கட்டுப்படுத்த மற்றும் குறைக்க 5 வருட கால அவகாசத்தை வழங்கியுள்ளது.
- அதேபோல் தற்போது பயன்பாட்டிலுள்ள ஆற்றல் நிலையங்களிலிருந்து வெளியேறும் மெர்க்குரி உமிழ்வுகளை கட்டுப்படுத்தி குறைத்திட 10 வருடம் கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

### *உடன்படிக்கையைப் பற்றி*


- மெர்க்குரி, மெர்க்குரி சேர்ம (Mercury compounds) பொருட்களின் வெளியேற்றம் மற்றும் மனித பயன்பாட்டினால் உண்டாகும் மெர்க்குரி உமிழ்வு (Anthropogenic emission)

போன்றவற்றிலிருந்து சுற்றுப்புறத்தையும், மனித ஆரோக்கியத்தையும் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கையே மினமாட்டா உடன்படிக்கையாகும்.

- மினமாட்டா உடன்படிக்கையானது 2013-ஆம் ஆண்டு, ஜனவரி 19-ஆம் தேதி செயல்பாட்டிற்கு வந்தது.
- மெர்க்குரி மாசு கலப்பினால் (Mercury contamination) 1950-ஆம் ஆண்டிலிருந்து மோசமான மெர்க்குரி நஞ்சேற்றத்தை (Mercury poisoning) சந்தித்து வரும் ஜப்பானிய நகரமான மினமாட்டா நகரின் பெயர் கொண்டு இந்த உடன்படிக்கைக்கு மினமாட்டா உடன்படிக்கை என பெயரிடப்பட்டுள்ளது.

## சர்வதேச அறிவுசார் சொத்துரிமை குறியீடு – 2018

- US Chamber of Commerce அமைப்பினால் வெளியிடப்படும் சர்வதேச அறிவுசார் சொத்துரிமை குறியீட்டின் 2018-ஆம் ஆண்டிற்கான பதிப்பில் 50 நாடுகளுள் இந்தியா 44-வது இடத்தைப் பிடித்துள்ளது.
- இவ்வாண்டிற்கான குறியீட்டில் அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து முறையே முதலிரண்டு இடங்களைப் பிடித்துள்ளன.
- ஜெர்மன், ஜப்பான், சுவீடன் ஆகியவை அடுத்த மூன்று இடங்களில் உள்ளன.
- அறிவுசார் சொத்துரிமை குறியீடானது 50 நாடுகளில் நிலவும் அறிவுசார் சொத்துரிமை சூழலை மதிப்பிடுவதோடு, நாடுகளின் சர்வதேச ஒப்பந்தங்கள், பதிப்புரிமை, காப்புரிமை, தொழிற் குறியீடுகள், வர்த்தக இரகசியங்கள் மற்றும் ஒப்பந்த அமலாக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகளை தரவரிசைப்படுத்துகின்றன.
- இக்குறியீட்டின் கடந்த ஆண்டிற்கான பதிப்பில் இந்தியா 43-வது இடத்தைப் பிடித்து இருந்தது.
- தரவரிசையில் பின்னடைந்திருப்பினும், அளவுருக்களின் மீதான மதிப்பீட்டின் அடிப்படையில் அனைத்து நாடுகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஆண்டைக் காட்டிலும் சற்று அதிகமான மதிப்பெண் சதவீதத்தை இந்தியா பெற்றுள்ளது.



## நிதி ஆயோக்கின் தேசிய ஆரோக்கிய குறியீடு – 2018

- “ஆரோக்கியமான மாநிலங்கள் முன்னேறும் இந்தியா (Healthy states, progressive India)” என்ற தலைப்பில் இந்தியாவின் சிந்தனைச் சாவடியான நிதி ஆயோக் ஓர் விரிவான ஆரோக்கிய குறியீட்டை வெளியிட்டுள்ளது.
- மத்திய ஆரோக்கியம் மற்றும் குடும்ப நலன் அமைச்சகத்தின் ஆலோசனையுடன், உலக வங்கியின் தொழிற்நுட்ப உதவியுடன் நிதி ஆயோக்கினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மேம்பாடு ஆகிய களங்களில் தேசத்தினுடைய செயல்பாட்டில் அமைந்துள்ள பல்வகைமை (heterogeneity) மற்றும் சிக்கற்பாடு (complexity) போன்றவற்றை அறிந்து கொள்வதற்கும், அதனை அளவிட ஓர் வருடாந்திர அமைப்பு ரீதியான மதிப்பீட்டு கருவியை (Systematic tool) ஏற்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஓர் முதல் முயற்சியே நிதி ஆயோக்கின் இந்த குறியீடாகும்.
- இந்த குறியீட்டின்படி ஆரோக்கியத்திற்கான ஒட்டுமொத்த செயல்பாட்டிற்கான வகைப்பிரிவில் (overall performance) பெரிய மாநிலங்களில் கேரளா முதலிடம் பெற்றுள்ளது. அதனைத் தொடர்ந்து பஞ்சாப் மற்றும் தமிழகம் உள்ளன.
- வருடாந்திர செயல்திறன் அதிகரிப்பை (Annual Incremental Performance) உடைய மாநிலங்களில் ஜார்க்கண்ட், ஜம்மு-காஷ்மீர் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகியவை முதல் மூன்று இடங்களில் உள்ளன.
- இதே வகைப்பிரிவில் சிறிய மாநிலங்களுள் மிசோரம் மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- மேலும் சிறிய மாநிலங்களுள் ஒட்டுமொத்த செயல்பாட்டிற்கான வகைப்பிரிவில் மணிப்பூர் முதலிடத்தில் உள்ளது.
- யூனியன் பிரதேசங்களுள் வருடாந்திர செயல்திறன் அதிகரிப்பு மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கிய செயல்பாடு ஆகிய இரண்டிலும் லட்சத்தீவு முதலிடத்தில் உள்ளது.



## ஐ.என்.எஸ் கருடா

- ஐஎன்எஸ் கருடா, ஒருங்கிணைந்த தானியங்கி வளிமண்டலவியல் வான் பயண முறையோடு (Integrated Automatic Aviation Meteorological Systems - IAAMS) தரம் உயர்த்தப்பட்டுள்ளது.
- ஐஎன்எஸ் கருடா என்பது கேரள மாநிலம் கொச்சியில் அமைந்துள்ள இந்திய கடற்படை விமான நிலையம் ஆகும்.
- IAAMS என்பது ஒன்பது கடற்படை விமான நிலையங்களின் வளிமண்டலவியல் கட்டமைப்பை மேம்படுத்திட திட்டமிடும் இந்திய கடற்படையின் உன்னதமான திட்டமாகும்.
- ஐஎன்எஸ் கருவியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள IAAMS திட்டமானது, தானியங்கி முறையிலான வானிலை கண்காணிப்பு முறையின் மூலமாக வான் பயணப் பாதுகாப்பிற்கு ஒரு பெரிய ஊக்கத்தை ஏற்படுத்தும்.
- பாதுகாப்பான பயண நடவடிக்கைகளை பாதிக்கும் அசாதாரண வானிலை மாற்றங்கள் பற்றி பணியில் உள்ள அதிகாரிகளுக்கு எச்சரிக்கையை கொடுக்கும் ஒரு சிறப்பு எச்சரிக்கை வசதியை இது கொண்டுள்ளது.
- உலக வளிமண்டலவியல் அமைப்பின் (World Meteorological Organization – WMO) தரவுகளின் அடிப்படையில் கடற்படை விமான நிலையத்தின் வழக்கமான வானிலை அறிக்கைகளை மற்ற நிலையங்களுக்கும், வான் போக்குவரத்துக் கட்டுப்பாடு (Air Traffic Control – ATC) கோபுரங்களுக்கும் மனிதத் தலையீடுகள் இன்றி தானியங்கி முறையில் தகவல் பரப்பும் முறையையும் இது கொண்டுள்ளது.

## ஹீனார் ஹாத்

- ஆறாவது 'ஹீனார் ஹாத்' கண்காட்சி புது தில்லியில் நடைபெற்றது.
- 'ஹீனார் ஹாத்' என்பது சிறுபான்மையின சமூகத்தைச் சார்ந்த கைவினைஞர்கள் தங்கள் படைப்புகளைக் காட்சிப்படுத்தவும், விற்பனை செய்யவும் அரசாங்கத்தால் துவங்கப்பட்ட தளமாகும்.
- சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகத்தால் நடத்தப்பட்ட இந்த 'ஹீனார் ஹாத்' கண்காட்சியின் கருத்துரு "கண்ணியத்துடன் கூடிய முன்னேற்றம்" ('Development with dignity') என்பதாகும்.
- இதற்கு முன்பாக ஐந்து முறை 'ஹீனார் ஹாத்' கண்காட்சி பல்வேறு இடங்களில் நடைபெற்றுள்ளது. அவையாவன,
    - 2016 மற்றும் 2017ஆம் ஆண்டில் தில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியின் போது நடத்தப்பட்டது.
    - 2017 - பாபா காரக் சிங் மார்க்கம், புது தில்லி
    - 2017 - புதுச்சேரி
    - 2017 - மும்பை

## குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை முன்னேற்ற சட்டத் திருத்தம்

- 2006ஆம் ஆண்டின் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் துறை முன்னேற்ற சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான பரிந்துரைகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இதற்கு முன்பாக குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் முதலீட்டு செலவின் அடிப்படையில் வகைப்படுத்தி வந்த அரசாங்கம் இனி தொழில் நிறுவனங்களின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் வகைப்படுத்த முக்கியமான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது.
- இச்சட்டத்தின் ஏழாவது பிரிவில் கொண்டு வரப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் வணிகம் செய்வதை எளிமையாக்கவும், குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வகைப்பாட்டு விதிமுறைகளை வளர்ச்சிக்கு ஏதுவாக மாற்றியமைக்கவும், புதிய சரக்கு மற்றும் சேவை வரிகளுக்கு ஏற்றவாறு மறைமுக வரி விதிப்புகளை சீரமைக்கவும் முற்படுகிறது.
- நாட்டில் வேளாண்மைத் துறைக்கு அடுத்ததாக அதிக அளவில் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் துறை MSME (Micro, Small and Medium Enterprises) எனப்படும் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை ஆகும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் MSME துறை 31% பங்களிக்கின்றது.

## பிரதம மந்திரி கூட்டு ஆராய்ச்சித் திட்டம் நிறைவேற்றப்படுதல்

- மத்திய அமைச்சரவை "பிரதம மந்திரி கூட்டு ஆராய்ச்சித் திட்டத்தை" நிறைவேற்றுவதற்கு அனுமதியளித்துள்ளது. இத்திட்டம் 2018-2019ம் நிதியாண்டில் ஏழு ஆண்டுகள் என்ற கால அளவில் 1650 கோடி மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.
- இந்தத் திட்டம் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி மூலம் 2018-19ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் உரையில் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் கீழ் Indian Institute of Science (IISc), Indian Institutes of Technology (IITs), National Institutes of Technology (NITs), Indian Institutes of Science Education and Research (IISERs) மற்றும் Indian Institutes of Information Technology (IIITs) போன்ற கல்லூரிகளிலிருந்து அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பாடத்தில் பி.டெக் அல்லது ஒருங்கிணைந்த எம்.டெக் அல்லது எம்.எஸ்சி போன்ற பட்டங்களில் சிறந்த மாணவர்களுக்கு அல்லது அப்படிப்புகளில் பயிலும் இறுதியாண்டு மாணவர்களுக்கு IIT மற்றும் IISCயில் பி.எச்.டி படிப்பிற்கான நேரடி சேர்க்கை அளிக்கப்படும்.
- இந்தத் திட்டம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் உள்நாட்டிலேயே ஆராய்ச்சி மேற்கொள்வதற்காக நாட்டிலுள்ள திறமைக் களஞ்சியத்தை தேர்ந்தெடுக்க உதவும்.




## இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையேயான இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு

- மத்திய அமைச்சரவை இந்தியா மற்றும் சீனாவிற்கு இடையேயான இரட்டை வரிவிதிப்பு தவிர்ப்பு முறையை (Double Taxation Avoidance Agreement - DTAA) திருத்தும் நெறிமுறையில் கையெழுத்திட்டு ஒப்புதலளிக்க அனுமதி தந்துள்ளது.
- இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு முறை
    - வருமானத்தின் மீதான வரிகளோடு தொடர்புடைய முறையில் இரட்டை வரி விதிப்பை தவிர்த்தலையும் நிதி ஏய்ப்பை தடுத்தலையும் நோக்கமாகக் கொண்டது.
    - சமீபத்திய சர்வதேச தரவுகளின் அடிப்படையில் இரட்டைவரி விதிப்பு தவிர்ப்பு முறையின் மீதான தகவல் பரிமாற்றத்தின் விதிகளை மேம்படுத்திட உதவுகிறது.
    - இந்தியா பங்கேற்ற அடிப்படை தேய்மான மற்றும் இலாப மாற்றுத் திட்டத்தின் (Base Erosion and Profit Shifting - BEPS) கீழ் குறைந்தபட்ச தரவுகளுக்கான செயல்திட்ட அறிக்கைகள் தொடர்பான ஒப்பந்தத்தை அமல்படுத்திடத் தேவையான மாற்றங்களை உள்சேர்த்திட இந்த நெறிமுறை உதவுகிறது.
- 2010ம் ஆண்டில் இந்தியா, பன்னாட்டு நிறுவனங்கள் வரிகளை தவிர்த்திடும் பொருட்டு குறைந்த வரிகொண்ட நாடுகளுக்கு இலாபத்தை இடம் மாற்றுவதை தடுக்கும் பொருட்டு செய்ய வேண்டிய நடவடிக்கைகளை அமல்படுத்திட ஒரு சர்வதேச பன்னாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த ஒப்பந்தம் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடு (The Organization for Economic Co-operation and Development - OECD) மற்றும் G20 ஆகிய அமைப்புகளின் அடிப்படை தேய்மானம் மற்றும் இலாப இடமாற்றம் திட்டத்தின் வெளிப்பாடு ஆகும்.

## சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பரிந்துரைகள்

- “அமைதி மற்றும் வளர்ச்சிக்கான வேலைவாய்ப்பு மற்றும் பாதுகாப்பான பணி“ தொடர்பாக சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (International Labor Organization - ILO) பரிந்துரைகள் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்ட புதிய திட்டம் ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க மத்திய அமைச்சரவை தனது ஒப்புதலை அளித்துள்ளது.
- ஜெனீவாவில் 2015 ஜீன் மாதம் நடைபெற்ற 106வது சர்வதேச தொழிலாளர் மாநாடு ஏற்றுக்கொண்ட பரிந்துரை ஒப்புதலுக்கு இந்தியா ஆதரவளித்தது.
- இந்தப் பரிந்துரை ஒப்புதலுக்கு ஆதரவளிப்பதும், இதனை பாராளுமன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிப்பதும் அந்நாடுகளின் மீது எவ்வித உடனடி கட்டாயத்தையும் ஏற்படுத்தாது.
- சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் பரிந்துரைகளானது தேசியக் கொள்கை முறைக்கு வழிகாட்டும் வண்ணம் செயல்படும் ஒரு கட்டாயமில்லாத கருவியாகும்.

***சர்வதேச தொழிலாளர் அமைப்பு***

- உலக நாடுகள் குழுவின் ஒரு நிறுவனமான சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labor Organization - ILO) 1919ல் சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு நிறுவப்பட்டது.
- இந்தியா சர்வதேச தொழிலாளர் அமைப்பின் அடித்தள (நிறுவன) உறுப்பினர் ஆகும். தற்சமயம் இது 187 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.
- சர்வதேச தொழிலாளர் அமைப்பு சர்வதேச தொழிலாளர் தரவுகள், சமூகப் பாதுகாப்பு மற்றும் அனைவருக்கும் வேலை வாய்ப்பிற்கான வாய்ப்புகள் போன்ற தொழிலாளர் விஷயங்களோடு ஈடுபாடு கொண்டுள்ள, ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு நிறுவனமாகும்.

## அதிகாரிகள் பரிமாற்ற ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுக்கிடையே குறிப்பிட்ட காலத்திற்கு பொருளாதார அலுவலக அதிகாரிகளைப் பரிமாறிக் கொள்ளும் புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு (Memoranda of Understanding - MoU) மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் ஆஸ்திரேலிய கருவூல அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் இந்திய மத்திய நிதியமைச்சகத்தின் கீழ் செயல்படும் பொருளாதார விவகாரங்களுக்கான துறையின் (Department of Economic Affairs) அலுவலகத்திலும்; இந்திய பொருளாதார சேவைப் (Indian Economic Service - IES) பணிப்பிரிவைச் சேர்ந்த ஒரு அதிகாரி (துணைச் செயலாளர்/இயக்குனர் பணிநிலை) ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆஸ்திரேலிய கருவூல அலுவலகத்திலும் மூன்று மாத காலத்திற்குப் பணியாற்றுவார்கள்.
- இத்திட்டமானது இரண்டு நாடுகளின் நடப்பு பொருளாதாரக் கொள்கைகளின் சிக்கல்களைப் புரிந்துக் கொள்ளவும், மேலும் பல நிலைகளில் இரு நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவும்.

## அபுதாபியில் முதல் இந்துக் கோயில்

- ஐக்கிய அரபு எமீரகத்தின் தலைநகரமான அபுதாபியில், கல்வாத்பா எனும் நகரில் முதல் பாரம்பரியமான இந்துக் கோவில் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் விழாவை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- மத்திய கிழக்கில் அமையவிருக்கும் முதல் பாரம்பரியமான இந்து கற்கோவில் இதுவே ஆகும். டெல்லியிலும் மற்ற இடங்களிலும் உள்ள அக்ஷர்தாம் கோவிலின் மாதிரியைப் போலவே இந்த கோவிலின் வடிவம் மற்றும் கட்டமைப்பு இருக்கும்.
- ஐக்கிய அரபு அரசாங்கம், இந்தக் கோவில் கட்டுவதற்கு தேவையான நிலத்தை 2015ல் பிரதமர் மோடியின் முதல் வளைகுடா பயணத்தின் போது ஏற்படுத்திக் கொடுத்தது.
- இந்தக் கோவில் 2020ம் ஆண்டுக்குள் கட்டி முடிக்கப்பட்டு அனைத்து மதப் பின்னணி உடைய மக்களுக்கும் உள்ளே செல்ல அனுமதி அளிக்கப்படும்.

## பணக்கார முதலமைச்சர்கள்

- இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் 31 முதலமைச்சர்களில், 35 சதவீதத்துக்கும் அதிகமானவர்கள் மீது குற்றவியல் வழக்குகள் இருப்பதாக ஜனநாயக சீர்திருத்த சங்கம் (Association for Democratic Reforms - ADR) தெரிவித்துள்ளது.
- ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு 177 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுடன் மிகவும் பணவசதி வாய்ந்த முதலமைச்சர் என்ற இடத்தைப் பெற்றுள்ளார். 129 கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களுடன் அருணாச்சலப் பிரதேச முதல்வர் பீமா காண்டு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.
- நாட்டில் பண வசதி குறைவாகப் பெற்ற முதலமைச்சர்களாக திரிபுரா முதலமைச்சர் மாணிக் சர்கார் (26 இலட்சம் ரூபாய்), மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி (30 இலட்சம் ரூபாய்) மற்றும் ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் மெஹ்பூபா முப்தி (55 இலட்சம் ரூபாய்) ஆகியோர் இடம் பிடித்துள்ளனர்.
- பகுப்பாய்வு செய்யப்பட்ட முதலமைச்சர்களுள் மூன்று பேர் (10 சதவீதம்) மட்டுமே பெண்களாவர்.
- வயது வாரியாக பகுக்கும் பொழுது பீமா காண்டு (35 வயது) மிகவும் இளைய வயது முதலமைச்சர் ஆவார். இவரைத் தொடர்ந்து தேவேந்திர பத்னாவிஸ் (44 வயது) மற்றும் யோகி ஆதித்யநாத் (45 வயது) ஆகியோர் இளம் வயது முதலமைச்சர்கள் ஆவர்.
- இந்த அறிக்கையானது 29 மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களைச் சார்ந்த முதலமைச்சர்களை கணக்கில் கொண்ட பகுப்பாய்வின் அடிப்படையிலானது.
- இந்த ஆய்வினை ஜனநாயக சீர்திருத்தத்திற்கான சங்கம் (Association for Democratic Reforms - ADR) மற்றும் தேசிய தேர்தல் கண்காணிப்பு (National Election Watch) ஆகிய அமைப்புகள் வெளியிட்டுள்ளன.

### *ஜனநாயக சீர்திருத்தத்திற்கான சங்கம்*

- ஜனநாயக சீர்திருத்தத்திற்கான சங்கம் என்பது தேர்தல் மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் குறித்து பணியாற்றும் கட்சி மற்றும் அரசு சார்பற்ற தன்னார்வ அமைப்பாகும்.
- 2002 முதல் தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு மற்றும் ஜனநாயக சீர்திருத்தத்திற்கான சங்கம் ஆகியவை இணைந்து நாடு முழுவதும் தேர்தல் கண்காணிப்புகளில் ஈடுபட்டு வருகின்றன.

- ஜனநாயக சீர்திருத்தத்திற்கான சங்கத்தின் முதல் தேர்தல் கண்காணிப்பு 2002 ஆம் ஆண்டின் குஜராத் சட்டமன்றத் தேர்தலின் பொழுது துவங்கியது.

## இந்தியாவின் முதல் ஆன்லைன் ரேடியோ நிலையம்

- உலக ரேடியோ தினமான பிப்ரவரி 13 அன்று "ரேடியோ உமாங்க்" எனும் இந்தியாவின் முதல் ஆன்லைன் ரேடியோ நிலையம் தொடங்கப்பட்டுள்ளது.
- அமைதி, மனித நேயம் மற்றும் நம்பிக்கை (Peace, humanity and hope) ஆகியவற்றை கருப்பொருளாகக் கொண்டு இந்த ஆன்லைன் ரேடியோ நிலையம் துவங்கப்பட்டுள்ளது.
- இணைய பண்பலை திருத்தம் (web streaming) அல்லது செயலி பதிவிறக்கம் மூலம் வானொலி கேட்பாளர்கள் இந்த ஆன்லைன் ரேடியோவை கேட்க (tune) முடியும்.
- 24 மணிநேரம் நிகழ்ச்சிகளுடைய இந்த ஆன்லைன் ரேடியோவிற்கு இந்தியாவின் இந்தி மொழி வழங்கும் பிராந்தியங்களிலும் உலகின் 60 க்கும் மேற்பட்ட நாடுகளிலும் வாடிக்கையாளர்கள் உள்ளனர்.

## இந்தியாவின் முதல் நெடுஞ்சாலை திறன் கையேடு

- சாலை விரிவாக்கம் தொடர்பாக சாலைப் பொறியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு வழிகாட்டுவதற்காக மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது இந்தியாவின் முதல் நெடுஞ்சாலைத் திறன் கையேட்டை (Highway capacity Manual - HCM) வெளியிட்டுள்ளது.
- இந்தக் கையேடானது Indo-HCM என்றழைக்கப்படுகின்றது.
- பல்வேறு வகைச் சாலைகளின் போக்குவரத்துத் தன்மை மீதான நாடு தழுவிய விரிவான ஆய்வின் அடிப்படையில் அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி கவுன்சில் CSIR (Council of Scientific and Industrial Research ) மற்றும் மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனத்தால் (CRRI-Central Road Research Institute) இந்த கையேடு தயாரிக்கப்பட்டுள்ளது.

## டுக்கும் துறைமுகம் – இந்தியாவிற்கு அனுமதி

- இரு நாடுகளுக்கிடையேயான இராணுவ ஒத்துழைப்பு மீதான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிற்சேர்க்கை ஒன்றில் (annexure) இந்தியாவும் ஓமனும் கையெழுத்திட்டுள்ளன.
- இராணுவ பயன்பாடு மற்றும் பண்டகப் போக்குவரத்திற்கு உதவுவதற்காக ஓமனின் முக்கிய துறைமுகமான டுக்கும் (Duqm port) துறைமுகத்தின் அணுகலை இந்தியா இதன் மூலம் உறுதி செய்து கொண்டுள்ளது.
- இது இந்தியப் பெருங்கடல் பகுதிகளில் தன் நிலைப்பாட்டை (அல்லது) சுவட்டை (Footprint) விரிவுபடுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தியாவின் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நகர்வாகும்.
- இது இந்தியப் பெருங்கடல் பகுதியில் அதிகரித்து வரும் சீனாவின் செயல்பாடுகள் மற்றும் செல்வாக்கை எதிர்ப்பதற்கான இந்தியாவின் கடல்சார் உத்திகளின் (Maritime Strategy) ஒரு பகுதியாகும்.
- டுக்கும் துறைமுகமானது ஈரானின் சாபஹார் மற்றும் பாகிஸ்தானின் குவாதார் துறைமுகத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது.

- பாகிஸ்தானின் குவாதார் துறைமுகமானது சீனா-பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தின் (China Pakistan Economic Corridor) ஒரு பகுதியாக பாகிஸ்தானில் சீனாவால் கட்டமைக்கப்பட்டு வருகின்றது.
- செசெல்ஸ் நாட்டில் இந்தியாவினால் மேம்படுத்தப்பட்டு வரும் அஸம்சன் தீவு (Assumption Island) மற்றும் மொரிஸியஸ் நாட்டின் அகாலேகா தீவுடன் (Agalega Island) இணைந்து டுக்கும் துறைமுகமும் இந்தியாவின் செயல்திறன் வாய்ந்த கடல்சார் பாதுகாப்பு வழித்தடத்தில் (proactive maritime security roadmap) அமைந்துள்ளது.
- மேலும் இத்துறைமுகமானது சிறப்பு பொருளாதார மண்டலம் ஒன்றையும் கொண்டுள்ளது. இதில் இந்திய நிறுவனங்களினால் 1.8 மில்லியன் டாலர் அளவிற்கு முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




## உலகின் வளமையான நகரங்கள்

- நியூ வோல்டு வெல்த் (New World Wealth) அமைப்பானது உலகின் பணக்கார நகரங்கள் (World Wealthiest cities) என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையில் இந்தியாவின் பொருளாதார முனையமான (Economic Hub) மும்பை உலகின் 12-வது பணக்கார நகரமாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- அதிகமான கோடீஸ்வரர்களை (Billionaire) கொண்ட நகரங்கள் பட்டியலில் மும்பை 10-வது இடத்தில் உள்ளது.
- 15 நகரங்களின் வளத்தை பட்டியலிட்டுள்ள இந்த அறிக்கைப்படி மொத்தம் 3 டிரில்லியன் வளத்தைக் கொண்டு நியூயார்க் முதலிடம் பிடித்துள்ளது.
- பட்டியலிடப்பட்டுள்ள 15 நகரங்களுள் கடந்த பத்தாண்டுகளில் பெற்ற செல்வங்களின் வளர்ச்சியின் அடிப்படையில் வேகமான வளர்ச்சியுடைய நகரங்களாக சான் பிரான்சிஸ்கோ, பெய்ஜிங், ஷாங்காய், மும்பை மற்றும் சிட்னி ஆகிய நகரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

## மேடை கலைகளுக்கான உலக ஒலிம்பிக்

- 8-வது மேடைக் கலைகளுக்கான உலக ஒலிம்பிக் (Global Theatre Olympics) புதுதில்லியில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- உலக மேடைக் கலைகளின் (theatrical arts) பிரம்மாண்ட காட்சித் தளமான இது இந்தியாவில் முதல் முறையாக நடத்தப்பட உள்ளது.

- மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்டும் தேசிய நாடகப்பள்ளி (National School of Drama) இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைக்க இருக்கின்றது.
- இந்த 8-வது மேடைக் கலைகளுக்கான உலக ஒலிம்பிக்கின் கருத்துரு – "நட்புறவிற்கான கொடி" (Flag of Friendship) .
- 30 நாடுகளைச் சேர்ந்த சுமார் 25,000 சர்வதேசக் கலைஞர்கள் இதில் பங்கேற்க உள்ளனர்.
- "ஒரே பாரதம் சிறந்த பாரதம்" (EK Bharat Shreshtha Bharat) என்பதை கருப்பொருளாக கொண்டு இந்தியா சார்பாக சுவாங்க் (Swang), ராஸ்லீலா (Rasleela), நவ்தன்கி (Nautanki), பந்த் பாதர் (Bhand Pather), ஜட்ரா (Jatra) போன்ற கலைகள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.
- மேடைக் கலைகளுக்கான உலக ஒலிம்பிக் நிகழ்ச்சியானது 1993 ஆம் ஆண்டு கிரீஸ் நாட்டின் டெல்பியில் (Delphi) தொடங்கப்பட்டது.
- மேடைக் கலை (theatrical art) எனும் ஊடகம் மூலம் வெவ்வேறு கலாச்சாரம், நம்பிக்கை ,சிந்தனையுடைய மக்களை ஒரு இடத்தில் கூட்டுவதும், எல்லைகளின் இடைவெளியை குறைத்து உறவுப்பாலம் அமைப்பதும் இதன் நோக்கங்களாகும்.

***தேசிய நாடகப் பள்ளி***

- தேசிய நாடகப் பள்ளி மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மேடை கலைப் பயிற்சிக்கான ஓர் தன்னாட்சி நிறுவனமாகும்.
- இது புதுதில்லியில் அமைந்துள்ளது.
- 1959 ஆம் ஆண்டு சங்கீத நாடக அகாடமி (Sangeet Natak Akdemi) ஆல் இது தோற்றுவிக்கப்பட்டது.

## போதைப் பொருட்களுக்கெதிரான திட்டம்

- போதைப் பொருட்கள் மற்றும் மனோநிலைப்பாட்டைப் பாதிக்கும் பொருட்களின் (Psychotropic Substances) சட்டவிரோத கடத்தலைத் தடுப்பதற்காக தேசிய போதைப் பொருட்களுக்கெதிரான தடுப்புத் திட்டத்தின் (Anti-Narcotics Scheme ) செயல்காலத்தை மேலும் 3 ஆண்டுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகம் நீட்டித்துள்ளது.
- இத்திட்டம் முதன் முறையாக 2004ஆம் ஆண்டு ஐந்தாண்டு காலத்திற்கு தொடங்கப்பட்டது.
- எல்லை தாண்டிய மற்றும் மாநிலங்களுக்கிடையேயான உள்நாட்டு போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கு பங்களித்து வரும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி புரிவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- போதை மற்றும் மனோநிலைப்பாட்டை பாதிக்கும் பொருட்களின் தேவை மற்றும் அளிப்பு (demand and supply) ஆகிய இரண்டையும் குறைப்பது இத்திட்டத்தின் கீழ் உள்ள முக்கிய உத்தியாகும்.

## ஆதார் மற்றும் உமாங் செயலி- சர்வதேச விருதுகள்

- அண்மையில் துபாயில் நடைபெற்று முடிந்த 2018-ஆம் ஆண்டின் 6-வது உலக அரசாங்க மாநாட்டில் (World Government Summit) இந்தியாவின் ஆதார் (Aadhaar) மற்றும் உமாங் செயலிக்கு (Umang App) சிறப்பு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.
- அணுகத்தகு அரசாங்க வகைப்பிரிவிற்கான சிறந்த மொபைல் அரசாங்க சேவை விருது (Best m-Government Service Award for Accessible Government Category) உமாங் செயலிக்கு

வழங்கப்பட்டுள்ளது.

- அரசின் சிறந்த வளரும் தொழில் நுட்பவிருது (Best Government Emerging Technologies Award) ஆதாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

## உலக நீடித்த வளர்ச்சிக்கான மாநாடு - 2018

- உலக நீடித்த வளர்ச்சிக்கான மாநாட்டின் (World Sustainable Development Summit) முதல் பதிப்பு இவ்வாண்டு புதுதில்லியில் நடத்தப்பட உள்ளது.
- உலக நீடித்த வளர்ச்சி மாநாடானது ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனத்தினால் (The Energy and Resources Institute-TERI) நடத்தப்படும் முக்கிய மன்றமாகும்.
- 2018-ஆம் ஆண்டிற்கான உலக நீடித்த வளர்ச்சி மாநாட்டின் கருத்துரு "நெகிழ்திறனுடைய கிரகத்திற்காக கூட்டிணைதல் " (Partnership for Resilient Planet).
- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்குத் தேவையான நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களைக் காட்சிப்படுத்துவதற்காக இந்த மாநாட்டில் "Greenovation" எனும் கண்காட்சி நடத்தப்பட உள்ளது.
- நீடித்த வளர்ச்சி, ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் சேவையாற்றி வரும் உலகத் தலைவர்கள் மற்றும் சிந்தனையாளர்களை ஒரு பொதுவான மேடையில் ஒருங்கிணைப்பதற்காக இந்த மாநாடு நடத்தப்படுகின்றது.
- இந்தியா மற்றும் உலகின் தெற்கத்திய நாடுகளின் நீடித்த வளர்ச்சிக்காக ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட முன்னணி சிந்தனைச் சாவடியே (think tank) ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனமாகும்.
- மாசு உண்டாக்காத பசுமை ஆற்றல் (Clean Energy), நீர் மேலாண்மை, மாசுபாடு மேலாண்மை, நீடித்த வேளாண்மை மற்றும் காலநிலை நெகிழ்வுத் திறன் (climate resilience) ஆகியவற்றை மேம்படுத்துவதே ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

## CO2 உட்செலுத்துதல் தொழில்நுட்பம்- கந்தார் எண்ணெய் வயல்

- மத்திய அரசுக்கு சொந்தமான எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனமான ONGC நிறுவனம் (ONGC - Oil and Natural Gas Corporation) குஜராத்தில் உள்ள கந்தார் எண்ணெய் வயலில் (Gandhar Oil Field) கார்பன்-டை-ஆக்ஸைடு உட்செலுத்தல் தொழிற்நுட்பத்தை (CO2 Injection technology) அறிமுகப்படுத்த உள்ளது.
- இதுவே ஆசியாவின் மிகப்பெரிய அளவிலான முதல் CO2 உட்செலுத்தல் திட்டமாகும்.
- மேம்படுத்தப்பட்ட எண்ணெய் மீட்டெடுப்பு திட்டத்தின்(EOR - Enhanced oil recovery programme) கீழ் கூடுதலாக 20 மில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெயை எடுப்பதற்காக (Barrels of Crude Oil) இத்திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

### *CO2 உட்செலுத்துதல் தொழில்நுட்பம்*

- பழைமையாகி வரும் எண்ணெய் வயல்களின் கச்சா எண்ணெய் உற்பத்தியை அதிகரிக்கக்கூடிய, உலக அளவில் நிரூபணம் செய்யப்பட்ட ஓர் அறிவியல் தொழில்நுட்பமே CO2 உட்செலுத்தல் தொழில்நுட்பமாகும்.
- மொத்த எண்ணெய் உற்பத்தி குறைந்து கொண்டே வரும் பழமையான எண்ணெய்

வயல்களில் கச்சா எண்ணெய் மீதங்களுடன் (Residual Oil) சேர்த்து கார்பன்-டை-ஆக்ஸைடு வாயு எண்ணெய் உறிஞ்சு குழாயின் வழியே உட்செலுத்தப்படும்.

- இவை பாறைத் துளைகளில் உள்ள எண்ணெயின் பாகியல் தன்மையைக் குறைப்பதால் எண்ணெய் பாறைத் துளைகளை விட்டு வெளியேறுவது எளிதாகும்.
- மேலும் CO2 வாயுவானது எண்ணெய்யை விரிவடையச் செய்வதால் பிரித்தெடுத்தலுக்காக அவை உற்பத்தி கிணறுகளை நோக்கி தள்ளப்படும். இதன் மூலம் எளிதாக எண்ணெய்யை உறிஞ்சி உற்பத்தியைப் பெருக்கலாம்.

## அடல் பூஜல் யோஜனா

- நிலத்தடி நீர்மட்டக் குறைவை கையாளுவதற்காக மத்திய அரசு அடல் பூஜல் யோஜனா (Atal Bhujal Yojana) எனும் திட்டத்தை வகுத்துள்ளது.
- மத்திய நீர்வள, நதி மேம்பாடு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகத்தின் (Ministry of Water Resources, River Development & Ganga Rejuvenation ) கீழ் ஏற்படுத்தப்பட உள்ள இத்திட்டமானது கேபினேட் குழுவின் இசைவிற்காக காத்திருப்பில் உள்ளது.
- நிலத்தடி நீர் மட்டத்தை மீள்நிரப்புதலும் (Recharge), வேளாண்சார் நடவடிக்கைகளுக்கு போதிய நீர் சேமிப்பு அமைப்புகளை உருவாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும்.
- புறப்பரப்பு நீர் நிலை அமைப்புகளை புத்துயிரூட்டுவதன் மூலம் குறிப்பாக ஊரகப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.
- இத்திட்டம் 5 ஆண்டு காலத்திற்கு செயல்படுத்தப்பட உள்ளது.
- அமைச்சரவையின் அனுமதி கிட்டியவுடன், நீர் பற்றாக்குறையுடைய மாநிலங்களான குஜராத், மஹாராஷ்டிரா, ஹரியானா, கர்நாடகா, உத்திரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இத்திட்டம் துவங்கப்பட உள்ளது.
- நிலத்தடி நீர் மீது மத்திய அரசிற்கு எத்தகு அதிகாரமும் கிடையாது.
- 1882ஆம் ஆண்டுச் சட்டமான இந்திய எளிமைப்பாட்டுச் சட்டம் மட்டுமே (Indian Easement Act - 1882) நிலத்தடி நீர் தொடர்பான இந்தியச் சட்டமாகும்.
- அடல் பூஜல் யோஜனா நிலத்தடி நீர் அளிப்பு சார் மேலாண்மை (Demand side management) மீது கவனம் செலுத்துவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது..
- குறைந்தபட்ச நீர் பயன்பாட்டின் மூலம் எப்படி நீர் தேவைகளை பூர்த்தி செய்கிறோம் என்பதே நீர் அளிப்பு சார் மேலாண்மை எனப்படும்.

## CPA – இந்தியா

- இந்திய மண்டலத்திற்கான காமன்வெல்த் பாராளுமன்ற சங்கத்தின் 6-வது கருத்தரங்கை (India region Commonwealth Parliamentary Association) பீகாரிலுள்ள பாட்னாவில் மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் தொடங்கி வைத்துள்ளார்.
  - ✓ வளர்ச்சிக்கான நிரல்களில் (Agenda) பாராளுமன்றத்தின் பங்கு.
  - ✓ சட்டஅவை மற்றும் நீதிமன்ற அமைப்பு - ஜனநாயகத்தின் இரு முக்கிய தூண்கள்.

எனும் இரு தலைப்புகளின் மீது இக்கருத்தரங்கில் விவாதம் மேற்கொள்ளப்பட உள்ளது.

- இந்திய மண்டல காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் கருத்தரங்கு இரண்டு

ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.

- இதன் 5 வது கருத்தரங்கு 2015-ல் கோவாவில் நடைபெற்றது.

***CPA பற்றி***

- நாடாளுமன்ற பேரரசுச் சங்கம் (Empire parliamentary Association) என்று இதற்கு முன் அழைக்கப்பட்டு வந்த காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கமானது (Commonwealth Parliamentary Association) மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் நல் ஆளுகை ஆகியவற்றிற்கு ஆதரவாக செயல்படும் அமைப்பாகும்.
- காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கமானது உலகில் ஒன்பது பிராந்தியங்களில் செயல்படுகின்றது.
    - ஆசியா
    - ஆப்பிரிக்கா
    - ஆஸ்திரேலியா
    - பிரிட்டன் ஆளுகைக்குட்பட்ட தீவுகள் மற்றும் மத்தியத் தரைக்கடல் பகுதி
    - அமெரிக்கா மற்றும் அட்லாண்டிக்
    - இந்தியா
    - கனடா
    - பசுபிக் மற்றும் தென்கிழக்கு ஆசியா
    - கரிபியன் தீவுகள்
- காமன்வெல்த் பாராளுமன்ற சங்கமானது இந்திய யூனியனின் நாடாளுமன்றத்தையும், 29 மாநில மற்றும் இரு யூனியன் பிரதேச சட்டமன்றங்களையும் உள்ளடக்கியதாகும்.

## வேளாண்மை 2022 - விவசாயிகளின் வருமானத்தை இரட்டித்தல்

- புதுதில்லியில் அமைந்துள்ள தேசிய வேளாண்மை அறிவியல் கழகத்தில் (National Agriculture Science Complex-NASC) “வேளாண்மை 2022 - விவசாயிகளின் வருமானத்தை இரட்டித்தல்” என்ற தலைப்பிலான தேசிய மாநாடு, வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகத்தால் நடத்தப்பட்டது.
- வேளாண்துறை சந்திக்கும் சவால்களைப் பற்றி விவாதிக்கவும், அரசின் இலக்கான விவசாயிகளின் வருமானத்தை 2020ல் இரட்டிப்படையச் செய்வதற்கான ஒரு திட்டத்தை வரையறுக்கவும் இந்த மாநாடு நடத்தப்பட்டது.
- இந்த மாநாடு விவசாயிகள் நலன் சார்ந்த ஏழு முக்கியமான கருத்துருக்களில் கவனம் செலுத்தும். இந்த மாநாட்டின் பரிந்துரைகள் அரசின் திட்டத்தோடு (e-NAM) இணைக்கப்படும்.
- ஏழு முக்கியக் கருத்துருக்கள்

1. பயிர் உற்பத்தியை அதிகரித்தல்
2. சாகுபடி செலவுகளைக் குறைத்தல்
3. அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைத்தல்
4. விவசாய சந்தைகள் சீர்திருத்தம்
5. உணவு பதப்படுத்துதல் வழியாக வேளாண் பொருட்களின் மதிப்பை அதிகரித்தல்.
6. பயிர் காப்பீடு மூலமாக ஆபத்தைக் குறைத்தல் (Risk Mitigation); பேரிடர் நிவாரணம்.
7. தோட்டக்கலைத் துறை, கால்நடை வளர்ப்பு போன்ற இணைந்த நடவடிக்கைகளை மேம்படுத்துவது.

## ஜதன் & தர்ஷக்

- அருங்காட்சியகப் பார்வையிடல் அனுபவத்தை புரட்சிகரப்படுத்துவதற்காக ஜதன் (Jatan) எனும் மென்பொருளை அதிநவீன கணினி மேம்பாட்டு மையம் (Centre for Development Advanced Computing = C - DAC) கண்டுபிடித்துள்ளது.
- இந்த நவீன தொழில்நுட்பமானது ஆன்லைன் அருங்காட்சியகப் பார்வையாளர்கள் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான தொல்பொருட்களை முப்பரிமாண முறையில் (3D) காண உதவும்.
- இந்த மென்பொருளானது அருங்காட்சியகங்களில் மெய்நிகர் சுற்றுலாவை (Virtual Tourism) மேற்கொள்ள வழிவகுக்கும்.
- மேலும் இம்மையமானது மாற்றுத் திறனாளிகளிடையே அருங்காட்சியகப் பார்வையிடல் அனுபவத்தை அதிகரிப்பதற்காக "தர்ஷக்" (Darshak) எனும் கைபேசி அடிப்படையிலான செயலி ஒன்றையும் கண்டுபிடித்துள்ளது.
- இந்த செயலியானது அருங்காட்சியக தொல்பொருட்களுக்கு அருகே வைக்கப்பட்டுள்ளது. "QR குறியீடுகளை" (Q.R Code) எளிமையாக ஸ்கேன் செய்வதன் மூலம் அத்தொல்பொருட்கள் பற்றிய தகவல்களை அருட்காட்சியகத்தின் உண்மை நேர பார்வையாளர்கள் (Real Time Visitors) அறியவும் உதவும்.
- தகவல் தொழில்நுட்பம், எலக்ட்ரானிக்ஸ் தொடர்பாக ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகளை மேற்கொள்ளும் மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் ஓர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனமே (Research & Development) C-DAC ஆகும்.

## வடன் கோ ஜனோ திட்டம்

- வடன் கோ ஜனோ (Watan Ko Jano) எனும் இளைஞர் பரிமாற்றுத் திட்டத்தை (Youth Exchange programme) மத்திய உள்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- நாட்டின் பிற பகுதிகளில் ஏற்பட்டு வரும் கலாச்சார, சமூக மற்றும் பொருளாதார மேம்பாடுகளைப் பற்றி ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் இளைஞர்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஒரு வெளி அனுபவத்தை தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்திற்காக ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள், சமூகத்தின் நலிவடைந்த பிரிவினைச் சேர்ந்த இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- மத்திய உள்துறை அமைச்சகம், மத்திய அரசின் காஷ்மீர் பிரிவு (Kashmir Cell) மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநில மறுவாழ்வு கவுன்சில் ஆகியவை இத்திட்டத்திற்கு நிதி வழங்குகின்றன.

## வடகிழக்கு துணிகர நிதி

- வளரும் ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கான விரும்பத்தகு மையமாக வடகிழக்கு இந்தியாவை உருவாக்கும் முயற்சியில் வடகிழக்கு துணிகர நிதியின் (Northeast Venture Fund) பயன்களை பெறுவதற்காக நாடு முழுவதும் உள்ள ஸ்டார்ட்-அப் நிறுவனங்களுக்கு

வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகம் (Ministry of Development of Northeast Region – DoNER) அழைப்பு விடுத்துள்ளது.

- ❖ வடகிழக்கு நிதி மேம்பாட்டுக் கழக நிறுவனத்தினால் (North Eastern Development Finance Corporation Ltd - NEDFi) இந்த நிதியம் ஏற்படுத்தப்பட்டது.
- ❖ வடகிழக்கு துணிகர நிதியமானது வடகிழக்கு பிராந்தியத்திற்கென ஏற்படுத்தப்பட்ட முதல் துணிகர மூலதன நிதியாகும்.
- ❖ வடகிழக்கு துணிகர நிதியானது வடகிழக்கு பிராந்தியத்தில் தொழில் முனைவுத் தன்மையை (Entrepreneurship) ஊக்குவிப்பதற்காகவும், முதல் தலைமுறை தொழில்முனைவோர்களுக்கு நிதியியல் ஆதரவை வழங்குவதற்காகவும் ஏற்படுத்தப்பட்டது.

## கருடசக்தி

- ❖ இந்தியா மற்றும் இந்தோனேசியாவிற்கு இடையேயான இராணுவ கூட்டுப் பயிற்சியான கருட சக்தியின் 6வது பதிப்பை இந்திய இராணுவத்தின் சிறப்பு பணிப் பிரிவும் (Special task force) இந்தோனேசிய இராணுவமும் இணைந்து இந்தோனேசியாவின் பாண்டுங்கில் தொடங்கியுள்ளன.
- ❖ கருடசக்தி என்பது இந்தியா மற்றும் இந்தோனேசியாவிற்கு இடையேயான இருதரப்பு ராணுவப் பயிற்சியாகும்.
- ❖ இந்த கூட்டு இராணுவப் பயிற்சியானது பிப்ரவரி மாதத்தில் 19ஆம் தேதி முதல் மார்ச் மாதத்தின் 4ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.
- ❖ பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் இரு நாட்டு இராணுவங்களும் தங்களது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதும், கடல்சார் பாதுகாப்பில் இரு நாட்டு இராணுவங்களின் இணைந்து செயலாற்றும் தன்மையை அதிகரிப்பதும், இந்த கருடசக்தி போர்ப்பயிற்சியின் முக்கிய நோக்கங்களாகும்.
- ❖ இருநாட்டு இராணுவங்களுக்கிடையேயான இராணுவ ரீதியிலான இராஜதந்திரத்தின் ஒரு பகுதியாக (Military Diplomacy) இந்தக் கூட்டுப் போர்ப்பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.

## அக்னி II ஏவுகணை சோதனை

- ❖ ஒடிஸாவின் கடற்கரையில் அப்துல்கலாம் வீலர் தீவில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பிலிருந்து உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நிலத்திலிருந்து நிலவழி இலக்கினை நோக்கி ஏவத்தக்க, (Surface to Surface) அணு ஆயுதத்தை சுமந்து செல்லக்கூடிய, இடைநிலை வரம்புடைய கண்டங்களுக்கிடையேயான (Intermediate Range Ballistic Missile – IRBM), முழு செயல்பாட்டு கட்டமைப்பில் உள்ள (Full operational Configuration) அக்னி II ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.
- ❖ இஸ்ரோவின் இராணுவப் பண்டக ஒத்துழைப்புடன் (logistic Support) இந்திய இராணுவத்தின் பாதுகாப்பு படைப் பிரிவால் (Strategic Forces Command-SFC) இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ❖ இது கடைசி ஒரு மாதத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள அக்னி ஏவுகணை வரிசைகளின் மூன்றாவது வெற்றிகர சோதனையாகும். இதற்கு முன் 5000 கிலோ மீட்டர் வரம்புடைய அக்னி-5 ஏவுகணையும், 700 கி.மீட்டர் வரம்புடைய அக்னி-I ஏவுகணையும் வெற்றிகரமாக

சோதனை செய்யப்பட்டன.

- ❖ இந்த ஏவுகணையை இரயில் மற்றும் நகரும் ஏவுகணை ஏவு அமைப்பு போன்றவற்றிலிருந்து ஏவ இயலும்.
- ❖ நவீன மற்றும் மிகத் துல்லிய வழிகாட்டு அமைப்புகள் பொருத்தப்பட்டுள்ள இந்த ஏவுகணைக்கு திட இராக்கெட் உந்துதல் அமைப்பின் மூலம் உந்துதல் அளிக்கப்படுகின்றது (Social rocket Propellant System).

## உலக தகவல் தொழில்நுட்ப காங்கிரஸ்-2018

- ❖ வீடியோ கான்பிரன்சிங் மூலம் ஹைதராபாத்தில் தகவல் தொழில் நுட்பம் மீதான உலக கருத்தரங்கை இந்தியப் பிரதமர் துவங்கி வைத்துள்ளார்.
- ❖ தெலுங்கானா மாநில அரசு, நாஸ்காம் அமைப்பு மற்றும் உலக தகவல் தொழில்நுட்ப சேவை கூட்டணி (World Information Technology Service Alliance – WITSA) ஆகிவற்றின் கூட்டிணைவுடன் இந்தியா முதல் முறையாக இந்த கருத்தரங்கை நடத்தியுள்ளது.
- ❖ இது ஆசியாவில் இரண்டாவது முறையாக நடத்தப்பட்டுள்ளது. இதற்கு முன் 2008-ல் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் இது நடத்தப்பட்டது.
- ❖ இந்த கருத்தரங்கின் கருப்பொருள்- "எதிர்கால நிறுவனங்கள்" (Future Enterprises).
- ❖ குடியுரிமை பெற்றுள்ள உலகின் முதல் மனித ரோபாவான சவூதி அரேபியாவைச் சேர்ந்த சோபியா ரோபோ இக்கருத்தரங்கில் பங்கேற்றுள்ளது.

### *உலக தகவல் தொழில்நுட்ப காங்கிரஸ்*

- ❖ தகவல் தொழிற்நுட்பம் மீதான உலகின் மிகப்பெரிய கருத்தரங்கான இது இரு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.
- ❖ இதற்கு முன் இக்கருத்தரங்கு "டிஜிட்டல் உலகம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் 2014 ஆண்டு மெக்சிகோவில் நடத்தப்பட்டது. பின் 2016ஆம் ஆண்டிற்கான மாநாடு பிரேசிலின் பிரேசிலியாவில் நடத்தப்பட்டது.


## MiG-21 போர் விமானத்தைத் தனியாக இயக்கிய முதல் பெண் விமானி

- ❖ அவனி சதுர்வேதி எனும் பெண் விமானி இந்திய விமானப் படைக்குச் (Indian Airforce - IAF) சொந்தமான "மிக்-21" பைசர் ரக போர் விமானத்தை தனியாக இயக்கிய முதன் பெண் விமானி என்ற சாதனையைப் படைத்துள்ளார்.
- ❖ இரஷ்யாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட (Russia origin) இந்தப் போர் விமானத்தை ஜாம்நகர் விமான தளத்திலிருந்து இவர் இயக்கினார்.
- ❖ இந்தப் பயணம் அரை மணி நேரம் நீடித்தது.
- ❖ முதன் முதலாக பெண் விமானி தனியாக இயக்கியதன் மூலமாக, போர் விமானிகளின் பயிற்சியில் இது ஒரு மைல்கல் சாதனையாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் பெண் மேம்பாட்டிற்கு IAF அளிக்கும் அர்ப்பணிப்பு உணர்வு வெளிப்படுகிறது.
- ❖ இந்திய விமானப் படையானது சோதனை அடிப்படையில் (experimental basis) பெண் விமானிகளைப் போர் விமானங்களில் ஈடுபடுத்த 5 ஆண்டுகால அளவிற்கு ஒப்புதல் அளித்ததன் வாயிலாக, ஜூன் 2016 அன்று அவனி சதுர்வேதி, பாவனா காந்த், மோகனா சிங் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- பாகிஸ்தான் 26 பெண் போர் விமானிகளைக் கொண்டுள்ளது. பாகிஸ்தான் விமானப்படை 2006லிருந்து பெண்களை போர் விமானங்களில் ஈடுபடுத்தி வருகிறது.

## ஊழல் நிறைந்த நாடுகள் பட்டியல்

- சர்வதேச வெளிப்படைத் தன்மைக்கான அமைப்பால் வெளியிடப்படும் (Transparency International) 2017ஆம் ஆண்டிற்கான ஊழல் குறித்த பட்டியலில் இந்தியா 81-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.
- ஆசிய-பசுபிக் பகுதியில் பத்திரிக்கை சுதந்திரம் வழங்காத மோசமான நாடுகளில் இந்தியாவும் இருப்பதாக இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.




- 2016ஆம் ஆண்டு 176 நாடுகளில் இந்தியா 79வது இடத்தில் இருந்தது.
- 2017ஆம் ஆண்டிற்கான இந்தப் பட்டியல் 180 நாடுகளில் அவற்றின் பொதுத்துறையில் உள்ள ஊழலின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.
- இந்த பட்டியல் 0 முதல் 100 என்ற அளவுகளைக் கொண்டது.
  - 0 - அதிகளவு ஊழல்
  - 100 - ஊழலற்ற நிலை
- 2017 பட்டியலில், இந்தியா 40 புள்ளிகள் பெற்றுள்ளது. 2015ல் இந்தியா 38 புள்ளிகள் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.
- நியூஸிலாந்து 89 புள்ளிகளுடன் முதலிடத்தையும், டென்மார்க் 88 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும் பெற்றுள்ளன.
- மூன்றாவது இடத்தை பின்லாந்து, நார்வே, சுவிட்சர்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் 86 புள்ளிகளுடன் பிடித்துள்ளன.

- சோமாலியா 9 புள்ளிகளுடன் 180வது இடத்தைப் பிடித்துள்ளது.
- தெற்காசிய நாடுகளைப் பொறுத்தமட்டில், பூடான் 67 புள்ளிகளுடன் 26வது இடத்திலுள்ளது.

## வஜ்ரா பணி ஓய்வு

- ஒடிசாவின் பாரதீப் துறைமுகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 30 ஆண்டுகளாக கடலோரப் பாதுகாப்புப் படையில் பணியாற்றி வந்த வஜ்ரா பாதுகாப்புக் கப்பல் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளது.
- இந்தக் கப்பல் ஒடிசா மற்றும் மேற்கு வங்க கடலோரப் பகுதிகளில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.
- கடவுள் இந்திரனின் ஆயுதமான “வஜ்ரா” இதற்கு பெயராக சூட்டப்பட்டுள்ளது.
- இது மசாகான் கட்டுமான நிறுவனத்தால் கட்டப்பட்டு 1988-ல் கடலோரக் காவல் படையில் சேர்க்கப்பட்டது.
- ஏப்ரல் 11, 2013-ல் பாரதீப் கடலோரக் காவல் படையில் இணைக்கப்பட்டது.

## தனுஷ் ஏவுகணை சோதனை

- வங்கக் கடலில் ஒடிஸா கடற்கரையில் நிறுத்தப்பட்டிருந்த இந்திய கடற்படை கப்பலிலிருந்து, அணு ஆயுதங்களை சுமந்து செல்லக் கூடிய, 350 கி.மீட்டர் இலக்கு வரம்புடைய கண்டங்களுக்கிடையேயான தனுஷ் ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.
- இந்தியாவின் அனைத்து அணு ஆயுதங்கள் மற்றும் அவற்றோடு தொடர்புடைய விநியோகிப்பு அமைப்புகளை கட்டுப்படுத்துகின்ற இந்திய கடற்படையின் பாதுகாப்பு படைப்பிரிவு (Strategic Force Command -SFC) இந்த சோதனையை நடத்தியுள்ளது.
- தனுஷ் ஏவுகணையானது பிரித்வி-III ஏவுகணை எனவும் அழைக்கப்படுகின்றது.
- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட குறு தூர, கண்டங்களுக்கிடையேயான (SRBM-Short Range Ballistic Missile) பிரித்வி-II ஏவுகணையின் கடற்படைக்கான மாறுபாட்டு வடிவமைப்பே (Naval Variant) தனுஷ் ஏவுகணையாகும் .
- வழக்கமான ஆயுதங்கள் (Conventional weapons) மற்றும் அணு ஆயுதங்களை சுமந்து செல்லக்கூடிய தனுஷ் ஏவுகணையானது ஓர் குறு தூர, கண்டங்களுக்கிடையேயான ஏவுகணையாகும்.
- ஒருங்கிணைந்த வழிகாட்டு ஏவுகணை தயாரிப்புத் திட்டத்தின் (Integrated Guided Missile Development Programme -IGMDP) ஒரு பகுதியாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தினால் (DRDO – Defence Research and Development Organisation) தயாரிக்கப்பட்டு வரும் 5 ஏவுகணைகளுள் தனுஷ் ஏவுகணையும் ஒன்றாகும்.
- IGMDP கீழ் தயாரிக்கப்பட்டுள்ள பிற ஏவுகணை வரிசைகளாவன.
    - அக்னி ஏவுகணை வரிசை
    - திரிசூல் ஏவுகணை வரிசை
    - ஆகாஷ் ஏவுகணை வரிசை
    - நாக் (Nag) ஏவுகணை வரிசை

## பல்கலைக்கழக மானியக் குழு - நிபுணர் குழு

- உலகின் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களாக இந்தியாவின் பல்கலைக் கழகங்களை உருவாக்க, முன்னாள் இந்திய தலைமைத் தேர்தல் ஆணையரான N.கோபாலசுவாமி தலைமையில் அதிகாரம் வாய்ந்த நான்கு பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்று பல்கலைக்கழக மானியக்குழுவால் அமைக்கப்பட்டுள்ளது.
- 20 புகழ்வாய்ந்த இந்தியப் பல்கலைக்கழகங்களை (Institutions of Eminence -IoE) பட்டியலிடுவதற்கு, பல்கலைக்கழகங்களின் விண்ணப்ப படிவங்களை மதிப்பீடு செய்ய இந்த நான்கு பேர் கொண்ட நிபுணர் குழு பல்கலைக் கழக மானியக்குழுவால் அமைக்கப்பட்டுள்ளது.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 20 கல்வி நிறுவனங்களை மத்திய அரசு நடப்பாண்டின் ஏப்ரல் மாதத்தில் அறிவிக்க உள்ளது.
- இக்குழு மத்திய அரசிடம் இருந்து ஒப்புதல் பெற்று இரண்டு அரசாங்க ஒழுங்குமுறையின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. அவையாவன,
    - UGC (பல்கலைக் கழகங்களாக கருதப்படும் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள்) ஒழுங்குமுறைகள் விதிகள், 2017 [UGC (Institutions of Eminence Deemed to be Universities) Regulation, 2017]
    - UGC (தலை சிறந்த கல்வி நிறுவனங்களாக அறிவிக்கப்படும் அரசு கல்வி நிறுவனங்கள்) ஒழுங்குமுறைகள் ,2017 [UGC (Declaration of Government Educational Institutions as Institutions of Eminence) Guidelines, 2017]
- புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களாக அறிவிக்கப்படும் நிறுவனங்கள் (Institutions of Eminence - IoE)
    - வழக்கமான அரசு ஒழுங்குமுறை கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு உலகப் புகழ்பெற்ற கல்வி நிறுவனமாக மாறுவதற்கு தனக்கான பாதையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உடையவை.
    - 30 சதவீதம் வெளிநாட்டு மாணவர்களை மாணவர் சேர்க்கைக்கு பதிவு செய்து கொள்ளும் சுதந்திரம் உடையவை..

## இணைய பயன்பாட்டுத் தாக்குதல்கள் - இந்தியா

- அண்மையில் வெளியிடப்பட்ட "அகாமாய் இணையப் பாதுகாப்பு நிலை Q4 2017"அறிக்கைப்படி (Akamai State of the Internet Security Q4 2017), இணைய பயன்பாட்டுத் தாக்குதல்கள் (Web Application Attacks- WAA) அதிகம் நடைபெற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா ஏழாவது நாடாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்த அறிக்கைப்படி 2017ஆம் ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற 53,000 சைபர் தாக்குதல்களில் சுமார் 40 சதவீத தாக்குதல்கள் இந்தியாவின் நிதிச் சேவை துறையில் நடைபெற்றுள்ளது.
- இந்த அறிக்கையானது இந்தியாவில் வேகமாக வளரும் துறையான வங்கி, நிதிச் சேவை மற்றும் காப்பீட்டுத் துறையை (Banking, Financial Service and Insurance) மையப்படுத்தி ரேன்சம்வேர் தாக்குதல், மென்பொருள் வைரஸ் தாக்குதல்கள், இணையவழி தகவல் திருடல்கள் (Phishing), இணையதள முடக்கம் போன்ற இணைய தாக்குதல்கள்

நடத்தப்படுவதாகக் கூறியுள்ளது.


- அமெரிக்காவை தலைமையிடமாகக் கொண்ட கணிமை பாதுகாப்பு தீர்வை வழங்குநர் (cloud security solutions provider) நிறுவனமான அகாமாய் உலகின் மிகப்பெரிய மற்றும் மிகவும் நம்பகத்தகுந்த கணிமை வழங்குநர் மேடையாகும்.
- அலை வரிசை இணைப்பு மற்றும் கணிமை பாதுகாப்பு போன்றவற்றின் மீது காலாண்டுக்கு ஒரு முறை அகாமாய் நிறுவனத்தால் இந்த அறிக்கை வெளியிடப்படுகின்றது.
- இணைய தாக்குதலின் தோற்றம், அவற்றின் உத்திகள், வகைகள், இலக்குகள், அவற்றின் தாக்குதல்கள், அவற்றின் போக்குகள் போன்றவற்றை இந்த அறிக்கை விளக்குகின்றது.


## யுனிசெப் அறிக்கை - இந்தியா

- அண்மையில் வெளியிடப்பட்டுள்ள புதிய யுனிசெப் அறிக்கைப்படி, இந்தியாவில் பச்சிளங்குழந்தைகள் இறப்பு வீதம் (Neonatal Mortality rate) 1000 உயிர் பிறப்புகளுக்கு 25.4 இறப்புகள் (25.4 deaths per 1,000 live births) என்ற அளவில் உள்ளது.
- 1000 உயிர் பிறப்புகளுக்கு எத்தனை குழந்தைகள் பிறந்த 28 நாட்களுக்குள் இறக்கின்றன என்பதை அளவிடும் முறையே பச்சிளங்குழந்தைகள் இறப்பு வீதம் ஆகும்.
- உலக அளவில் 2.6 மில்லியன் குழந்தைகள் பிறந்த 28 நாட்களுக்குள் இறந்துள்ளன.
- இந்தியாவில் 2016-ல் 6 இலட்சம் குழந்தைகள் பிறந்த 28 நாட்களுக்குள் இறந்துள்ளன.
- இதனால் குறைவான மத்திய தர வருமானமுடைய (lower middle-income countries) 52 நாடுகளுள் இந்தியா 12வது நாடாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்தியாவின் அண்டைநாடுகளான வங்கதேசம் 54-வது இடத்திலும், நேபாளம் 50-வது இடத்திலும், இலங்கை 127 ஆவது இடத்திலும் உள்ளன.
- வங்கதேசம், நேபாளம், ருவாண்டா போன்ற வறிய நாடுகளைக் காட்டிலும் இந்தியா பின் தங்கிய தரவரிசையைப் பெற்றுள்ளது.
- மேலும் ஆண் குழந்தைகளைக் காட்டிலும் பெண் குழந்தைகளுள் அதிகம் இறப்பு வீதத்தை கொண்ட உலகின் ஒரே வளரும் முக்கிய நாடாக இந்தியா பட்டியலிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் கோவா மற்றும் கேரளாவில் 1000 உயிர் பிறப்புகளுக்கு 10 இறப்புகள் என்ற அளவில் பச்சிளங்குழந்தை இறப்பு வீதம் உள்ளது.
- இதுவே பீகார் மற்றும் உத்தரகாண்டில் அதிகபட்சமாக 1000 உயிர் பிறப்புகளுக்கு 44 இறப்புகள் என்ற அளவில் உள்ளது.
- மேலும் 2030 ஆண்டு எட்ட வேண்டி நிர்ணயிக்கப்பட்ட நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளில் ஆரோக்கியத்திற்கான இலக்கின்படி இந்தியா அடைய நினைத்த 1000 உயிர் பிறப்புகளுக்கு வெறும் 12 இறப்புகள் என்ற இலக்கை எட்டும் நிலையில், அதற்கான வழித் தடத்தில் இந்தியா தற்போது இல்லை எனவும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- அதிக வருவாய் உடைய நாடுகளைக் காட்டிலும் குறைந்த வருவாயுடைய நாடுகளுள் சராசரி பச்சிளங்குழந்தைகள் இறப்பு வீதம் 9 மடங்கு அதிகமாக உள்ளது.
- குறைந்த வருமானமுடைய நாடுகளில் பச்சிளங்குழந்தைகள் இறப்பு வீதம் 1000 உயிர் பிறப்புகளுக்கு 27 இறப்புகள் என்ற அளவில் உள்ளது.

### *யுனிசெப் பற்றி*

- ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகள் அவசரநிதியமானது (United Nations International Children Emergency Fund) ஐ.நா.வின் சிறப்பு திட்ட அமைப்பாகும்.
- இதன் தலைமையகம் நியூயார்க்கில் அமைந்துள்ளது.
- இது ஐ.நா. மேம்பாட்டு குழுவின் (UNDG - United Nations Development Group) உறுப்பினராகும்.
- இரண்டாம் உலகப் போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள குழந்தைகளுக்கு உணவு மற்றும் மருத்துவ ஆரோக்கிய சேவைகளை அளிப்பதற்காக 1946ஆம் ஆண்டு ஐ.நா. பொது அவையால் இந்நிதியம் அமைக்கப்பட்டது.
- குழந்தைகளின் பொது நல்வாழ்வு, ஊட்டச்சத்து, ஆரோக்கியம், கல்வி போன்றவற்றை அதிகரிப்பதற்காக உலக நாடுகளின் தேசிய அளவிலான முயற்சிகளுக்கு உதவி புரிவதற்காக இந்நிதியம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.




## சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி – இந்தியா

- சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணியின் (International Solar Alliance - ISA) முதல் மாநாட்டை மார்ச் 11 அன்று புது தில்லியில் இந்தியா நடத்த உள்ளது.
- மாநாட்டின்போது சூரியசக்தி பயன்பாடு தொடர்பாக 121 திட்டங்கள் இரு கட்டங்களாக தொடங்கப்பட உள்ளன.
- மார்ச் 11 அன்று 50 திட்டங்களும் ஏப்ரல் 20 அன்று 11 திட்டங்களும் தொடங்கப்பட உள்ளன.
- மேலும் மாநாட்டின் போது சோலார் மேற்கூரை பயன்பாடு (Solar Rooftop) மற்றும் சோலார் மின்- இயக்கம் மற்றும் சேகரிப்பு (Solar E-Mobility and Storage) போன்றவற்றைப் பெருக்குவது தொடர்பாக இரு புதிய திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன.

### *ISA*

- 2015 நவம்பரில் பாரிஸில் நடைபெற்ற COP21 பருவநிலை மாநாட்டில் பிரஞ்சு அதிபருடன் இணைந்து இந்தியாவால் இக்கூட்டணி ஏற்படுத்தப்பட்டது.
- சர்வதேச சூரிய ஆற்றல் கூட்டணி ஆனது 121 நாடுகளின் கூட்டணி ஆகும். இக்கூட்டணியிலுள்ள நாடுகள் சூரிய ஆற்றல் வளம் நிறைந்தவை. இவை கடக ரேகை

மற்றும் அட்சரேகை ஆகியவற்றினுக்கிடையே முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அமைந்தவை.

- புதை படிமங்கள் அடிப்படையிலான எரிபொருள்கள் மீதான சார்பை குறைத்து, திறன்மிகு வகையில் சூரிய ஆற்றலை பயன்படுத்துவதற்கு ஒன்றிணைந்து செயல்படுவதே இதன் முதன்மை நோக்கமாகும்.
- இடைக்கால செயலகத்தோடு சேர்த்து இதன் தலைமையகம் இந்தியாவின் குர்கானில் உள்ளது.
- குறைந்தபட்சம் 15 நாடுகள் இதனை ஏற்றுக் கொண்டால் தான் இது செயல்முறைக்கு வரும்.
- மேலும், இக்கூட்டணியில் 2030-ல் சூரிய ஆற்றல் திட்டங்களுக்கு நிதி அளிக்க 1 டிரில்லியன் நிதியை திரட்டவும் முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ISA ஆனது அவை, கவுன்சில் மற்றும் செயலகம் என மூன்று நிறுவனக் கட்டமைப்பை கொண்டுள்ளது.

## பால் ஆதார்

- 5 வயதுக்கு குறைவான குழந்தைகளுக்கு "பால் ஆதார்" (Baal Aadhar) எனும் பெயரில் நீல நிற ஆதார் அடையாள அட்டையை இந்திய தனித்துவ அடையாள ஆணையம் (Unique Identification Authority of India - UIDAI) அறிமுகப்படுத்தியுள்ளது.
- இது குழந்தையின் பெற்றோருள் ஒருவரினுடைய ஆதார் அட்டையுடன் இணைக்கப்படும். இதற்கு குழந்தையின் எத்தகு பயோமெட்ரிக் அடையாளத்தையும் வழங்கத் தேவையில்லை.
- குழந்தை 5 வயதை எட்டும்போது குழந்தையினுடைய பயோமெட்ரிக் தகவல்களை சமர்ப்பித்து பின் வழக்கமான ஆதார் அட்டையைப் பெறலாம்.
- இந்த நடைமுறையை 7 ஆண்டுகளுக்குள் மேற்கொள்ளத் தவறும் வேளையில் குழந்தையின் ஆதார் அட்டை ரத்து செய்யப்படும்.

## மிலன் - 2018

- 16 நாடுகள் பங்குபெறும் 'மிலன்' எனும் பன்னாட்டு கூட்டுப்போர் பயிற்சியை இந்திய கடற்படை, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளில் அமைந்துள்ள போர்ட் பிளேயரில் மார்ச் 6 முதல் 13 வரை நடத்த உள்ளது.
- 'கடல்களைத் தாண்டிய நட்புறவு' (Friendship Across Seas) என்ற கருப்பொருளின் அடிப்படையில் அந்தமான் மற்றும் நிக்கோபார் கடற்படைப் பிரிவின் (Andaman and Nicobar Command) கீழ் இந்த கடல்சார் பாதுகாப்புப் போர் பயிற்சி நடத்தப்பட உள்ளது.
- அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் அசலான இயற்கை அழகு மற்றும் இயற்கை பாரம்பரிய செறிவை வெளிநாட்டினருக்குக் காண்பிப்பதற்காக மிலன் 2018 கூட்டுப்போர் பயிற்சி நடத்தப்படுகின்றது.
- மொத்தம் 16 நாடுகள் இந்த பன்னாட்டு கூட்டுப்போர் பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- அவையாவன,
    - ஆஸ்திரேலியா, தான்சானியா, கம்போடியா, சிங்கப்பூர், நியூசிலாந்து, வியட்நாம்,

மியான்மர், வங்கதேசம், கென்யா, தாய்லாந்து, இலங்கை, ஓமன், மாலத்தீவுகள், மொரீசியஸ், இந்தோனேசியா, மலேசியா.

- ❖ அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் மற்றும் வங்கக் கடலில் அமைந்துள்ள கடலோர நாடுகளுடைய (Littoral States) கடற்படையின் கூடுகையாக இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை (biennially) நடத்தப்படும் இந்த கூட்டுப்போர் பயிற்சியானது 1995 ஆம் ஆண்டு முதன்முறையாக நடத்தப்பட்டது.

## மருத்துவ மற்றும் வாசனைப் பொருட்கள் மீதான குழு

- ❖ வடகிழக்கு பிராந்தியத்திற்கான மருத்துவ மற்றும் வாசனை திரவிய தாவரங்கள் (Medical and Aromatic Plants - MAPs) மீதான அமைச்சகங்களுக்கிடையேயான குழுவின் (Inter-Ministerial Committee-IMC) முதல் சந்திப்பு மார்ச் மாதம் 12 தேதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ ஆயுஷ் (AYUSH) அமைச்சகம் மற்றும் வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை (DoNER - Development of North-East Region) ஆகியவற்றினுடைய செயலாளர்களின் தலைமையில் இச்சந்திப்பு நடத்தப்பட உள்ளது.
- ❖ வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சகம் இந்த சந்திப்பை ஒருங்கிணைக்க உள்ளது.
- ❖ வடகிழக்கு பிராந்தியத்திலுள்ள மருத்துவ மற்றும் வாசனை திரவிய தாவரங்களின் மூல ஆதாரத்தை நீடித்த முறையில் உற்பத்தி மற்றும் மேலாண்மை செய்து அதன் மூலம் வடகிழக்கு இந்திய மக்களின் பொருளாதார நிலைமை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான செயல் திட்டங்களை பரிந்துரை செய்ய இச்சந்திப்பு நடத்தப்படுகிறது.

## மருத்துவ மற்றும் வாசனைப் பொருட்கள் மீதான குழு

- ❖ வடகிழக்கு பிராந்தியத்திற்கான மருத்துவ மற்றும் வாசனை திரவிய தாவரங்கள் (Medical and Aromatic Plants - MAPs) மீதான அமைச்சகங்களுக்கிடையேயான குழுவின் (Inter-Ministerial Committee-IMC) முதல் சந்திப்பு மார்ச் மாதம் 12 தேதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- ❖ ஆயுஷ் (AYUSH) அமைச்சகம் மற்றும் வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை (DoNER - Development of North-East Region) ஆகியவற்றினுடைய செயலாளர்களின் தலைமையில் இச்சந்திப்பு நடத்தப்பட உள்ளது.
- ❖ வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சகம் இந்த சந்திப்பை ஒருங்கிணைக்க உள்ளது.
- ❖ வடகிழக்கு பிராந்தியத்திலுள்ள மருத்துவ மற்றும் வாசனை திரவிய தாவரங்களின் மூல ஆதாரத்தை நீடித்த முறையில் உற்பத்தி மற்றும் மேலாண்மை செய்து அதன் மூலம் வடகிழக்கு இந்திய மக்களின் பொருளாதார நிலைமை மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான செயல் திட்டங்களை பரிந்துரை செய்ய இச்சந்திப்பு நடத்தப்படுகிறது.

## வடகிழக்கு பிராந்தியத்திற்கான நிதி ஆயோக் மன்றம்

- ❖ வடகிழக்கு பிராந்தியத்திற்கான நிதி ஆயோக் மன்றம் ஒன்றை அமைப்பதற்கு மத்திய

அரசு அனுமதி வழங்கியுள்ளது.


- நிதி ஆயோக்கின் துணைத்தலைவர் மற்றும் மத்திய வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தின் இணை அமைச்சர் (Ministry of Development of Northeast Region) ஆகியோர் இம்மன்றத்தின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மத்திய வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டு அமைச்சகத்தில் இதனுடைய செயலகம் அமைய உள்ளது.
- வடகிழக்கு பிராந்தியத்தில் நீடித்த மற்றும் வேகமான வளர்ச்சியை ஏற்படுத்துவதற்குத் தேவையான, பொருந்தக்கூடிய முன்னெடுப்புகளை பரிந்துரைக்கவும், அவற்றின் வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளவற்றை அடையாளப்படுத்தவும் இம்மன்றம் அமைக்கப்பட்டுள்ளது.

## மகாநதி நதிநீர் பிரச்சினை - தீர்ப்பாயம்

- மகாநதி நதியின் நீரை பகிர்ந்து கொள்வதில் ஒடிஸா மாநிலத்திற்கும், சத்தீஸ்கர் மாநிலத்திற்கும் இடையே நிலவும் பிரச்சினையை தீர்க்க நதிநீர் பங்கீட்டு தீர்ப்பாயம் (Tribunal) ஒன்றை அமைப்பதற்கு மத்திய கேபினேட் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- மகாநதி நதியின் குறுக்கே சத்தீஸ்கர் மாநிலம் பல்வேறு தடுப்பணைகள் (Weirs) கட்டிவருவதை நிறுத்த வேண்டி, ஒடிஸா மாநிலம் தொடுத்த வழக்கில் நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க தீர்ப்பாயம் ஒன்றை அமைக்குமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த உத்தரவின் அடிப்படையில் தற்போது தீர்ப்பாயம் அமைக்கப்பட உள்ளது.
- மாநிலங்களுக்கிடையிலான நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை சட்டம் 1956-ன் படி அமைக்கப்படும் இத்தீர்ப்பாயத்தில் ஒரு தலைவர் மற்றும் இரு உறுப்பினர்கள் இருப்பர்.
- தீர்ப்பாயத்தின் தலைவர் மற்றும் இரு உறுப்பினர்களை உச்சநீதி மன்றம் அல்லது நாட்டின் பிற உயர்நீதி மன்றங்களின் நீதிபதிகளிலிருந்து, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி நியமிப்பார்.
- மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை சட்டம் 1956-ன் படி (Inter-State River Water Disputes -1956), அமைக்கப்படும் தீர்ப்பாயமானது தனது அறிக்கை மற்றும் முடிவை 3 ஆண்டுகளுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
- தவிர்க்க முடியாத காரணங்களால், இந்த சமர்ப்பிப்புக் காலத்தை மேலும் இரு ஆண்டுகளுக்கு மிகாத வண்ணம் நீட்டிப்பு செய்யலாம்.

### *மகாநதியைப் பற்றி*

- மகாநதி நதியானது சத்தீஸ்கர் மாநிலத்தின் சிஹாவா (Sihawa) மலைகளில் தோன்றுகின்றது.




- சத்தீஸ்கர் மற்றும் ஒடிஸா வழியே பாய்ந்தோடி, வங்கக்கடலில் கலக்கின்றது.
- மகாநதியின் கிளை நதிகள் (tributaries),

1. இடக்கரை துணைநதிகள் (left Bank Tributaries)
   - சியோநாத் (Seonath)
   - ஹஸ்தியோ (Hasdeo)
   - மண்ட் (Mand)
   - இப் (Ib)
2. வடக்கரை துணைநதிகள் (Right Bank Tributaries)
   - ஓங் (Ong)
   - டெல் (Tel)
   - ஜோங்க் (Jonk)

- உலகின் மிகவும் நீளமான அணையான ஹிராகுட் அணை மகாநதியின் நதியின் மேல் கட்டப்பட்டுள்ளது.

## தேசிய நகர்ப்புற வீட்டுவசதி நிதியம் (National Urban Housing Fund - NUHF)

- மத்திய அமைச்சரவை , பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டத்திற்கு

நிதியளிப்பதற்காக 60,000 கோடி மதிப்பிலான தேசிய நகர்ப்புற வீட்டு வசதி நிதியத்தை (National Urban Housing Fund - NHUF) ஏற்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது.

- பிரதம மந்திரி அவாஸ் யோஜனா திட்டமானது 2022-க்குள் 1.2 கோடி வீடுகள் கட்டி முடிப்பதை நோக்கமாகக் கொண்டது.
- NUHF ஆனது மூலப்பொருட்கள் உருவாக்கம் மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டுக் கழகத்தின் (Building materials and Technology Promotion Council - BMTP) கீழ் செயல்படும்.
- NUHF ஆனது அடுத்த நான்கு ஆண்டுகளுக்குத் தேவையான நிதி வசதியை ஏற்படுத்தித் தரும்.
- வெவ்வேறு வகையில் மத்திய நிதியுதவி தேவைப்படும் நிலைகள்
    - கூட்டு முயற்சியில் மலிவு விலை வீடுகள் (Affordable Housing in Partnership - AHP)
    - பயனாளிகள் இணைக்கப்பட்ட கட்டுமானம் (Beneficiary Linked Construction)
    - குடிசை மறுசீரமைப்பு (Insitu Slum Redevelopment)
    - மானியத்துடன் கடனளிப்புத் திட்டங்கள் (Credit Linked Subsidy Schemes)
- இதன் மூலம் நகர்ப்புறங்களில் உள்ள வீடுள்ளவர்கள் மற்றும் வீடற்றவர்கள் ஆகியோருக்கு இடையே உள்ள இடைவெளியை, இந்தத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித் தரப்படுவதன் மூலம் படிப்படியாகக் குறைக்கலாம்.
- மூலப்பொருள் உற்பத்தி மற்றும் தொழில் நுட்ப மேம்பாட்டுக் கழகமானது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரத்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது சங்கங்கள் பதிவுச்சட்டம் (Societies Registration Act), 1860 –ன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இதனுடைய முக்கியமான பணி, புதிய கட்டுமானத் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துவதேயாகும்.

## வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கான குறைதீர்ப்பு அமைப்பு

- இந்திய ரிசர்வ் வங்கி , வங்கி சாராத நிதி நிறுவனங்களுக்கு எதிரான குறைகளை தீர்ப்பதற்காக குறைதீர்ப்புத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.
- ரிசர்வ் வங்கியினைப் பொறுத்தவரை, இந்தத் திட்டம் துரிதமாகவும், கட்டணம் ஏதுமின்றியும் வங்கி சாராத நிதி நிறுவனங்களால் அளிக்கப்படும் சேவைகளில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய உதவும்.
- நுகர்வோர்களின் புகார்களைப் பொறுத்து இந்த அமைப்பு மண்டல ரீதியாக (சென்னை, மும்பை, கொல்கத்தா மற்றும் புது தில்லி) செயல்படும்.
- இந்த குறைதீர்ப்புத் திட்டம் புகார்தாரருக்கு அதாவது வாடிக்கையாளரோ அல்லது வங்கி சாராத நிதி நிறுவனமோ இந்த அமைப்பின் முடிவை எதிர்த்து மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யும் நடைமுறையை ஏற்படுத்தித் தருகிறது.
- உள்கட்டமைப்பு நிதி நிறுவனம், மைய முதலீட்டு நிறுவனம், உள்கட்டமைப்பு கடன் வசதி நிறுவனம் மற்றும் கலைப்பில் உள்ள வங்கி சாராத நிதி நிறுவனம் ஆகியவை இந்த குறைதீர்ப்பு அமைப்பின் வரம்பிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

## தேசிய ஒருமைப்பாட்டு சுற்றுப்பயணம்

- ❖ தேசிய ஒருமைப்பாட்டு சுற்றுப்பயணம், சிவப்பு கவசப் பிரிவின் (Red Shield Division) உதவியுடன் கோங்பங் பட்டாலியனால் தொடங்கி வைக்கப்பட்டது.
- ❖ இந்த சுற்றுப்பயணம் வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் இளைஞர்களுக்கு கல்வியளிப்பதற்காகவும், உற்சாகமளிப்பதற்காகவும் (to motivate) அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ இந்தியாவின் பாரம்பரியத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும், பல்வேறு வளர்ச்சிக்கான மற்றும் தொழில்துறை தொடக்கங்களைப் (Developmental and Industrial Initiatives) பற்றியும் அறிந்து கொள்ள இந்த பயணம் உதவும்.
- ❖ இந்த சுற்றுப்பயணம் மாணவர்கள் பல்வேறு வகையான தொழில்துறை வேலைவாய்ப்புகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் பல்வேறு புகழ்பெற்ற பிரபலங்களுடன் உரையாடவும் வாய்ப்பை ஏற்படுத்தித் தரும்.

# சர்வதேசச் செய்திகள்

## அஸ்காபாத் ஒப்பந்தம்-இந்தியா

- ❖ சர்வதேச போக்குவரத்து மற்றும் கடப்பு வழிப்பாதையை உருவாக்குதல் மீதான ஒப்பந்தத்தில் (Agreement on Establishment of an International Transport and Transit Corridor) இந்தியா இணைக்கப்பட்டுள்ளது.
- ❖ இந்த ஒப்பந்தம் அஸ்காபாத் ஒப்பந்தம் (Ashgabat Agreement) என்றும் அழைக்கப்படுகின்றது.
- ❖ இந்த ஒப்பந்தத்திற்கான இந்தியாவின் இணைவு 2018 ஆம் ஆண்டின் பிப்ரவரி மூன்றாம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வரும்.




### *அஸ்காபாத் ஒப்பந்தம்*

- ❖ மத்திய ஆசிய நாடுகளுக்கும், ஈரானிய ஓமானிய துறைமுகங்களுக்கும் இடையே மிக அருகாமையில் அமைந்த வர்த்தகப் பாதையை உருவாக்குவதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்.

- 2011ஆம் ஆண்டு ஓமன், ஈரான், டர்க்மெனிஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் ஆகிய நான்கு நாடுகளால் இந்த ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இவையே இந்த ஒப்பந்தத்தின் நிறுவன நாடுகளாகும். (Founding members).
- பின்னர் கஜகஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆகியவை இந்த ஒப்பந்தத்தில் இணைந்தன.
- ஈரான்-டர்க்மெனிஸ்தான்-கஜகஸ்தானிற்கு இடையேயான இரயில்வேப் பாதையானது அஸ்காபாத் ஒப்பந்தத்தின் முக்கியமான பாதையாகும்.
- மேலும் இது இந்தியா நிதியளித்து வரும் வடக்கு-தெற்கு சர்வதேச போக்குவரத்து வழிப்பாதையின் (International North-South Transport Corridor – INSTC) ஒரு பகுதியாகவும் இணைக்கப்பட்டுள்ளது.
- அஸ்காபாத் நகரானது டர்மெனிஸ்தான் நாட்டின் தலைநகராகும்.
- இது கராகும் (Karkum) பாலைவனத்திற்கும், கோபெட் டேக் (Kopet Dag) மலைத் தொடருக்கும் நடுவே அமைந்துள்ளது.

## ஐ.நா. உலக உணவு திட்டம் - சுவீடன்

- அடுத்த 4 ஆண்டுகளுக்கு உலக உணவு திட்டத்திற்கு 370 மில்லியன் டாலர்களை வழங்குவதற்கு சுவீடன் அரசானது ஐ.நா.வின் உலக உணவு திட்ட அமைப்புடன் (UN World Food Programme - WFP) முக்கியத்துவ கூட்டிணைவு ஒப்பந்தத்தை (Strategic Partnership Agreement) மேற்கொண்டுள்ளது.
- 2018 முதல் 2021 வரையிலான நான்காண்டு காலத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள சுவீடனின் இந்த நிதிப் பங்களிப்பானது WFP-ன் முக்கியத்துவ கூட்டு ஒப்பந்தத்தில் இது வரை மேற்கொள்ளப்பட்ட நிதிப் பங்களிப்புகளில் மிகப்பெரிய அளவிலான ஒன்றாகும்.

### *உலக உணவுத் திட்டம்*

- உலக உணவுத் திட்டமானது உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தால் (FAO-Food And Agriculture Organisation ) 1961ல் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் ரோமில் உள்ளது.
- உலக உணவுத் திட்ட நிறுவனமானது ஐ.நா.வின் உணவு சார்ந்த அம்சங்களில் துணைபுரியும் நிறுவனமாகும்.
- உலகின் மிகப்பெரிய மனிதாபிமான நிறுவனமான இது உலக அளவில் வறுமை மற்றும் பட்டினியைப் போக்குவதையும், உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதையும் முக்கியப் பணிகளாக கொண்டுள்ளது.

## இந்தியா-ஐ.நா. வளர்ச்சி மேம்பாட்டு ஒத்துழைப்பு நிதியம்

- தெற்கத்திய நாடுகளிடையே ஒத்துழைப்பை (South-South Co-operation) ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட இந்தியா-ஐ.நா மேம்பாட்டு ஒத்துழைப்பு நிதியத்திற்கு (India – UN Development Partnership Fund) இந்தியா கூடுதலாக 1 மில்லியன் டாலர்களை வழங்கியுள்ளது.

### *நிதியம் பற்றி*

- வளரும் மற்றும் குறைவான வளர்ச்சியுடைய நாடுகளில் வறுமை மற்றும் பட்டினியை ஒழிப்பதற்கும், சுகாதாரத்தை அதிகரிப்பதற்கும், கல்வி மற்றும் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும், தூய்மையான குடிநீர் மற்றும் ஆற்றலுக்கு அணுகலை

ஏற்படுத்துவதற்கும் இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளது.

- ❖ இந்தியா மற்றும் தெற்கத்திய நாடுகளின் ஒத்துழைப்பிற்கான ஐ.நா. அலுவலகத்திற்கு (United Nations Office for South-South Co-operation) இடையேயான கூட்டிணைவின் கீழ் இந்த நிதியம் அமைக்கப்பட்டுள்ளது.
- ❖ வளரும் மற்றும் குறைவான வளர்ச்சியுடைய நாடுகளின் நீடித்த மேம்பாட்டிற்கான திட்டங்களுக்கு நிதியளிக்க இந்த நிதியம் அமைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையின் எழுபதாவது சுதந்திர தினம்

- ❖ இந்தியாவின் அண்டை நாடான இலங்கை தனது 70வது சுதந்திர தினத்தை பிப்ரவரி 4ஆம் தேதி கொண்டாடியுள்ளது.
- ❖ 1948ஆம் ஆண்டு பிப்ரவரி 4ஆம் தேதி பிரிட்டிஷ் காலனியத்திலிருந்து இலங்கை விடுதலை அடைந்தது.
- ❖ இலங்கையின் இவ்வாண்டு சுதந்திர தின கொண்டாட்டத்தின் கருத்துரு - “ஒரே தேசம்“ (One Nation).
- ❖ பிரிட்டிஷ் அரசியின் சார்பாக இங்கிலாந்து இளவரசர் எட்வர்ட் சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

## உலகளாவிய கண் பராமரிப்பு சேவை

- ❖ தன்னுடைய குடிமக்களுக்கு உலகளாவிய கண் சிகிச்சை பராமரிப்பு சேவையை (Universal Eye Care) வழங்கவுள்ள உலகின் முதல் குறைந்த வருவாயுடைய நாடாக (Low income Country) ருவாண்டா உருவாகியுள்ளது.
- ❖ இதற்காக நாட்டில் உள்ள 3000 கண் சிகிச்சை செவிலியர்களுக்கு பயிற்சி அளிக்க “விஷன் ஃபார் எ நேஷன்“ (Vision for a Nation) என்ற அமைப்புடன் ருவாண்டா ஒப்பந்தம் செய்துள்ளது.
- ❖ சிறு கண்சார் பாதிப்புகளின் அறிகுறிகள் முதல் பெரிய கண்சார் அறுவை சிகிச்சை வரை இந்த உலகளாவிய கண் சிகிச்சை சேவையில் வழங்கப்பட உள்ளது.
- ❖ இதனால் ருவாண்டாவில் உள்ள 34 சதவீத மக்கள் பயன் பெற உள்ளனர்.
- ❖ கிட்டப் பார்வையானது ருவாண்டாவில் நிலவும் பொதுவான கண்சார் பார்வை குறைபாடாகும்.
- ❖ உலக மனித வளர்ச்சிக் குறியீட்டில் (Human Development Index) ருவாண்டா 159வது இடத்தில் உள்ளது.
- ❖ ருவாண்டாவில் வெறும் 19.8 சதவீத மக்கள் மட்டும் மின்சார பயன்பாட்டை கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெருக்கடிநிலை பிரகடனம் - மாலத்தீவு

- ❖ மாலத்தீவு அதிபரான அப்துல்லா யாமீன் மாலத்தீவில் 15 நாள் தேசிய நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.
- ❖ தற்போதைய அதிபர் அப்துல்லா யாமீன் அரசால் 2015 ஆம் ஆண்டு முன்னாள் அதிபரான நசீத் மற்றும் அவரது முக்கிய ஆதரவாளர்களான 9 பேர் தீவிரவாத தொடர்பு, ஊழல்,

கொலை சதி போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டு 13 ஆண்டு காலத்திற்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டனர்.

- கைது செய்யப்படுவதை தவிர்ப்பதற்காக நஷீத் வெளிநாடுகளில் புகலிடம் பெற்று (Exile) வாழ்ந்து வந்தார்.
- இந்நிலையில் முன்னாள் அதிபர் முகமது நசீர் உள்பட 9 பேர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரித்த மாலத்தீவு உச்சநீதிமன்றம், 9 பேரையும் விடுவிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது..
- விடுதலை செய்வது தொடர்பான உத்தரவை ஏற்க மறுத்துள்ள அதிபர் யாமீன் தற்போது நெருக்கடி நிலையை பிரகடனப் படுத்தியுள்ளார்.
- அதுமட்டுமின்றி மொத்தம் 85 இடங்களை கொண்ட மாலத்தீவு பாராளுமன்றத்தின் அதிபர் யாமீனின் மாலத்தீவு முன்னேற்ற கட்சியைச் சேர்ந்த 12 எம்பிக்கள் அதிபருக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள நிலையில், அந்த 12 பேரையும் யாமீன் அரசு தகுதி நீக்கம் செய்தது.
- அரசின் இந்த செயல்பாட்டையும் சட்டப்பூர்வமாக செல்லாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- 12 அதிருப்தி எம்பிக்களும் எதிர்த்தரப்பில் இணைந்தால் அதிபர் பதவி நீக்கம் செய்யப்படுவது உறுதி என்பதால் யாமீன் நாடாளுமன்றம் நடைபெறுவதையும் முடக்கியுள்ளார்.
- மேலும் யாமீன் அரசு இரு உச்ச நீதிமன்ற நீதிபதிகளையும் கைது செய்துள்ளது.
- இதனைத் தொடர்ந்து தீவு முழுவதும் 15 நாள் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
- மேலும் யாமீனின் ஒன்றுவிட்ட சகோதரரும் (Half-Brother) முன்னாள் அதிபருமான மவ்மூன் அப்துல் கையூமும் கைது செய்யப்பட்டுள்ளார்.
- 2008 ஆம் ஆண்டு ஜனநாயக முறையிலான மாலத்தீவு அரசு அமைக்கப்படும் வரை சுமார் 30 ஆண்டுகாலம் மவ்மூன் அப்துல் கையூம் மாலத்தீவின் அதிபராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.
- முகம்மது நசீத் ஜனநாயக மாலத்தீவின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிபராவார்.
- மாலத்தீவில் தற்போது இரண்டாவது முறையாக அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.
- இதற்கு முன் 2015-ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

## பெடரல் ரிசர்வ் வங்கியின் புதிய தலைவர்

- அமெரிக்க பெடரல் ரிசர்வ் வங்கியின் 16 வது புதிய தலைவராக ஜேரோம் எச். போவெல் நான்காண்டு பதவிக்காலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
- 100 வருட வரலாறுடைய அமெரிக்காவின் மத்திய வங்கியான பெடரல் ரிசர்வ் வங்கியின் முதல் பெண் தலைவரான ஜனேட் யேல்லனைத் தொடர்ந்து தற்போது போவெல் பெடரல் ரிசர்வ் வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பெடரல் ரிசர்வ் வங்கியின் தலைவர் பதவிக்கு போவெல் 2017ஆம் ஆண்டு அமெரிக்க அதிபர் டோனால்டு டிரம்பினால் பரிந்துரை செய்யப்பட்டார்.
- 2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் இவரது நியமனத்திற்கு அமெரிக்க செனட் அவை

அனுமதியளித்துள்ளதைத் தொடர்ந்து போவெல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## சவூதி அரேபியாவின் தேசியப் பாரம்பரியத் திருவிழா - ஜனத்ரியா

- ❖ சவூதி அரேபியாவின் தேசியப் பாரம்பரியத் திருவிழாவினுடைய 32வது பதிப்பை மன்னர் சல்மான் பின் அப்துல் அசிஸ் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் முன்னிலையில் ரியாத்தில் உள்ள ஜனத்ரியா என்ற கிராமத்தில் தொடங்கி வைத்தார்.
- ❖ இந்தியா இந்த வருடத்திற்கான விழாவின் மதிப்பிற்குரிய (Guest of honor) விருந்தினர் ஆகும்.
- ❖ ஜனத்ரியா என்பது சவூதி அரேபியாவின் கலாச்சார மற்றும் பாரம்பரியத் திருவிழாவாகும். இந்த விழாவானது பொதுவாக பிப்ரவரி அல்லது மார்ச் மாதம் நடைபெறும்.
- ❖ இது ரியாத்துக்கு அருகில் உள்ள ஜனத்ரியா என்று கிராமத்தில் வருடாவருடம் நடத்தப்படும். இது ஒவ்வொரு வருடமும் தேசியக் காவல் படையால் (National Guard) நடத்தப்படும். இது முதன்முதலில் 1985ஆம் வருடம் நடத்தப்பட்டது. இவ்விழாவானது ஒவ்வொரு வருடமும் பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்களை ஈர்க்கிறது.
- ❖ இத்திருவிழாவின் இந்தியக் காட்சிமாடமானது 'சவுதியின் நண்பன் இந்தியா' (Saudi Ka Dost Bharat) என்று கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இது இந்தியா மற்றும் இந்திய கலாச்சாரத்தின் பாரம்பரியம் மற்றும் நவீன அம்சங்களை பிரதிபலிக்கும் விதமாக இருந்தது.
- ❖ துருக்கி, இரஷ்யா, பிரான்ஸ், ஜப்பான், தென்கொரியா, சீனா, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகள் இவ்விழாவின் முந்தைய சிறப்பு விருந்தினர்களாவர்.

## J-20 புலப்படா போர் விமானம்

- ❖ புதிய தலைமுறையின் போர் விமானமாக நான்காம் தலைமுறையைச் சேர்ந்த J-20 எனும் புலப்படா போர் விமானத்தை சீனா தனது பாதுகாப்புப் படையில் சேர்த்துள்ளது.
- ❖ இந்தப் பகுதியின் முதல் புலப்படா தாக்கும் விமானத்தை சீனா அறிமுகப்படுத்தியுள்ளதாலும், அமெரிக்காவிற்குப் பிறகு உலகின் இரண்டாவது நாடாக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட புலப்படா போர் விமானத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாலும் இந்த போர் விமான அறிமுகம் உலக அரங்கில் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.
- ❖ மக்கள் விடுதலை ராணுவத்தின் வான்படைப் பிரிவிற்காக சீனாவின் செங்குடு விண்வெளி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட J-20 போர்விமானம் சீனாவின் நான்காவது தலைமுறை வகையைச் சேர்ந்த நடுத்தர மற்றும் நீண்ட தூர போர் விமானம் ஆகும்.
- ❖ தற்சமயம் இவ்விமானம் ரஷ்யாவின் சாடர்ன் AL-31 ரக என்ஜின்களுடன் பொருத்தப்பட்டு இயக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இதில் சீனாவின் உள்நாட்டுத் தயாரிப்பான தைஹாங் என்ஜின் பொருத்தப்படும்.
- ❖ தனது முதல் பயணத்தை 2011ல் இவ்விமானம் ஆரம்பித்தது.
- ❖ 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் சீனாவின் குங்டாங் மாகாணத்தில் உள்ள ஜீஹாய் என்னும் நகரில் நடைபெற்ற 11வது வான் கண்காட்சியில் பொதுமக்களுக்கு இது அறிமுகம் செய்யப்பட்டது.

## ஐ.நா. அகதிகள் திட்டம் - தான்சானியா வெளியேற்றம்

- நிதிப் பற்றாக்குறை மற்றும் பாதுகாப்பு தொடர்பான விவகாரம் காரணமாக ஐ.நா.வின் "விரிவான அகதிகள் பதில் நடவடிக்கைக் கட்டமைப்பிலிருந்து" (United Nations Comprehensive Refugee Response Framework) வெளியேற உள்ளதாக தான்சானியா அறிவித்துள்ளது.
- நெடுங்காலமாக தான்சானியாவானது அகதிகளுக்கு பாதுகாப்பான இடமாக (Safe haven) கருதப்பட்டு வருகின்றது. குறிப்பாக காங்கோ ஜனநாயக குடியரசின் மக்களும் (Democratic Republic of Congo) புருண்டி நாட்டு மக்களும் தான்சானியாவில் அகதிகளாக குடியேறியுள்ளனர்.
- சில புருண்டி நாட்டு அகதிகளுக்கு (Burundians) குடியுரிமை (Citizenship) வழங்குவதை நிறுத்தியிருப்பதாகவும், இனி அகதியாக குடியேறுவதற்கான தஞ்ச விண்ணப்பங்களுக்கு (Asylum Application) இடமளிக்கப் போவதில்லை எனவும் கடந்த மாதம் தான்சானியா ஐ.நா.வின் அகதிளுக்கான உயர் ஆணையரிடம் (UN High Commissioner of Refugees) தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.
- குடியேறிய அகதிகளை தன் சமூகத்தோடு ஒருங்கிணைப்பதில் தான்சானியாவிற்கு உதவ ஒப்புக் கொள்ளப்பட்ட தொகையை சர்வதேச சமுதாயம் அளிக்காமல் காலம் தாழ்த்தி வருவதாக சர்வதேச (International Community) சமுதாயத்தின் மீது தான்சானியா குற்றம் சாட்டியுள்ளது.

## ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு மாநாடு, 2018

- நடப்பாண்டின் ஜூன் மாதத்தில் கிழக்கு ஷான்டோங் மாகாணமான குயிங்டோவோ-வில்(Qingdao) 2018ஆம் ஆண்டிற்கான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (Shanghai Cooperation Organization -SCO) மாநாட்டை சீனா நடத்த உள்ளது.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் 2018ஆம் ஆண்டிற்கான சுழற்சி வழியிலான தலைமையை (rotating chair) சீனா ஏற்றுள்ளது.
- இதற்குமுன் 17வது ஷாங்காய் சர்வதேச அமைப்பின் மாநாடு 2017ல் கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் (Astana) நடத்தப்பட்டது.

*அமைப்பைப் பற்றி*

- சீனாவின் பெய்ஜிங்-ஐ தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பானது யூரேஸியப் பிராந்தியத்தின் (Eurasian) ஓர் அரசியல் பொருளாதார, பாதுகாப்பு அமைப்பாகும்.
- 2001 ஆம் ஆண்டு இது நிறுவப்பட்டது.
- இதன் முழு நேர உறுப்பினர்களாவன
  - சீனா
  - இரஷ்யா
  - கஜகஸ்தான்
  - உஸ்பெகிஸ்தான்
  - தஜிகிஸ்தான்

- கிர்கிஸ்தான்
- இந்தியா
- பாகிஸ்தான்

❖ ஆப்கானிஸ்தான், பெலாரஸ், ஈரான், மங்கோலியா ஆகியவை நடப்பில் இந்த அமைப்பின் கூர்நோக்கு நாடுகளாக (Observer) உள்ளன.

❖ கூர்நோக்கு நாடுகளாக இருந்து வந்த இந்தியா மற்றும் பாகிஸ்தானிற்கு 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதம் கஜகஸ்தான் தலைநகர் அஸ்தானாவில் நடைபெற்ற SCO மாநாட்டில் முழு உறுப்பினர் தகுதி வழங்கப்பட்டது.

❖ ஷாங்காய் ஐந்து (Shanghai Five) எனும் பெயரில் 1996 ஆம் ஆண்டு இரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளை கொண்டு சீனா-வால் இந்த அமைப்பு தொடங்கப்பட்டது.

❖ 2005 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அஸ்தானா பிரகடனத்தின் மூலம் (Astana Declaration) மூலம் SCO ஓர் பிராந்தியப் பாதுகாப்பு (Regional Security Organization) அமைப்பாக உருவானது.

❖ உறுப்பு நாடுகளிடையே இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதே (military cooperation) இந்த அமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

## தேசியப் பேரிடர் - தென்னாப்பிரிக்கா

❖ நாட்டில் நிலவி வரும் மோசமான வறட்சியை தென்னாப்பிரிக்க அரசானது தேசியப் பேரிடராக (National Diasater) அறிவித்துள்ளது.

❖ தென்னாப்பிரிக்கத் தலைநகரில் ஒன்றான கேப் டவுன் உட்பட மேற்கு மற்றும் தெற்கு தென்னாப்பிரிக்க பகுதிகள் மோசமான வறட்சி மற்றும் தண்ணீர் தட்டுப்பாட்டை சந்தித்து வருகின்றன.

❖ வறட்சி மிகவும் தீவிரமடைந்து வருவதனைத் தொடர்ந்து நடப்பாண்டின் ஏப்ரல் மாதம் 16-ஆம் தேதி “டே ஜீரோ” எனும் பூஜ்ஜிய நாள் நிகழ்வை தென்னாப்பிரிக்கா சந்திக்கும் என கணிக்கப்பட்டது.

❖ இருப்பினும் தண்ணீர் சிக்கன மற்றும் சேமிப்பு நடவடிக்கைகள் காரணமாக டே ஜீரோ நிகழ்வானது ஜூன் மாதத்தின் 4-ஆம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

❖ எத்தகு பயன்பாட்டிற்கும் தண்ணீர் முற்றிலுமாக இல்லாத நாளே “டே ஜீரோ” என்று அழைக்கப்படும்.

❖ எல்-நினோ (El-Nino) மற்றும் உலக வெப்பமயமாதல், பருவநிலை மாறுபாடு ஆகியவை மோசமான வறட்சிக்கான காரணங்களாக கூறப்பட்டுள்ளது.

## குளிர்கால ஒலிம்பிக் - நோரோ வைரஸ்

❖ தென்கொரிய தலைநகர் பியோங்சாங்கில் (Pyeongchang) நடைபெற்று வரும் 23 வது சர்வதேச குளிர்கால ஒலிம்பிக் (Winter olympic Games) தொடர் நோரோ வைரஸின் (Norovirus) நோய் தாக்குதலுக்கு மோசமாக உள்ளாகியுள்ளது.

❖ வயிற்றுப் போக்கை (diarrhea) உண்டாக்கும் ரோடா வைரஸை (Rota virus) ஒத்தது இந்த நோரோ வைரஸ்.

- அனைத்து வகை வயதுப் பிரிவினரையும் பாதிக்கும் இந்த வைரஸானது மிகவும் தொற்றுத் தன்மை வாய்ந்தது.
- தற்போது நடப்பில் இந்த வைரஸிற்கு எதிராக எத்தகு தடுப்பூசியும் இல்லை.
- திடீர் வாந்தி, வயிற்றுப் போக்கு, அடிவயிற்று வலி, தலைவலி, காய்ச்சல் ஆகியவை இந்த வைரஸின் தாக்குதலால் உண்டாகும் பாதிப்புகளாகும்.
- இந்த வைரஸ் முதன்மையாக வாய் மற்றும் மலக்கழிவு (oral-faecal) வழியாக பரவக் கூடியது.
- நோய் தொற்று கலந்த (Contaminated) உணவு மற்றும் நீர் வழியாகவும் இந்த வைரஸ் பரவக் கூடியது.

## புதிய நேபாள பிரதமர் - K.P. சர்மா ஒளி

- நேபாளத்தின் 41வது பிரதமராக K.P.ஷர்மா ஒளி பதவியேற்றுள்ளார்.
- K.P.சர்மா ஒளி இரண்டாவது முறையாக நேபாள பிரதமராக பதவியேற்றுள்ளார்.
- நேபாள அதிபரான வித்யா தேவி பண்டாரி K.P.ஷர்மா ஒளிக்கு இரகசிய காப்பு உறுதி மொழியை (Oath of office and Secrecy) முன்மொழிந்தார்.
- வித்யா தேவி பண்டாரி நேபாளத்தின் முதல் பெண் அதிபர் என்பது குறிப்பிடத்தக்கது.
- நேபாளத்தில் 2005ல் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியலமைப்புச் சட்டத்தின் படி நேபாளம் கூட்டாட்சியுடைய (Federal) ஏழு மாநிலங்களாக பிரிக்கப்பட்டது.
- இவற்றிற்கான பொது தேர்தல் இரண்டு மாதங்களுக்கு முன்பு நடைபெற்றது.
- இதில் ஷர்மா ஒளியின் நேபாள கம்யூனிஸ்ட் மற்றும் ஒருங்கிணைந்த மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட் கூட்டணி நாடாளுமன்ற பெரும்பான்மையை வென்றது.

## இந்திய பாதுகாப்பு பட்ஜெட்

- பாதுகாப்பு முக்கியத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச நிறுவனம் (International Institute for Strategic Studies) வெளியிட்டுள்ள "இராணுவ சமநிலை - 2018" (Militry Balance 2018) அறிக்கைப்படி, இந்திய இராணுவத்தின் பட்ஜெட்டானது உலகின் ஐந்தாவது பெரிய இராணுவ பட்ஜெட்டாக பட்டியலிடப்பட்டுள்ளது.
- முதல்முறையாக இங்கிலாந்தின் இராணுவ பட்ஜெட்டை இந்திய இராணுவ பட்ஜெட் முந்தியுள்ளது.
- இந்தியாவின் இராணுவ பட்ஜெட் ஒதுக்கீடானது 52.5 பில்லியனாகும்.
- இந்த அறிக்கைப்படி இந்தியாவின் பட்ஜெட்டைக் காட்டிலும் 3 மடங்கு அதிகமான பட்ஜெட் ஒதுக்கீடாக 150.5 பில்லியன் டாலர் மதிப்பைக் கொண்டு சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.
- 602.8 பில்லியன் டாலர் மதிப்புடன் அமெரிக்கா இப்பட்டியலில் தொடர்ந்து முதலிடம் வகிக்கின்றது.
- சவுதி அரேபியா மற்றும் இரஷ்யா ஆகியன முறையே மூன்றாவது மற்றும் நான்காவது இடத்தில் உள்ளன.

## P 5 GLOBAL DEFENCE SPENDERS (IN US $ BILLIONS)

- United States 602.8
- China 150.5
- Saudi Arabia 76.7
- Russia 61.2
- India 52.5

## 54வது முனிச் பாதுகாப்பு மாநாடு

- 54வது முனிச் பாதுகாப்பு மாநாடு ஜெர்மனியின் முனிச் நகரத்தில் பிப்ரவரி 16 முதல் 18 வரையிலான தேதிகளில் நடத்தப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குத்தரேஸ் இம்மாநாட்டை துவக்கி வைத்தார்.
- இந்த மாநாடு வடகொரியாவின் அணு சக்தி மற்றும் ஏவுகணைத் திட்டங்கள் மற்றும் சிரியாவின் உள்நாட்டுப் போர் ஆகிய முக்கியமான பாதுகாப்பு விஷயங்கள் பற்றி விவாதிப்பதற்காக நடத்தப்பட்டது.
- இந்த மாநாடு 1963 ம் ஆண்டிலிருந்து வருடாந்திர மாநாடாக நடத்தப்படும் சர்வதேச பாதுகாப்புக் கொள்கை பற்றிய ஒரு முக்கிய மாநாடாகும்.

## உலக போதை மருந்து எதிர்ப்பு நிறுவனம் -ருமேனியா ஆய்வகம்

- வேண்டத்தகு தரநிலைகளை கொண்டிருக்காத காரணத்தினால் ருமேனியா நாட்டின் போதை மருந்து பரிசோதனை ஆய்வகத்தை (drug-testing laboratory) உலக போதை மருந்து எதிர்ப்பு நிறுவனம் (World Anti-Doping Agency) 6 மாத காலத்திற்கு இடைநீக்கம் செய்துள்ளது.
- உலக போதை மருந்து எதிர்ப்பு நிறுவனத்தினுடைய பல்வேறு ஒழுங்குமுறைகளுக்கு உறுதிப்பாடற்ற வகையில் ஒத்திசைந்து செயல்படாத காரணத்தினால் ரோமானியா தலைநகர் புசாரெஸ்டில் உள்ள இந்த ஆய்வகத்திற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

### *WADA பற்றி*

- சுவிட்சர்லாந்து நாட்டின் லவ்சன்னெவில் 1999ஆம் ஆண்டு சுதந்திரமான சர்வதேச போதை மருந்துப் பயன்பாட்டுத் தடுப்பு அமைப்பாக உலக போதை மருந்து எதிர்ப்பு நிறுவனம் நிறுவப்பட்டது.
- உலக அரசுகள் மற்றும் சர்வதேச விளையாட்டு இயக்கங்களினால் சமமான முறையில் இந்த அமைப்பிற்கு நிதியளிக்கப்படுகின்றது.
- 1999ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டின் லவ்சன்னேவில் விளையாட்டில் போதைப் பொருள் பயன்பாடு மீதான முதல் உலக கருத்தரங்கு (World Conference on doping Sports) நடைபெற்றது.
- அந்த கருத்தரங்கில் விளையாட்டில் போதைப் பொருள் பயன்பாடு மீதான லவ்சன்னே பிரகடனம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- உலகின் அனைத்து நாடுகள் மற்றும் விளையாட்டுப் போட்டி அமைப்புகளில் உள்ள


போதை மருந்து எதிர்ப்புக் கொள்கைகளை ஒத்திசைக்கும் ஆவணமான உலக போதை மருந்து எதிர்ப்பு தொகுப்பைக் (World Anti-doping Code) கண்காணிப்பதும், உலக நாடுகளின் போதை மருந்து பயன்பாட்டு எதிர்ப்புத் திறனை மேம்படுத்துவதும் அவற்றில் அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் இந்த நிறுவனத்தின் முக்கிய பணிகளாகும்.

## அரபு ஆடை அலங்கார அணிவகுப்பு வாரம்

- கலை மற்றும் பொழுது போக்கு மீதான தன்னுடைய பழமையான கடும் கொள்கைப் போக்கை கைவிடுத்து முதல்முறையாக அரபு ஆடை அலங்கார அணிவகுப்பு வாரத்தை சவூதி அரேபியா முதன் முறையாக நடத்த உள்ளது.
- மார்ச் மாதத்தின் 26ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை சவூதி தலைநகர் ரியாத்தில் இந்த ஆடை அலங்கார அணிவகுப்பு வாரத்தை நடத்த உள்ளதாக துபாயை தலைமையிடமாகக் கொண்ட அரபு ஆடை அலங்கார குழு அறிவித்துள்ளது.
- மேலும் இதன் இரண்டாவது பதிப்பு அக்டோபர் மாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- பாரிஸ் மற்றும் மிலன் ஆடை அலங்காரக் கண்காட்சி போலவே இதுவும் சர்வதேச பேஷன் கண்காட்சி வாரமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.
- இதற்கு முன் அரபு ஆடை அலங்கார வாரம் துபாய் நாட்டினால் பிரத்தியேகமாக நடத்தப்பட்டு வந்தது.


## தென்னாப்பிரிக்காவின் புதிய அதிபர்

- தேசிய காங்கிரஸ் தலைவர் சிரில் இராம போஷா தென்னாப்பிரிக்காவின் புதிய அதிபராக பதவியேற்றுள்ளார்.
- ஊழல் விவகாரம் காரணமாக தென்னாப்பிரிக்க அதிபராக இருந்த ஜேக்கப் ஜீமா பதவி விலகியதை அடுத்து அதே கட்சியைச் சேர்ந்த சிரில் இராமபோஸா தென்னாப்பிரிக்க தேசிய காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களால் புதிய அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2014ஆம் ஆண்டிலிருந்து துணை அதிபராக பணியாற்றி வரும் சிரில் இராமபோஸா ஜேக்கப் ஜீமாவின் மீதமுள்ள பதவிக் காலமான ஓராண்டு காலத்திற்கு மட்டுமே பதவி வகிப்பார்.
- தென்னாப்பிரிக்க அதிபரின் பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் என்பது குறிப்பிடத்தக்கது.





## கார்பன் வரி விதிப்பு – சிங்கப்பூர்

- பருவநிலை மாறுபாட்டிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் ஓர் முயற்சியாக பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வை (green House Gas Emission) குறைப்பதற்கு 2019 ஆம் ஆண்டிலிருந்து சிங்கப்பூர் அரசு "கார்பன் வரியை" (Carbon tax) விதிக்க உள்ளது.
- 2019 முதல் 2023 ஆம் ஆண்டு வரை ஒரு டன் பசுமை இல்ல வாயு உமிழ்விற்கு 5 சிங்கப்பூர் டாலர்கள் (அதாவது 3.81 அமெரிக்க டாலர்) விதிக்கப்பட உள்ளது.
- ஆண்டிற்கு 25,000 டன் அல்லது அதற்கு மேலான அளவு பசுமை இல்ல வாயுக்களின் உமிழ்வை உண்டாக்கும் சாதனங்கள் மீது இந்த வரி விதிக்கப்பட உள்ளது.
- சிங்கப்பூரின் சிறிய நிலப்பரப்பு மற்றும் அதிகமான மக்கள் தொகை அடர்த்தி காரணமாக அண்மையில் வெளியிடப்பட்டுள்ள சர்வதேச ஆற்றல் நிறுவனத்தின் (International Energy Agency) தரவின் படி, பசுமை இல்ல வாயுக்களின் தனிமனித வெளியீட்டின் (Per Capita Emission) அடிப்படையில் 142 நாடுகளுள் சிங்கப்பூர் 26-வது இடத்தில் உள்ளது.




## இந்தியா - பூடான் அரசாங்க ரீதியிலான உறவுகள்

- இந்தியா மற்றும் பூடான் இடையே அரசாங்க ரீதியிலான உறவுகள் (Diplomatic relationship) நிறுவப்பட்டு 50 ஆண்டுகள் (பொன்விழா) நிறைவுற்றுள்ளதை அடுத்து பொன்விழா (2018) தற்போது கொண்டாடப்பட்டு வருகிறது.




- இதற்குமுன், இந்த விழாவைக் கொண்டாடுவதற்காக இருநாடுகளும் காணொளிக்காட்சி (Video Conferencing) மூலமாக விழா சின்னத்தை (logo) அறிமுகப்படுத்தின.
- இந்த சின்னம் (logo) 5, 0 என்ற இரு எண்களைக் கொண்டது.

   - 5 → பூடானின் சின்னம் டிராகனைச் சுற்றியது போல் உள்ளது
   - 0 → இந்திய மூவர்ணக் கொடியின் சக்கரத்தைக் குறிக்கிறது.
- இந்தியா தனது தூதரகத்தை திம்புவில் 1968 ஆம் ஆண்டு அமைத்ததன் மூலம் இருநாட்டு உறவுகள் நிறுவப்பட்டது.
- இரு நாட்டு தூதரக உறவுகளின் அடிப்படைக் கட்டமைப்பானது 1949 ஆம் ஆண்டு இரு நாடுகளால் கையெழுத்திடப்பட்ட நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக்கை ஆகும். இந்த உடன்படிக்கை பிப்ரவரி 2007 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்டது.

## வெள்ள மூழ்கு குகை - மெக்ஸிகோ

- அண்மையில் மெக்ஸிகோவின் யுகேடான் தீபகற்பத்தில் (Yucatan Peninsula) உலகின் மிகப்பெரிய வெள்ளை மூழ்கு குகை (Flooded Care) ஒன்று ஆழ்கடல் நீர்மூழ்கு வீரர்களால் (Scuba Divers) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.




- மெக்ஸிகோவின் மாயன் இன மக்களின் புராதன நினைவுச்சின்ன மீதங்கள் (Monumental Relics) யுகேடான் தீபகற்பத்தில் மிகுந்த அளவில் காணப்படுகின்றன.
- தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் யுகேடான் தீபகற்பத்தில் இக்குகையையும், ஸ்லாத் (Great Sloth) எனும் விலங்கினம் ஒன்றின் புதை படிவத்தையும், மாயன் மக்களின் வர்த்தக கடவுளுக்காக ஏற்படுத்தப்பட்ட கோயிலின் சன்னதியையும் கண்டுபிடித்துள்ளனர்

## மெய்நிகர் நாணயம் - வெனிசுலா

- நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள வெனிசுலா உலகிலேயே முதன் முதலாக பிட்காயினை (Bitcoin) அறிமுகப்படுத்தியுள்ளது.
- அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை எதிர்கொள்வதற்காக சங்கேத இணையப் பண வகைகளில் உலகிலேயே பெரியதாக வகைப்படுத்தப்படும் பெட்ரோ (பிட்காயின்

போன்றது) வெனிசுலாவின் எண்ணெய் இருப்புகள் (Oil reserves), எரிவாயு (Gas), தங்கம் மற்றும் வைரம் ஆகியவற்றின் இருப்புகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

- இந்தப் பெட்ரோவை (Petro), வரி செலுத்தவும், கட்டணங்கள் (fees) செலுத்தவும், பங்களிப்புகள் (contributions) மற்றும் பொது சேவைகளில் (Public Services) பயன்படுத்தவும் வெனிசுலா நாட்டு அரசு அனுமதியளித்துள்ளது.
- அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால், வெனிசுலாவின் பொலிவர் நாணயமதிப்பு குறைந்ததையடுத்து, இந்த பெட்ரோவை (petro) பயன்படுத்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெனிசுலா அரசு வெளியிட்டுள்ளது.
- வெனிசுலா - OPEC (Organisation for petroleum Exporting Countries) அமைப்பின் உறுப்பினர் நாடாகும்.
- உலகிலேயே மிகப்பெரிய எண்ணெய் வளங்களைக் (Oil reserves) கொண்ட நாடுகளுள் ஒன்றாகும்.
- வெனிசுலா ஒரு சோசலிசநாடு (Socialist Country) ஆகும். எண்ணெய் ஏற்றுமதி மூலம் 95% அளவிற்கு அன்னிய செலாவணியைப் பெறும் வெனிசுலா, அதனுடைய வரலாற்றிலேயே மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ளது.

## கோப்ரா கோல்டு இராணுவப்பயிற்சி

- தாய்லாந்தின் சோன்புரி மாகாணத்தில் (Chonburi province) கோப்ரா கோல்டு (Cobra Gold) எனும் குறியீட்டு பெயருடைய வருடாந்திர பன்னாட்டு (Multi National) இராணுவ கூட்டுப் போர் பயிற்சி நடத்தப்பட்டுள்ளது.
- கோப்ரா கோல்ட் ராணுவ கூட்டுப்போர் பயிற்சியின் இந்த 37 ஆவது பதிப்பை இவ்வாண்டு அமெரிக்காவின் ஆயுதப் படையும், தாய்லாந்தின் ராயல் ஆயுதப் படையும் இணைந்து நடத்தியுள்ளன.
- ஏழு முழு நேர உறுப்பு நாடுகள் இவ்வருடத்திற்கான கோப்ரா கோல்டு கூட்டுப் பயிற்சியில் பங்கேற்றுள்ளன.
- அவையாவன
    - தாய்லாந்து
    - அமெரிக்கா
    - ஜப்பான்
    - மலேசியா
    - இந்தோனேசியா
    - தென்கொரியா
    - சிங்கப்பூர்.
- இந்த கூட்டுப்போர் பயிற்சியில் பார்வையாளர் (observers) நாடுகளாக 10 நாடுகள் கலந்து கொண்டுள்ளன.
- அவையாவன
    - புருனே
    - லாவோஸ்

- பாகிஸ்தான்
- கம்போடியா
- மியான்மர்
- ஜெர்மனி
- இலங்கை
- பிரேசில்
- சுவீடன்
- வியட்நாம்

❖ கோப்ரா கோல்டு கூட்டுப்போர் பயிற்சியானது ஒவ்வோர் ஆண்டும் தாய்லாந்தில் நடைபெறும் ஓர் ஆசிய-பசுபிக் இராணுவ கூட்டுப்போர் பயிற்சியாகும்.

❖ இந்தோ-பசுபிக் பிராந்தியத்தில் நடைபெறும் மிகப்பெரிய இராணுவ கூட்டுப் போர் பயிற்சியாக கருதப்படும் இது முதன் முதலாக 1982-இல் நடத்தப்பட்டது.

❖ மனிதாபிமான குடிமை உதவிகள் (Humanitarian Civic Assistance - HCA), களநிலைப் பயிற்சி (Field Training Exercises - FTX), கட்டளைக்கு பின்னான செயல்பாட்டு பயிற்சி (Command Post Exercise-CPX) ஆகியவற்றின் மீது இந்த கூட்டுப்போர் பயிற்சி நடத்தப்படுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## நீண்ட கால மூலதன ஆதாயம் மீதான வரியின் மறு அறிமுகம்

❖ முதலீட்டுப் பங்குகள் (Equity Shares) மீதான நீண்ட கால மூலதன ஆதாயத்திற்கு (LTCG – Long term Capital Gain) மத்திய அரசு ஆதாய வரியை மறு அறிமுகப்படுத்தியுள்ளது.

❖ இதனால் முதலீட்டாளர்கள், சம பங்குகள் மற்றும் பரஸ்பர நிதிகளில் ஓர் ஆண்டுக்கு மேல் முதலீடு செய்து ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் லாபம் பெறும் பட்சத்தில், லாபத்தில் 10 சதவீதத்தை வரியாக செலுத்த வேண்டும்.

❖ தற்போது குறுகிய கால மூலதன ஆதாயத்திற்கு (அதாவது ஓர் ஆண்டிற்குள் விற்கப்படும் மூலதன சொத்துக்கள் மீதான வரி) 15 சதவீத வரியை செலுத்த வேண்டும் என்ற நடைமுறை மாற்றப்படாமல் தொடரப்பட்டுள்ளது.

❖ குறுகிய கால மூலதன ஆதாயம் என்பது Short Term Capital Gains – STCG.

❖ இதனால் வரும் நிதி ஆண்டில் கூடுதலாக ரூ.20,000 கோடி கிடைக்க வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

❖ இந்த அறிவிப்பின் படி, ஓர் ஆண்டுக்கு மேல் முதலீடு செய்து, ஓர் ஆண்டில் ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் லாபம் பெறுபவர் விலை குறியீட்டுடன் இணைக்கப்பட்ட இலாபத்தின் பயன் இல்லாமல் (Without the benefit of indexation) இலாபத்தில் 10 சதவீத LTCG வரியை கட்ட வேண்டும்.

❖ விலை குறியீட்டுடன் இணைக்கப்பட்ட இலாபம் என்பது உண்மையான வரிவிதிக்கத்தக்க ஆதாயத்தை கணக்கிடுவதற்காக பணவீக்கத்திற்கு எதிராக பங்குகளின் இலாபத்தை அனுசரிப்பதாகும். (Adjusting the profit against inflation to compute the real taxable gains).

***Capital Gain***

- மூலதன சொத்துகளின் விற்பனையில் கிடைக்கும் எந்த ஒரு இலாபமும் "மூலதன ஆதாயம்" (Capital Gain) எனப்படும்.

***LTCG***

- பங்குச் சந்தையில் 36 மாதங்களுக்கும் அதிகமான காலத்திற்கு வைக்கப்பட்ட சொத்துக்களின் விற்பனையால் வரக்கூடிய எந்த ஒரு எந்த ஒரு ஆதாயமும் நீண்ட கால மூலதன ஆதாயம் (LTCG – Long term Capital Gain) எனப்படும்.

***STCG***

- பங்குச் சந்தையில் 36 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்கு வைக்கப்பட்டுள்ள சொத்துகளின் விற்பனையினால் வரக்கூடிய எந்த ஒரு ஆதாயமும் குறுகிய கால மூலதன ஆதாயம் எனப்படும்.

## நாணய கொள்கை அறிக்கை - இந்திய ரிசர்வ் வங்கி

- நடப்பு நிதியாண்டிற்கான தன்னுடைய கடைசி இருமாத காலத்திற்கான நாணய கொள்கை (Bi-monthly Monetary) மதிப்பாய்வை இந்திய ரிசர்வ் வங்கியின் நாணயக் கொள்கைக் குழு சமர்ப்பித்துள்ளது.
- மறுகொள்முதல் வீதம் (Repo rate) மாற்றப்படாமல் 6 சதவீதமாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ரொக்கத் தகவமைப்பு வசதிக்கு (liquidity adjustment facility) கீழ் வரும் நேர்மாற்று மறுகொள்முதல் வீதம் (Reverse repo rate) மாற்றப்படாமல் 5.75 சதவீதமாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- விளிம்பு நிலை வசதி (Marginal standing facility) மற்றும் வங்கி வீதமும் (Bank Rate) மாற்றப்படாமல் 6.25 சதவீதமாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- உலக பொருளாதாரத்தின் நிச்சயமற்ற தன்மை (uncertainty) மற்றும் பணவீக்கம் (inflation) ஆகியவற்றின் அடிப்படையில் நாணய கொள்கையில் மாற்றங்கள் முடிவு செய்யப்படுகின்றன.

***நாணய கொள்கைக் குழு***

- இந்தியாவில் உள்ள வங்கிகளின் தினசரி அலுவலில் கையாளப்படும் வட்டி விகிதங்களினை நிர்ணயிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்திய ரிசர்வ் வங்கியின் ஒரு குழுவே நாணய கொள்கைக் குழுவாகும் (Monetary Policy Committee).
- இக்குழுவானது ஆறு உறுப்பினர்களை கொண்டது.
- இதில் இந்திய ரிசர்வ் வங்கியைச் சேர்ந்த மூன்று அதிகாரிகளும், இந்திய அரசால் நியமிக்கப்படும் மூன்று அதிகாரிகளும் அடங்குவர்.
- ரிசர்வ் வங்கியின் ஆளுநரே இந்தக் குழுவின் பதவி வழி சார் தலைவராவார் (Ex-officio chairperson).
- மேலும் இவர் முடிவெடுப்புகளில் சமநிலை உண்டாகும்போது இறுதி வாக்கை (Casting Vote) செலுத்தும் அதிகாரம் கொண்டவராவார்.
- இக்குழு பொதுவாக இரு மாதங்களுக்கு ஒரு முறை கூடும். ஆண்டிற்கு குறைந்தபட்சம் நான்கு முறையாவது இக்குழு சந்திக்க வேண்டுமென்பது கட்டாயமாகும்.
- ஒவ்வொரு சந்திப்பின் பிறகும், வங்கி வட்டி விகிதங்கள் தொடர்பாக

மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்றங்களை இது வெளியிடும்.

- இந்தியாவின் நாணய கொள்கைகளை நிர்ணயிப்பதில் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை ஏற்படுத்துவதற்காக 2016 ஆம் ஆண்டு இக்குழு ஏற்படுத்தப்பட்டது.
- நாட்டின் பணவீக்கத்தை (Inflation) 2021 வரை 4% (+2% or -2%) என்ற அளவிலேயே கட்டுப்படுத்தி பராமரிப்பதற்கான பொறுப்பு நாணய கொள்கைக் குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

## குறைந்தபட்ச ஆதரவு விலை - கொப்பரை

- எண்ணெய் கொப்பரை தேங்காய்களுக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையினை (Minimum Support Price - MSP) அதிகரிப்பதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. 2018 பயிர் சாகுபடி ஆண்டில் நியாயமான சராசரி தரத்தில் (Fair Average Quality - FAQ) தேங்காய்களை உற்பத்தி செய்வதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- இவ்வாறு வழங்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையானது தேங்காய் விவசாயிகளுக்கு பொருத்தமான குறைந்தபட்ச விலையினை அளிப்பதோடு, தேங்காய் சாகுபடிக்கான முதலீட்டை உயர்த்துகிறது. இதன் விளைவாக தேங்காய் உற்பத்தியும், நாட்டின் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும்.
- விவசாய செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையம் (Commission for Agricultural Costs and Prices - CACP) வழங்கிய பரிந்துரைகளின் அடிப்படையில் குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) உயர்த்தப்பட்டுள்ளது.
- இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்தல் கூட்டமைப்பு நிறுவனம் (National Agricultural Cooperative Marketing Federation of India Limited - NAFED) மற்றும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இந்திய நிறுவனம் (National Cooperative Consumer Federation of India Limited - NCCF) ஆகிய இரண்டு நிறுவனங்களும் தேங்காய் விளையும் மாநிலங்களில் குறைந்தபட்ச ஆதரவு விலையினை நிர்ணயிப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமைகள் ஆகும்.

### *விவசாய செலவுகள் மற்றும் விலைகளுக்கான ஆணையம் (CACP)*

- CACP என்பது பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையினை அரசுக்கு பரிந்துரை செய்யும் வல்லுனர் குழுவாகும். இக்குழுவானது பயிர்களின் உற்பத்தி செலவு, உள்நாடு மற்றும் சர்வதேச சந்தையில் விவசாய பொருட்களின் விலைகளின் போக்கு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு குறைந்தபட்ச ஆதரவு விலைகளை நிர்ணயிக்கின்றது.
- இந்த ஆணையம் ஜனவரி மாதம் 1965ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மத்திய விவசாயத்துறை அமைச்சகத்தின் கீழ் இந்த ஆணையம் இயங்குகின்றது.
- இந்த ஆணையத்தின் உறுப்பினர்கள்
  - தலைவர்
  - உறுப்பினர் செயலாளர்
  - ஒரு உறுப்பினர் (அதிகாரப் பூர்வமாக)
  - இரண்டு பிற உறுப்பினர்கள் (அதிகாரப் பூர்வம் அல்லாத)
- அதிகாரம் அளிக்கப்படாத (Non-Official) இரண்டு பிற உறுப்பினர்கள் பொதுவாக விவசாய சமூகத்தின் பிரதிநிதிகள் ஆவர். இவர்கள் விவசாய சமூகங்களுடன் நெருக்கமான

தொடர்பில் இருப்பவர்கள் ஆவர்.

## அடிப்படை ஆண்டு மாற்றம்

- ❖ நாட்டில் உண்டாகும் பொருளாதார மாற்றங்களை உள்ளெடுத்து அவற்றை (Accommodate and factor) காரணிப்படுத்துவதற்காக வேண்டி நுகர்வோர் விலைக் குறியீடு (Consumer Price Index-CPI), தொழில்துறை உற்பத்திக் குறியீடு (Index of Industrial Production-IIP) மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross domestic product-GDP) போன்றவற்றின் கணக்கீட்டிற்கான அடிப்படை ஆண்டை (Base year) இந்திய அரசு மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளது.
- ❖ நாட்டின் பொருளாதார வெளியீட்டைக் (Economic Output) கணக்கிடுவதற்கு 2011 மற்றும் 2012-ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாக (Base year) அரசு பயன்படுத்தி வருகிறது.
- ❖ GDP, IIP போன்றவற்றின் கணக்கீட்டிற்கு 2017-2018 ஆம் ஆண்டை புதிய அடிப்படை ஆண்டாகவும், சில்லறை பணவீக்கம் (Retail Inflation) அல்லது நுகர்வோர் விலைக் குறியீட்டின் (CPI) கணக்கீட்டிற்கு 2018 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (Ministry of Statistics and Programme Implementation) முன்மொழி வழங்கியுள்ளது.
- ❖ இதுவரை மதிப்பீடு செய்யப்படாமல் இருந்து வந்த காரணியான , சந்தையிடப்படாத சமூக மற்றும் பொருளாதார செயல்பாடுகளில் பெண்களின் பங்களிப்பை (non-marketed social and economic activities), மதிப்பிடுவதற்காக நேர பயன்பாட்டு கணக்கெடுப்பு ஒன்றை (Time Use Survey) அறிமுகம் செய்யவும் அமைச்சகம் முன்மொழிவு வழங்கியுள்ளது.

## வாராக்கடன் மீட்பு தீர்மான கட்டமைப்பு

- ❖ பெரிய அளவிலான வாராக்கடன்களை மீட்பதற்கு காலவரையறைகளை (Timelines) ஏற்படுத்தி உள்ளதன் மூலமும், நடப்பில் பயன்பாட்டிலுள்ள SDR மற்றும் S4A போன்ற கடன் மறுசீரமைப்புத் திட்டங்களைத் திரும்பப் பெற்றிருப்பதன் மூலம் வாராக் கடன்களின் (Bad loans) மீட்புத் தீர்மானத்திற்கான விதிகளை இந்திய ரிசர்வ் வங்கி வலுப்படுத்தியுள்ளது.
- ❖ இதற்காக வேண்டி இந்திய ரிசர்வ் வங்கி
    - ○ பெருநிறுவன கடன் மறுசீரமைப்பு திட்டம் (Corporate Debt Restructuring Scheme - CDR)
    - ○ கூட்டு கடன் வழங்குநர் மன்றம் (Joint lender's Forum - JLF)
    - ○ மூலோபாய கடன் மறுசீரமைப்புத் திட்டம் (Strategic Debt Restructuring Scheme - SDR)
    - ○ அழுத்தமுடைய சொத்துகளின் நிலையான கட்டமைப்பு (Sustainable structuring of Stressed Assets - S4A)


-போன்ற திட்டங்களைத் திரும்பப் பெற்று அவற்றை புதுக்கடன் தீர்மான கட்டமைப்பின் (Debt resolution) கீழ் வகைப்படுத்தியுள்ளது.

- ❖ இப்புதிய கட்டமைப்புச் சட்டப்படி,
    - ○ கடனாளர் கடனை திரும்பச் செலுத்தத் தவறும் (default) ஆரம்ப நிகழ்விலேயே 180 நாட்களுக்குள் கடன் மீட்புத் தீர்மானத் திட்டம் அமல்படுத்தவில்லை என்றால் ரூ.2000 அல்லது அதற்கு மேற்பட்ட கடன் தொகையினுடைய திரும்ப செலுத்துதலின் தவறல்களுக்கு (default) எதிராக வங்கிகள் திவால் நடைமுறையை (Insolvency Procedure) மேற்கொள்ள வேண்டும்.

- திரும்பச் செலுத்தத் தவறும் கணக்குகள் கடன் மீட்டலுக்காக திவால் நீதிமன்றங்களின் வரம்புக்கு பரிசீலனை செய்யப்படும்.

❖ திருப்பி செலுத்தத் தவறிய கடனாளர் ஐந்து கோடிக்கும் மேல் பெற்றிருப்பின் வார அடிப்படையில் அத்தகு தவறுதல்களை (defaults) வங்கிகள் பெரு கடன்கள் மீதான மத்திய தகவல் களஞ்சியத்திடம் (Central Repository of Information on large credits - CRILC) அறிவிக்க வேண்டும்.

❖ திருத்தியமைக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் படி ஒரு கடனுடைய வங்கிக் கணக்கு தனியாக நிர்வகிக்கப்படும் கணக்காக (Separately Managed Accounts - SMAD) வகைப்படுத்தப்பட்ட உடனேயே வங்கிகள் கடன் மீட்பு தீர்மான நடைமுறையைத் (Resolution Process) தொடர வேண்டும்.




## வாராக்கடன்கள், மோசடி விவகாரங்கள் மற்றும் தணிக்கைக்கான RBI குழு

❖ வாராக்கடன்களின் வகைப்பாடு, தணிக்கை செய்முறையின் செயல்திறன் மற்றும் அதிகரிக்கும் மோசடி சம்பவங்கள் போன்றவை தொடர்பான பல்வேறு விவகாரங்களை ஆராய்வதற்காக இந்திய ரிசர்வ் வங்கி நிபுணர் குழு ஒன்றை அமைத்துள்ளது.


❖ இந்திய ரிசர்வ் வங்கியின் மத்திய இயக்குநர் குழுவின் முன்னாள் உறுப்பினரான Y.H.மலேகாம் (V.H.Malagam) இந்த நிபுணர் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ RBI-ன் நிர்வாக இயக்குநரான A.K.மிஸ்ரா இக்குழுவின் உறுப்பினர் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

❖ நாட்டில் நிதி மோசடிகளை தவிர்ப்பதற்கான கண்காணிப்பு கட்டமைப்பினை (Supervisory Framework) வலுப்படுத்துவதற்கான RBI-ன் ஓர் முன்னெடுப்பாகவும், பஞ்சாப் நேஷனல் வங்கியில் நடைபெற்ற SWIFT (உலகளாவிய வங்கிகளுக்கிடையேயான நிதியியல் தொலை தொடர்புக்கான சங்கம் - Society for worldwide Interbank Financial Telecommunication - SWIFT) தொடர்பான 11,400 கோடி மோசடியினால் உண்டான விழிப்பாலும் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## சில்க்யாரா வளைவு - பர்கோட் சுரங்கப்பாதை

- உத்தரகாண்ட் மாநிலத்தில் சில்க்யாரா வளைவு மற்றும் பர்கோட்டிற்கு இடையே 4.531 கி.மீ. தொலைவிற்கு இருவழி இருதிசை சுரங்கப்பாதையை (2-Lane Bi-Directional Tunnel) அமைப்பதற்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு (Cabinet Committee on Economic Affairs -CCEA) ஒப்புதல் வழங்கியுள்ளது.
- பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான முறைமையின் (Engineering, Procurement, Construction - EPC) கீழ் இந்த சுரங்கப் பாதையானது உத்தரகாண்ட் மாநிலத்தின் தேசிய நெடுஞ்சாலை NH-139-யுடன் வழியையொட்டி அமையுமாறு கட்டப்பட உள்ளது.
- சார்தம் மஹாமார்க் பரியோஜனா (Char dham Mahamarg Pariyojana') திட்டத்தின் ஒரு பகுதியாக அமைய உள்ள இத்திட்டமானது மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் திட்டத்தின் கீழ் நிதி அளிக்கப்பட்டு தேசிய நெடுஞ்சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தால் (National Highway Infrastructure Development Corporation Ltd - NHIDCL) செயல்படுத்தப்பட உள்ளது.
- கட்டமைக்கப்படும் இச்சுரங்கப்பாதையானது ,
  - நான்கு சார்தம் மையங்களுள் ஒன்றான யமுனோத்ரிக்கு அனைத்துகால பயண வழிப்பாதை இணைப்பை (all weather connectivity) ஏற்படுத்தி தரும்.
  - தராசு மற்றும் யமுனோத்ரிக்கு இடையேயான பயண தூரத்தைக் குறைக்கும்.
- இமாலயப் பகுதியில், சார்தம் புனிதத் தல மையங்கள் என்றழைக்கப்படும் கங்கோத்திரி, யமுனோத்ரி, கேதர்நாத், பத்ரிநாத் ஆகியவற்றிற்கிடையேயான வழித் தொடர்பை அதிகரித்து, அவ்வழியிலான பயணத்தை பாதுகாப்பானதாக, மிகவும் உகந்ததாக, விரைவானதாக மாற்ற ஏற்படுத்தப்பட்ட திட்டமே சார்தம் மஹாமார்க் விகாஸ் பரியோஜனா ஆகும்.
- இந்தியாவின் எல்லை மாநிலங்களில் சர்வதேச எல்லைகளை ஒட்டி அதனருகே அமைந்துள்ள நெடுஞ்சாலைகளை மேம்படுத்துவதற்காக 2014 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட முழுவதும் அரசால் உரிமை கொள்ளப்படும் (fully state owned) ஒரு கட்டமைப்பு நிறுவனமே NHIDCL ஆகும்.



## கூகுள் டெஸ்

- கூகுள் தனது கூகுள் டெஸ்-ஐ பாரத ஸ்டேட் வங்கியுடன் (State Bank of India - SBI) ஒருங்கிணைத்துள்ளது. இதன் மூலம் SBI-ன் வாடிக்கையாளர்கள் கைபேசி கட்டண செயலியின் (Mobile Payment App) வழியாக அவர்களின் வங்கிக்கணக்கைக் கொண்டு பரிவர்த்தனை செய்து கொள்ளமுடியும்.
- SBI ஆனது கூகுள் டெஸ் உடன் இணையும் முதல் பொதுத்துறை வங்கியாகும்.
- எஸ்பிஐ வாடிக்கையாளர்கள் பரிவர்த்தனையை மேற்கொள்வதற்காக இந்த செயலி மூலம் ஒரு தனிப்பட்ட UPI ID யை (Unified Payment Interface - UPI) உருவாக்கிக் கொள்ளலாம்.
- தற்போது வரையில் கூகுள் நிறுவனமானது, கூகுள் டெஸ் செயலி உபயோகிப்பாளர்களை அவர்களுக்கான வங்கி ஒருங்கிணைக்கப்பட்ட கட்டண இடைமுகத்தை (Unified payment Interface Handle) உருவாக்குவதற்காக 4 வங்கிகளுடன் கூட்டிணைப்பை (Partnership) ஏற்படுத்தியுள்ளது.
- வாடிக்கையாளர்கள் நேரடியாக இந்த செயலியை பயன்படுத்தி அவர்களது வங்கி கணக்கிலிருந்து பரிவர்த்தனையை மேற்கொள்ளலாம்.
- எஸ்பிஐயைத் தவிர்த்து இதில் இணைந்துள்ள மற்ற மூன்று வங்கிகள்
  - எச்டிஎப்சி வங்கி
  - ஆக்ஸிஸ் வங்கி
  - ஐசிஐசிஐ வங்கி
- அரசு, பணப்பரிவர்த்தனையைக் குறைக்கவும் (Use of Cash) UPI தளத்தின் பயன்பாட்டை அதிகரித்து டிஜிட்டல் (Digital Payment) பரிவர்த்தனையை அதிகரிக்கவும் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்ப செய்திகள்

## மிஹிர்

- சூரியன் எனப் பொருள்படும் "மிஹிர்" (Mihir) என்ற உயர் செயல்பாட்டு கணினி அமைப்பை (High performance computer system - HPC) மத்திய புவி அமைச்சகமானது நொய்டாவிலுள்ள தேசிய மத்திய வரம்பு வானிலை முன்னறிவிப்பு மையத்தில் நிறுவியுள்ளது (National centre for medium range weather forecasting).
- இந்த உயர் செயல்பாட்டு கணினி அமைப்பானது, உச்ச செயல்திறன் மற்றும் செயல்பாட்டளவில் இந்தியாவின் மிகப்பெரிய உயர் செயல்பாட்டு கணினி வசதியாகும்.
- மொத்தமாக 6.8 பெடா பிளாப்புகளுடைய HPC வசதிகள் இரு பிரிவாக மத்திய புவி அமைச்சகத்தின் இரு நிறுவனங்களில் அமைக்கப்பட்டுள்ளது.
  - 'பிரத்யுஷ்' எனப் பெயரிடப்பட்ட 4.0 பெடா பிளாப்புகளுடைய HPC வசதி புனேவிலுள்ள IITM (Indian Institute of Tropical Meteorology) மையத்தில் நிறுவப்பட்டுள்ளது.
  - 2.8 பெடா பிளாப்புகளுடைய HPC வசதி நொய்டாவின் NCMRWF மையத்தில்

நிறுவப்பட்டுள்ளது.

❖ சர்வதேச அளவில் செயல்படும் அதிவேக கணிணிகளின் பட்டியலில் முன்னணி 500 இடங்களில் 368-வது இடத்திலுள்ள இந்திய அதிவேக கணிணிகள், இவற்றின் வருகையின் மூலம் முதல் 30 இடத்துக்கு முன்னேறும்.

## இலகு ரகு போர் விமானம் மற்றும் AFCS

❖ உள்நாட்டுத் தொழிற்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட தானியங்கி வான் பயண கட்டுப்பாட்டு அமைப்பு (Automatic Flight Control System – AFCS) பொருத்தப்பட்ட இலகு ரக போர் ஹெலிகாப்டரின் முதல் பயணத்தை ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்கல் நிறுவனம் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

❖ இந்தியாவில் அரசின் வான்வெளி மற்றும் பாதுகாப்பு நிறுவனத்தால் AFCS தொழிற்நுட்பம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

❖ AFCS என்பது நான்கு அச்சு டிஜிட்டல் வான் பயண கட்டுப்பாட்டு (Digital Four Axis Flight Control System) அமைப்பாகும்.

❖ ஹெலிகாப்டரின் தானியங்கு விமானி முறையையும் (Auto-pilot Modes), ஹெலிகாப்டரின் பயணக்கட்டுப்பாடு மற்றும் நிலைத்தன்மை பெருக்குதல் செயல்பாட்டையும் இந்த அமைப்பு மேற்கொள்ளவல்லது.

## உலகின் மிகச்சிறிய ராக்கெட் - ஜப்பான்

❖ ஜப்பான் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான JAXA (Japan Aerospace Exploration Agency) மிகச்சிறிய செயற்கைக் கோள்களை சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தும் திறனுடைய உலகின் மிகச்சிறிய இராக்கெட்டை ஏவியுள்ளது.

❖ இந்த சிறிய ராக்கெட் புவியின் மேற்பரப்பை படமெடுக்கக்கூடிய டிரைகாம்-1R (TRICOM-1R) என்ற சிறிய செயற்கைக்கோளை சுமந்து சென்று சுற்று வட்டப்பாதையில் நிலை நிறுத்தியுள்ளது.

❖ ஜப்பானின் காகோஷிமாவில் உள்ள உசினவ்ரா விண்வெளி மையத்திலிருந்து (Uchinoura Space Center) இந்த இராக்கெட் ஏவப்பட்டுள்ளது.

## அக்னி I - ஏவுகணை சோதனை

❖ ஒடிஸாவில் உள்ள ஏவுகணை சோதனை வரம்பிலிருந்து பயன்பாட்டாளர் முன்னோட்டத்தின் (User Trial) ஒரு பகுதியாக இந்திய இராணுவத்தினால் அணு ஆயுதங்களை சுமந்த செல்லக் கூடிய உள்நாட்டு தொழில்நுட்பத் தயாரிப்பான அக்னி I ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.

❖ உள்நாட்டுத் தொழிற் நுட்பத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இடைநிலை வரம்புடைய (Intermediate) இந்த ஏவுகணையானது ஒற்றை அடுக்கு எரிபொருள் நிலையுடைய (Single Stage Missile) தரையில் இருந்து நில இலக்கை நோக்கி ஏவக்கூடிய (Surface to Surface) ஏவுகணையாகும்.

❖ இந்த ஏவுகணையானது ஏற்கனவே 2004-ஆம் ஆண்டு ஆயுதப்படையில் இணைக்கப்பட்டுள்ளது.

- தற்போது சோதனை செய்யப்பட்டுள்ள ஏவுகணையானது அக்னி I ஏவுகணையின் 18வது பதிப்பாகும்.
- அக்னி I ஏவுகணையானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் மற்றும் இமாரத் ஆராய்ச்சி மையத்துடன் இணைந்து Advanced System Labaratory-ஆல் கண்டுபிடிக்கப்பட்டது.
- உயர்நிலை துல்லியத்தோடு இலக்கினை தாக்கி அழிப்பதை உறுதி செய்வதற்கு உதவும் சிறப்பு வழிகாட்டு அமைப்பும் இந்த ஏவுகணையில் உள்ளது.
- இந்தியாவின் "முதல் அணுஆயுத பயன்பாடில்லா கொள்கை"யின் (No first use policy) கீழ் இந்தியாவின் குறைந்தபட்ச நம்பத்தகு தடுப்பு அமைப்பின் (Minimum Credible Deterrence) ஒரு பகுதியாக அக்னி I ஏவுகணை உள்ளது.

## பிருத்வி - II ஏவுகணை சோதனை


- ஒடிஸாவிலுள்ள ஏவுகணை சோதனை வரம்பில், பயன்பாட்டாளர் முன்னோட்டத்தின் (User Trial) ஒரு பகுதியாக, அணு ஆயுதங்களை சுமந்து செல்லக் கூடிய உள்நாட்டு தொழில்நுட்ப தயாரிப்பான பிரித்வி II ஏவுகணை இராணுவத்தால் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.
- பிரித்வி ஏவுகணையானது 2003-ல் இந்திய இராணுவத்தில் இணைக்கப்பட்டது. ஒற்றை திரவ எரிபொருள் நிலையுடைய (Single Stage Liquid Fuel) பிரித்வி II ஏவுகணையானது ஒருங்கிணைக்கப்பட்ட வழிநடத்தப்படும் ஏவுகணை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (Integrated Guided Missile Development Programme) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட முதல் ஏவுகணையாகும்.
- இது தரையிலிருந்து தரை இலக்கை நோக்கி (surface-to-surface) ஏவக்கூடிய ஏவுகணையாகும். இந்த ஏவுகணை 350 கி.மீ. இலக்கு வரம்புடையது.
- திரவ எரிபொருள் உந்துதலை பயன்படுத்தும் இரட்டை எஞ்சின்களின் மூலம் ஆற்றல் பெற்று பிரித்வி II செயல்படுகின்றது.
- பிரித்வி ஏவுகணை உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நாட்டின் முதல் கண்டங்களுக்கிடையேயான (Ballistic) ஏவுகணையாகும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டு ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நாட்டில் மொத்தம் 5 பிரித்வி ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

## உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ராக்கெட்

- செவ்வாய் கிரகத்தினை நோக்கி எலான் மஸ்க் தலையிலான ஸ்பேஸ் எக்ஸ் (Space X) நிறுவனம் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பால்கான் ஹெவி (Falcon Heavy) செயல்பாட்டு ராக்கெட் ஒன்றை அமெரிக்காவின் கென்னடி விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து ஏவியுள்ளது.
- மேலும் டெஸ்லா நிறுவனத்தின் Roadster என்ற கார் ஒன்றையும் இந்த ராக்கெட் சுமந்து சென்றுள்ளது.
- ஸ்பேஸ் எக்ஸ் ஆனது அமெரிக்காவின் தனியார் ஏரோஸ்பேஸ் தயாரிப்பு நிறுவனமாகும்.
- பால்கான் ஹெவி ராக்கெட்டானது மீண்டும் பயன்படுத்தத்தக்க (Reusable) உலகின் மிகவும்

சக்தி வாய்ந்த செயல்பாட்டு ராக்கெட்டாகும்.

- இதுவரை உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ராக்கெட்டாக அறியப்படும் நாசாவின் டெல்டா 4 ராக்கெட்டுக்கான செலவின் மூன்றில் ஒரு பாக செலவை மட்டுமே உடைய பால்கான் ஹெவி ராக்கெட்டானது தன் எடையைக் காட்டிலும் இரு மடங்கு அதிக எடையை சுமந்து செல்ல வல்லது.
- பால்கான் ஹெவி ராக்கெட்டின் மூன்று முதல் நிலை உந்திகளும் (Booster) மீண்டும் பயன்படுத்தத்தக்கவை.
- இந்தியாவில் 2016-ஆம் ஆண்டு இஸ்ரோவினால் மீண்டும் பயன்படுத்தத்தக்க ராக்கெட்டுகள் (Reusable launch vehicle – Technology demonstrator) வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



First payload SpaceX founder Elon Musk's Tesla Roadster bound for Mars orbit

## உலர் சாம்பல் செயலி

- புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி (New & Renewable Energy) அமைச்சகத்தின் இணை அமைச்சர் (தனிப் பொறுப்பு) உலர் சாம்பல் வியாபாரம் தொடர்பான இணைய கண்காணிப்பு அமைப்பு மற்றும் கைபேசி செயலியை அறிமுகம் செய்து வைத்தார். இந்த செயலிக்கு 'Ash Track' எனப் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த இணையதளமானது அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் உலர் சாம்பல் வியாபாரத்தை சிறந்த முறையில் நிர்வகிக்க உதவும். உலர் சாம்பல் உற்பத்தியாளர்களுக்கும் அதன் பெரும் பயன்பாட்டாளர்களுக்கும் (சாலை ஒப்பந்ததாரர்கள், சிமெண்ட் உற்பத்தியாளர்கள் போன்றோர்) இடையே ஒரு ஊடாடும் தளமாக இந்த செயலி அமையும்.

- ❖ அனல்மின் நிலையங்களில் நிலக்கரி எரிக்கப்பட்டு மின்சாரம் உற்பத்திச் செய்யப்படுகின்றது. இவ்வாறு நிலக்கரி எரிக்கப்படும் பொழுது கிடைக்கும் இறுதி விளைப்பொருட்களில் உலர் சாம்பலும் ஒன்றாகும்.
- ❖ இந்த உலர் சாம்பலானது கட்டுமானப் பணியில் பயன்படுத்துவதற்கு சிறந்த ஆதாரமாகும்.
- ❖ உலர் சாம்பலானது போர்த்லாண்ட் சிமெண்ட், கட்டுமானக் கற்கள், ஓடுகள், சாலையோர நடைமேடை போன்றவற்றைக் கட்டமைக்க பயன்படுத்தப்படுகிறது.
- ❖ அனல் மின் நிலையங்களில் உருவாகும் உலர் சாம்பல்கள் பெரும் நிலப்பகுதியை ஆக்கிரமிப்பதாலும், சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்கக் கூடும் என்பதாலும் அவற்றை சரியான முறையில் கையாள்வது முக்கியமாகும்.

## 100 வெளிக்கோள்கள்

- ❖ நாசாவின் விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சூரிய குடும்பத்திற்கு வெளியே 100 புதிய கிரகங்கள் உள்ளன என்பதை உறுதி செய்துள்ளனர்.
- ❖ இதன் மூலம், நாசாவின் K2 விண்வெளித் திட்டத்தின் வழியாக கண்டறியப்பட்டுள்ள வெளிக்கோள்களின் மொத்த எண்ணிக்கை 300 ஆக உயர்ந்துள்ளது.
- ❖ சூரியக் குடும்பத்திற்கு வெளியே ஒரு நட்சத்திரத்தை மையமாக கொண்டு சுற்றி வரும் கோள்களே வெளிக்கோள்கள் எனப்படும்.
- ❖ மேலும் இந்த ஆய்வில் HD 212657 எனும் வெளிக்கோள் ஒன்று கெப்ளர் விண்வெளிக் கலனால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ HD 212657 மிகவும் பிரகாசமான நட்சத்திரமாகும்.
- ❖ வெளிக்கோள்களை கண்டுபிடிப்பதற்காக 2009ஆம் ஆண்டு கெப்ளர் விண்வெளி ஆய்வுக்கலம் அமெரிக்காவின் நாசா நிறுவனத்தால் விண்ணில் செலுத்தப்பட்டது.
- ❖ டென்மார்க் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து இந்த கண்டுபிடிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மாலாசிடின்ஸ் – புதிய ஆன்டிபயாடிக்

- ❖ மாலாசிடின்ஸ் (Malacidins) எனும் புதிய ஆன்டிபயாடிக் வகுப்பை கண்டுபிடித்திருப்பதாக நியூயார்க்கை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- ❖ பல்வேறு மண் வகைகளில் இருக்கின்ற மூலக்கூறுகளிலிருந்து இந்த புதிய ஆன்டிபயாடிக் வகுப்பு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ❖ மண் மற்றும் மாசுக்களில் வாழும் நுண்ணுயிரிகளால் உற்பத்தி செய்யப்படும் இந்த ஆன்டிபயாடிக் ஆனது பல்வேறு நோய் எதிர்ப்புத் திறனுடைய நோய்க்கிருமிகளை அழிக்கும் திறன் வாய்ந்தது.
- ❖ பிளேக், நிமோனியா, காலரா போன்றவற்றை ஏற்படுத்தும் கிராம் நெகடிவ் பாக்டீரியாக்களுக்கு எதிராக இவை செயல்தன்மையற்றவை.
- ❖ மிகவும் தடித்த செல் சுவருடைய கிராம் பாசிடிவ் பாக்டீரியாக்களை மட்டுமே இவை எதிர்க்கவல்லன.

- மாலாசிடின் தனித்துவ ஆன்டிபயாடிக் வகையாகும். இவை பொதுவாக மண் நுண் உயிர்க்கட்டுகளில் (Soil Micro biomes) குறியீட்டாக்கம் (Encode) செய்யப்படுகின்றன.

## பிரித்வி II - சோதனை

- இந்தியாவின் உள்நாட்டுத் தொழில்நுட்ப தயாரிப்பான, அணு ஆயுதத்தை சுமந்து செல்லத்தக்க பிரித்வி II ஏவுகணை இரவு நேர சோதனையின் போது வெற்றிகரமாக ஏவப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளது.
- நிலத்திலிருந்து நிலவழி இலக்குகளை (Surface to Surface) தாக்கி அழிக்கவல்ல இந்த ஏவுகணை ஒடிஸாவின் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த சோதனை வரம்பிலிருந்து நகரும் ஏவுகணை ஏவு அமைப்பின் மூலம் ஏவப்பட்டு வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டுள்ளது.

### *பிரித்வி II ஏவுகணையைப் பற்றி*

- பிரித்வி II ஏவுகணை 500 முதல் 1000 கிலோ வரையிலான ஆயுதங்களை சுமந்து செல்ல வல்லது.
- பிரித்வி ஏவுகணையானது 2003-ல் இந்திய இராணுவத்தில் இணைக்கப்பட்டது. ஒற்றை திரவ எரிபொருள் நிலையுடைய (Single Stage Liquid Fuel) பிரித்வி-II ஏவுகணையானது ஒருங்கிணைக்கப்பட்ட ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Integrated Guided Missile Development Programme - IGMP) பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட முதல் ஏவுகணையாகும்.
- இது தரையிலிருந்து தரை இலக்கை நோக்கி (surface-to-surface) ஏவக்கூடிய ஏவுகணையாகும்.
- இந்த ஏவுகணை 350 கி.மீ. இலக்கு வரம்புடையது.
- திரவ எரிபொருள் உந்துதலை பயன்படுத்தும் இரட்டை எஞ்சின்களின் மூலம் ஆற்றல் பெற்று பிரித்வி-II செயல்படுகின்றது.
- பிரித்வி ஏவுகணை உள்நாட்டுத் தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட நாட்டின் முதல் கண்டங்களுக்கிடையேயான (Ballistic) ஏவுகணையாகும்.
- ஒருங்கிணைக்கப்பட்ட வழிகாட்டு ஏவுகணை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்நாட்டில் மொத்தம் 5 பிரித்வி ஏவுகணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றது.

## e-NAM தரவு தளத்தின் ஆறு புதிய பயனாளர் நட்பு அம்சங்கள்

- மிக அதிகளவில் பயன்பாட்டாளர்களுக்கு உதவிடுவதை நோக்கமாகக் கொண்டு ஆறு பயனாளர் நட்பு அம்சங்களை (User friendly features) வேளாண் மற்றும் விவசாயிகள் நலன் அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது.
- அவைகளாவன

1. MIS Dashboard - சிறப்பான பகுப்பாய்வுக்கு
2. BHIM - வணிகர்கள் பணம் செலுத்துவதற்கான வசதி.
3. கைபேசி வழியாக வணிகர்களுக்கான பணம் செலுத்தும் வசதி.
4. மேம்படுத்தப்பட்ட கைபேசி செயலிகள் : Gate entry மற்றும் கைபேசி வழியாக பணம்

செலுத்தல்

5. விவசாயிகளின் தரவுகளை ஒருங்கிணைத்தல்
6. மின்னணு வழியில் கற்றல் அமைப்பு (e-learning module)
7. e-NAM இணைய தளமானது தற்போது இந்தி & ஆங்கிலம் ஆகியவற்றுடன் குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காளி மற்றும் ஒடியா ஆகிய மொழிகளில் உள்ளது.
8. e-NAM வணிக வசதியானது (trading facility) 6 மொழிகளில் உள்ளது.
9. e-NAM ஆனது, Online ஏலத்தின் மூலமாக விவசாயிகளின் விளைபொருட்களுக்கு போட்டிகரமான, லாபகரமான விலையை அளிப்பதை நோக்கமாகக் கொண்டு 2016ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
10. தற்போது, இதன் கீழ் 479 மண்டிகள், 14 மாநிலங்கள் மற்றும் 1 யூனியன் பிரதேசம் ஆகிய இடங்களில் உள்ளன.

## கூகுள் பே

- பெரும் தொழில்நுட்ப நிறுவனமான கூகுள் நிறுவனம் கட்டண செலுத்து செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இதற்கு Google Pay என பெயரிடப்பட்டுள்ளது.
- இது APPLE PAY செயலிக்குப் போட்டியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- கூகுள் தனது கட்டண செலுத்து செயலிகளான, ஆண்டிராய்டு பே (Android Pay) மற்றும் கூகுள் பணப்பை (Google Wallet) ஆகியவற்றை இணைத்து இந்த செயலியை உருவாக்கியுள்ளது.
- இந்த செயலியானது பொது போக்குவரத்திற்காக பணம் செலுத்தக்கூடிய (Pay for Public Transportation) அல்லது ஸ்மார்ட்போன்கள் மூலமாக பணம் செலுத்தக் கூடிய அம்சங்களைக் கொண்டுள்ளது.

## இ-சாத்தி

- உத்திரப் பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் இரண்டாவது மற்றும் கடைசி நாள் நிகழ்ச்சியில் இ- சாத்தி (e-Saathi) எனும் கைபேசி செயலி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- இந்த செயலி மூலமாக பொதுமக்கள் வீட்டிலிருந்த படியே பொதுச் சேவைகளைப் (Public Services) பெற முடியும்.
- இந்த மாநாடு பிரதமரால் தொடங்கி வைக்கப்பட்டது. வளர்ச்சிக்கான 4-P மந்திரமும் இந்த மாநாட்டில் கூறப்பட்டுள்ளது.
    - Planning - திட்டமிடுதல்
    - Potential - திறமை வளம்
    - Policy - கொள்கை
    - Performance - செயல்திறன்

## உய்ய மிகைநிலை Co2 - பிரேடான் சுழற்சி வசதி

- மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமானது பெங்களூருவில் அமைந்துள்ள இந்திய தேசிய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் (Indian Institute of Science-IISc) இந்தியாவின் முதல் உய்யமிகை நிலை Co2 பிரேடன் சுழற்சி சோதனை வளை தடப்பாதை (Super Critical Co2 Brayton Cycle test Loop Facility) வசதியை நிறுவியுள்ளது.
- மின் ஆற்றல் உற்பத்தி நிலையங்களிலிருந்து சோலார் வெப்ப ஆற்றல் உள்பட பல்வேறு பசுமை ஆற்றல்களை உற்பத்தி செய்யக்கூடிய, சோலார் வெப்ப மூலத்துடன் இணைக்கப்பட்ட உலகின் முதல் சோதனை வளை தடப்பாதை (loop) தொழில்நுட்பம் இதுவாகும்.
- இந்தோ - அமெரிக்க கூட்டு பசுமை ஆற்றல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மைய திட்டத்தின் (Indo-US Joint Clean Energy Research and Development Centre programme) கீழ் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையால் இதற்கு நிதியளிக்கப்படுகிறது.
- இந்தியா மற்றும் அமெரிக்காவிற்கான சோலார் ஆற்றல் ஆராய்ச்சி நிறுவனம் என்றழைக்கப்படும் இந்தோ-அமெரிக்க கூட்டமைப்பின் ஓர் பகுதியாக இத்தொழிற்நுட்ப வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.
- உய்ய மிகைநிலை கார்பன்-டை-ஆக்ஸைடு அடிப்படையிலான ஆற்றல் உற்பத்தியானது, வழக்கமான நீராவி அடிப்படையிலான மின் ஆற்றல் உற்பத்தி நிலையங்களுக்கு திறனான மாற்றை வழங்க வல்லதால் இது கணிசமான அளவு கார்பன் அடிச்சுவட்டை குறைக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சோலைவனங்கள் – நீலகிரி மார்டென்

- சமீபத்திய ஆய்வு ஒன்றில், மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் பகுதியில் அமைந்துள்ள பாம்பாடும் சோலைவன தேசியப் பூங்காவானது அரியவகை விலங்கான நீலகிரி மார்டென் (Nilgiri Marten) விலங்கினத்தின் பாதுகாப்பான இடமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- புனுகுப் பூனைகளை (Civet) போன்று காட்சியளிக்கும் நீலகிரி மார்டெனானது மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மட்டுமே (Endemic) வாழக்கூடியவை.
- உயர்மட்ட இடங்களையே (Higher altitudes) நீலகிரி மார்டின்கள் பெரும்பாலும் வசிக்க தேர்ந்தெடுக்கும்.
- IUCN-ன் சிவப்பு பட்டியலில் நீலகிரி மார்டெனானது பாதிக்கப்படக்கூடிய விலங்கினமாக (vulnerable) வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- மேலும் 1972-ன் இந்திய வனஉயிர் பாதுகாப்பு சட்டத்தின் பகுதி 2-ன் அட்டவணை இரண்டின் கீழ் (Schedule II, Part 2 of the Indian Wildlife (Protection) Act 1972) நீலகிரி மார்டென் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.
- பாம்பாடும் சோலைவன தேசியப் பூங்காவானது கேரளாவின் மிகச்சிறிய தேசியப் பூங்காவாகும்.

## புதிய வன உயிர் சரணாலயம் - கோதாஜாரி

- மஹாராஷ்டிரா மாநில அரசானது சந்திராபூர் மாவட்டத்திலுள்ள கோதாஜாரி (Ghoda zari) என்ற இடத்தை மாநிலத்தின் புதிய வன உயிர் சரணாலயமாக அறிவித்துள்ளது.
- செறிந்த தாவர மற்றும் விலங்கின வளத்தைக் கொண்டுள்ள இப்பகுதியானது சாட்பாஹினி மலைகளையும், கோடாஜாரி ஏரியையும், சில நீர் வீழ்ச்சிகளையும் கொண்டுள்ளது.
- பிராஹமபுரி வனத்தின் 159 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை உள்ளடக்கியதாக இந்த புதிய சரணாலயம் அமைந்துள்ளது.

## பசுமை நற்செயல்கள் பிரச்சாரம் – சுற்றுச்சூழல் அமைச்சகம்

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகமானது பசுமை நற்செயல்கள் (Green Good Deeds Campaign) என்ற பிரச்சாரத்தை துவங்கியுள்ளது.
- உலக வெப்பமயமாதல், பருவநிலை மாறுபாடு தொடர்பாக மாணவர்கள் மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த பொதுமக்கள் சார்ந்த பிரச்சாரத்தின் நோக்கமாகும்.
- தூய்மையான மற்றும் பசுமையான சுற்றுப்புறத்தை அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பதும், அவர்களுக்காக சுற்றுப்புறத்தை பாதுகாப்பதும் இந்த பிரச்சாரத்தின் நோக்கங்களாகும்.

## கூழைக்கடா பறவைகள் திருவிழா - 2018

- ஆந்திரப் பிரதேசத்தின் கொல்லேறு ஏரியில் அமைந்துள்ள அடபகா பறவைகள் சரணாலயத்தில் (Atapaka Bird Sanctuary) முதல் முறையாக கூழைக்கடா (Pelican) பறவைகள் திருவிழா - 2018 நடத்தப்பட்டுள்ளது.
- ஆந்திரப் பிரதேசத்தின் சுற்றுலா ஆணையம் கிருஷ்ணா மாவட்ட நிர்வாகத்துடன் இனைந்து இத்திருவிழாவை நடத்தியுள்ளது.
- அண்மையில் அடாபாகா பறவைகள் சரணாலயமானது உலகின் மிகப்பெரிய பெலிகான்ரிகளில் (Pelicanry) ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- சாம்பல் நிற கூழைக்கடா பறவைகள் வளையமைத்து, இனப்பெருக்கம் செய்யும் இடமே பெலகான்ரி (Pelicanry) எனப்படும்.
- Spot Billed Pelican என்றும் அழைக்கப்படுகின்ற சாம்பல் கூழைக்கடாக்களானது 1972-ஆம் ஆண்டின் இந்திய வன உயிர் பாதுகாப்புச் சட்டத்தின் (Wildlife Protection Act 1972) அட்டவணை I-ல் பட்டியலிடப்பட்டுள்ளது.
- மேலும் பன்னாட்டு இயற்கை பாதுகாப்புச் சங்கத்தின் (International Union for Conservation of Nature) சிவப்புத் தரவு புத்தகத்தின் (Red Data Book) கீழ் இப்பறவையானது "அச்சுறு நிலை அண்மித்த இனமாக" (Near Threatened) வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### *கொல்லேறு ஏரி*


- கொல்லேறு ஏரியானது நாட்டின் மிகப்பெரிய நன்னீர் ஏரிகளுள் ஒன்றாகும். இது

கிருஷ்ணா மற்றும் கோதாவரி டெல்டாவிற்கு இடையே அமைந்துள்ளது.

- 1972ன் இந்திய வன உயிர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் இது வன உயிர் சரணாலயமாக 1999 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- மேலும் இது நவம்பர் 2002ல் ராம்சார் உடன்படிக்கையின்படி சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாக (Wetlands of International Importance) பட்டியலிடப்பட்டுள்ளது.

## மிதக்கும் சுத்திகரிப்பு தீவு – நெக்நம்பூர் ஏரி

- உலக ஈர நிலங்கள் தினத்தன்று (World Wetlands day) மிதக்கும் சுத்திகரிப்பு ஈர நிலம் ஒன்று (Floating Treatment Wetland-FTW) மாசடைந்த நீர்நிலையினை தூய்மைப்படுத்தி சுத்திகரிப்பதற்காக ஹைதராபாத்திலுள்ள நெக்னம்பூர் ஏரியில் அமைக்கப்பட்டுள்ளது.
- ஏரி நீரிலுள்ள அதிகப்படியான நைட்ரேட் மற்றும் ஆக்ஸிஜன் மாசுபடுத்திகளை உறிஞ்சி நீரினை சுத்திகரிக்கவல்ல தாவரங்கள் இந்த சதுப்பு நிலங்களில் நடவு செய்யப்பட்டுள்ளன.
- ஹைதராபாத் மாநகர மேம்பாட்டு ஆணையம் மற்றும் ரங்கா ரெட்டி மாட்ட நிர்வாகத்தின் முயற்சியால் இந்த மிதக்கும் சுத்திகரிப்பு ஈரநிலம் அமைக்கப்பட்டுள்ளது .
- மண் பயன்பாடற்ற ஹைட்ரோபோனிக்ஸ் முறையின் அடிப்படையில் இந்த மிதக்கும் சுத்திகரிப்பு ஈரநிலம் அமைக்கப்பட்டுள்ளது .
- இந்த மிதக்கும் சதுப்பு நிலமானது நாட்டின் மிகப்பெரிய மிதவை சுத்திகரிப்பு சதுப்புநிலமாக இந்தியன் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- வெட்டிவேர், செம்பருத்தி, சிட்ரோனெல்லா, துளசி, அஷ்வகந்தா, பூக்கும் மூலிகைகள் போன்ற பல்வேறு மாசுக்களை உறிஞ்சி ஏரியை தூய்மைப்படுத்தவல்ல தாவரங்கள் இந்த மிதக்கும் சதுப்பு நிலத்தில் நடவு செய்யப்பட்டுள்ளன.




## மாசு கட்டுப்பாட்டுத் திட்டம் - சால் நதி

- கோவாவில் உள்ள சால் நதியின் மாசுபாட்டை நீக்கி நீரை சுத்திகரிக்க புதிய மாசு கட்டுப்பாட்டு திட்டம் ஒன்றை தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் (National River

Conservation Plan - NRCP) மத்திய சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகமானது அனுமதித்துள்ளது.

- ❖ உயிரி வேதியியல் ஆக்ஸிஜன் தேவையின் அளவின் (Bio-Chemical Oxygen Demand) அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ள நாட்டின் 302 மாசுபட்ட நதிப் படுகைகளுள் கோவாவின் சால் நதிப்படுகையும் ஒன்று என 2015 இல் மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் (Central Pollution Control Board) தெரிவித்துள்ளது.
- ❖ தேசிய நதி பாதுகாப்புத் திட்டமானது 14 இந்திய மாநிலங்களில் கங்கை நதி மற்றும் அதனுடைய கிளை நதிகள் அல்லாத 31க்கும் மேற்பட்ட பிற நதிகளின் தூய்மைப்படுத்தலுக்காக மத்திய அரசினால் முழுவதும் நிதியளிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் ஓர் திட்டமாகும்.
- ❖ சால் நதியின் மாசுபாட்டளவை குறைக்கவும், நீரின் தரத்தை அதிகரிக்கவும் இந்த திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.
- ❖ சால் நதி மாசுபாடு சுத்திகரிப்புத் திட்டமானது 2021ல் நிறைவடையச் செய்ய முடிவுச் செய்யப்பட்டுள்ளது.
- ❖ NRPC திட்டத்திற்கு 100% மத்திய அரசின் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

## தவாங்கில் ரோடோடென்ட்ரான் பூங்கா

- ❖ அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள தவாங் மாவட்டத்தில், சரிந்து வரும் ரோடோடென்ட்ரான் இனங்களைக் காப்பாற்றும் முயற்சியாக ரோடோடென்ரான் பூங்கா ஒன்று அம்மாநிலத்தில் உருவாக்கப்பட்டு வருகிறது.
- ❖ இதில் 30க்கும் மேற்பட்ட ரோடோடென்ரான் இனப் பூக்கள் நடப்பட்டு பாதுகாக்கப்பட உள்ளது.
- ❖ ரோடொடென்ரான் என்பது பூக்கும் தாவரங்களின் மிகப்பெரிய இனமாகும். இது பெரும்பாலும் நீலகிரி, கிழக்கு மற்றும் மேற்கு இமயமலைகளில் காணப்படுகிறது.
- ❖ இந்த வகை இனங்கள் மிதவெப்ப மண்டலக் காடுகளிலிருந்து பனி மண்டலப் புதர்கள் (Alpine Shrubs) வரை பல்வேறு இடங்களில் காணப்படுகிறது. ரோடோடென்ட்ரான்கள் குறும்புதர்கள் முதல் பெரிய மரங்கள் வரையிலான வகைகளைக் கொண்டதாகும்.
- ❖ கிழக்கு இமய மலையின் குளிர்தன்மை, ஈரமான சரிவுப் பகுதிகள் மற்றும் ஆழமான பள்ளத்தாக்குகள் போன்றவை ரோடோடென்ட்ரான் இனங்களின் அபரிமிதமான வளர்ச்சிக்கும், வட கிழக்கு மாநிலங்களின் வளமான பல்வகை இனங்களுக்கும் உகந்த இடமாகத் திகழ்கிறது.
- ❖ இந்த இனமானது உத்தரகண்ட் மாநிலத்தின் மாநில மரமாக (State Tree) அறிவிக்கப்பட்டுள்ளது. கர்வால் இமயமலையில் இந்த இனத்தின் பூக்கும் நிகழ்வை மலர்களின் திருவிழா என்றறியப்படும் 'பூல் சங்கிராந்தி' (Phool Sankranti) என்ற பெயரில் கொண்டாடப்பட்டு வருகிறது.

## மூன்று புதிய விலாங்கு இனங்கள் வங்காள விரிகுடாவில் கண்டுபிடிப்பு

- ❖ கடந்த சில மாதங்களில், வங்கக் கடற்கரையின் வடக்கு விரிகுடாப் பகுதியில் மூன்று புதிய வகை விலாங்கு இனங்களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.


- வங்காள விரிகுடாவின் டிகா (Digha) கடற்கரையில் (மேற்கு வங்கம்) ஜிம்னோதொராக்ஸ் சூடோடைல் (Gymnothorax Pscudotile) என்ற இனம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (பின்புறத்தில் வெண் புள்ளிகளைக் கொண்ட இருண்ட பழுப்பு நிறம் உடையது)
- மற்ற இரண்டு இனங்களான ஜிம்னோதோராக்ஸ் விசாகேன்சிஸ் (சீரான பழுப்பு நிறம்) மற்றும் என்செலிக்கோர் புரோபின்குவா (சீரற்ற பால் வெள்ளைப் புள்ளிகளைக் கொண்ட செம்பழுப்பு நிறம்) வங்காள விரிகுடாவின் விசாகப்பட்டினக் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- விலாங்குகளானது நீளமான மீன்களாகும். இது பெரும்பாலும் அங்கில்லிபோம்ஸ் (Anguilliformes) வகையைச் சேர்ந்த கொன்றுன்னிகளாகும். இவை பெரும்பாலும் ஆறுகள் மற்றும் கடலுக்கு அடியில் காணப்படுகின்றன.
- உலகம் முழுவதும் சுமார் 1000 இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தியாவில் இந்த எண்ணிக்கை 125 ஆகும்.

## இந்திய மாநில வன அறிக்கை

- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய வன ஆய்வு நிறுவனம் (Forest Survey of India) இந்திய மாநில வன அறிக்கையை (India State of Forest Report) வெளியிட்டுள்ளது.
- இது இரு ஆண்டிற்கு ஒரு முறை (Biennial) வெளியிடப்படும் அறிக்கையாகும்.
- இந்த அறிக்கையின் படி, 2015 முதல் 2017க்கு இடைப்பட்ட காலத்தில் இந்தியாவில் வனங்களுக்கு கீழான பரப்பு சற்றே 0.21% என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.
- மேலும் இந்த அறிக்கைப்படி, இந்தியாவின் மொத்த புவியியற் நிலப்பரப்பில் (Geographic area) 21.53 சதவீதப் பரப்பு வனமாகும். அதாவது 7,08,273 சதுர கி.மீ வனப்பரப்பை இந்தியா கொண்டுள்ளது.
- இந்தியாவின் மொத்த புவியியற் நிலப்பரப்பு 32, 87, 569 சதுர கி.மீ. ஆகும்.
- ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, கேரளா, ஒடிஸா மற்றும் தெலுங்கானா ஆகிய 5 மாநிலங்களில் அதிகபட்ச அளவில் வனபரப்பு (Forest Cover) அதிகரித்துள்ளது.
- வடகிழக்கு இந்தியாவில் வனப்பரப்பு குறைந்துள்ளது. அதாவது மிசோரம், நாகாலாந்து, அருணாச்சலப்பிரதேசம், திரிபுரா, மேகாலயா ஆகிய ஐந்து மாநிலங்களில் வனப்பரப்பு குறைந்துள்ளது.
- வனப்பரப்பின் (Forest Cover) அடிப்படையில் மத்தியப் பிரதேசமானது அதிக வனப்பரப்பு உடைய மாநிலமாக விளங்குகின்றது.
- மொத்த புவியியற் பரப்போடு (Total Geographical Area) ஒப்பிடுகையில் அதிக வன பரப்பு சதவீதத்தை (Percentage of Forest Cover) கொண்ட இந்திய பகுதிகளுக்கான பிரிவில், அதிக வனபரப்பு உடையதாக லட்சத்தீவு உள்ளது. அதனைத் தொடர்ந்து மிசோரம், அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகள் உள்ளன.
- இடமாற்றுச் சாகுபடி (shifting cultivation), பிற உயிரியற் அழுத்தங்கள் (biotic pressures), சுழற்சி முறையிலான மரம் வெட்டல்கள், வளர்ச்சிப் பணிகளுக்காக வனப் பகுதிகளை திருத்துதல், வனப்பரப்பு நீரில் மூழ்குதல், இயற்கை பேரிடர் மற்றும் வேளாண் விரிவாக்கம் ஆகியவை வனப்பரப்பின் குறைவிற்கு முக்கிய காரணங்களாக கூறப்பட்டுள்ளன.
- உலகளவில் அதிகளவு வனப்பரப்பு உடைய நாடுகளில் இந்தியா பத்தாவது இடத்தில்

உள்ளது. உலகளவில் ஒப்பிடுகையில் இந்தியாவின் 24.4 சதவீத நிலப்பரப்பானது வனப்பகுதியாகும்.

❖ இந்த வனக் கணக்காய்வானது செயற்கைகோள் வரைபடமிடல் (Satellite Mapping) மூலம் இந்தியாவின் 633 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



**Way forward:** A.P., Karnataka and Kerala have topped the States that increased their forest cover. Photo shows the Nagarahole National Park in Karnataka. ▪ M.A.SRIRAM

## BSI and NHM

❖ உயிரின மற்றும் வாழிடப் பாதுகாப்பு மதிப்பீடு உட்பட இந்தியாவில் மரபியல், தாவரவியல் ஆய்வுகள், தாவர இனங்களின் ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் பாதுகாப்பிற்காக இந்திய தாவரவியற் கணக்கெடுப்பு ஆய்வகம் (Botanical Survey of India - BSI) இங்கிலாந்தின் தேசிய வரலாற்று அருட்காட்சியகத்துடன் (Natural History Museum) ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

❖ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோக்கங்களாவன

  ○ நகோயா ஒப்பந்தம், CITES உடன்படிக்கை மற்றும் உயிரியல் பல்வகைத்தன்மை மீதான உடன்படிக்கைகளின் இலக்குகளுக்கு ஆதரவை வழங்க அறிவியற் சான்றுகளைப் பயன்படுத்துவதற்கு இருநாடுகளுக்கும் உதவிபுரிதல்

  ○ உயிர் இனப் பாதுகாப்பு தொடர்பாக இருநாட்டு ஆராய்ச்சியாளர்களின் திறன்களைக் கட்டமைத்தல், இருநாடுகளிடையே ஆராய்ச்சியாளர்களைப் பரிமாற்றிக் கொள்ளுதல், இருசாரரும் அவரவரிடையே பரஸ்பரம் கற்றுக் கொள்ளுதல், தாவரவியற் மூல ஆதாரத்தை பாதுகாப்பதில் இருநாடுகளிடையேயும் இணைந்து செயலாற்றும் தன்மையை அதிகரித்தல்.

### *இந்திய தாவரவியற் கணக்காய்வு நிறுவனம்*

❖ நாட்டின் வனவியற் தாவர வளங்கள் மீது தாவரவியற் வகைப்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்ளும் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் உச்ச ஆராய்ச்சி நிறுவனமே இந்திய தாவரவியற் கணக்காய்வு நிறுவனமாகும்.

❖ 1890ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தின் முக்கிய நோக்கம் நாட்டின் தாவரவியற் மூல வளங்களை ஆராய்ந்து கண்டறிவதே ஆகும்.

❖ இந்திய தாவரவியற் கணக்கெடுப்பு ஆய்வு நிறுவனத்தின் கீழ் 9 மண்டல வட்டங்கள் உள்ளன.

## உலக சுற்றுச் சூழல் தினம்

- ஜூன் 5 அன்று கொண்டாடப்படும் உலக சுற்றுச்சூழல் தினத்தை இவ்வாண்டு உலக ஒருங்கிணைப்பாளராக (Global Host) இந்தியா நடத்த உள்ளது.
- இதற்கான நோக்க கடிதம் ஒன்றில் (Letter Of Intent-LOI) இந்தியாவும், ஐ.நா சுற்றுச் சூழல் அமைப்பும் (UN Environment) கையெழுத்திட்டுள்ளன.
- “பிளாஸ்டிக் மாசுபாடுகளை வெல்லுதல்” (Beat Plastic Pollution) என்பது இவ்வாண்டிற்கான உலக சுற்றுச்சூழல் தினத்தின் கருத்துருவாகும்.
- 2018-ஆம் ஆண்டின் உலக சுற்றுச்சூழல் தினம் நாட்டின் அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மாவட்டங்கள் உள்ளாட்சி அமைப்புகள் என அனைத்து அரசு அமைப்புகளிலும் கொண்டாடப்பட உள்ளது.
- இதனோடு டெல்லி மற்றும் நாட்டின் பிற பகுதிகளில் ஒரு வார கால சுற்றுச் சூழல் விழிப்புணர்வு பிரச்சாரமும், மாசுபாடு தணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.
- 1972 ஆம் ஆண்டு மனித சுற்றுச்சூழல் மீதான ஐ.நா மாநாட்டின் தொடக்கத்தினை குறிக்கும் விதமாக ஐ.நா பொது அவையால் உலக சுற்றுச்சூழல் தினம் நிறுவப்பட்டது.

## வேளாண் பிராந்திய மையம் - மிசோரம்

- இஸ்ரேல் நாட்டுடனான கூட்டு முயற்சியில், வடகிழக்கு மாநிலங்களின் முதல் வேளாண் பிராந்திய மையம் வரும் மார்ச் 2018-ல் மிசோரத்தில் தொடங்கப்பட உள்ளது.
- இதுவே இஸ்ரேலுடன் சேர்ந்து உருவாக்கப்பட்ட முதல் வடகிழக்கு பிராந்திய மையமாகும்.
- ஹரியானா, குஜராத், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், பஞ்சாப் உட்பட 22 செயல்பாட்டு மையங்கள் இஸ்ரேலுடனான ஒத்துழைப்பால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- முதல் மையம் 2008-ஆம் ஆண்டு ஹரியானாவில் அமைக்கப்பட்டது
- இந்த வடகிழக்கு பிராந்திய மையம் சிட்ரஸ் பழங்களை பதப்படுத்துவதற்காக அமைக்கப்பட உள்ளது. இம்மையம் வடகிழக்குப் பகுதிகளின் மொத்த வேளாண் தேவைகளைப் பூர்த்தி செய்யும்.
- இம்மையமானது வேளாண் மற்றும் விவசாயிகள் நலனுக்கான மத்திய அமைச்சகம், இஸ்ரேல் அரசு மற்றும் மிசோரம் மாநில அரசு ஆகியவற்றின் கூட்டிணைவால் ஏற்படுத்தப்பட உள்ளது.

## புதிய தாவர இனம் – மேற்குவங்கம்

- இந்திய தாவரவியல் கணக்காய்வு நிறுவனத்தைச் (Botanical Survey of India) சேர்ந்த தாவரவியலாளர்கள் மேற்கு வங்க மாநிலத்தில் அமைந்துள்ள ஜல்தபாரா தேசியப் பூங்கா (Jaldepara National Park) மற்றும் பக்ஸா தேசியப் பூங்காவில் (Buxa National Park) ஒரு புதிய தாவர இனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.
- மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவரான ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் பெயர் கொண்டு புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த தாவர இனத்திற்கு டிரைபேடெஸ் கலாமி

(Drypetes kalamii) என தாவரவியல் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

- இது ஒரு சிறிய புதர் வகை (Shurb) தாவரமாகும்.
- மிதவெப்ப ஈர-பகுதி-பசுமை மாறாக் காடுகளின் (subtropical moist semi-evergreen forests) நிழற்பாங்குடைய பகுதிகளிலும், ஈர நிலப்பகுதிகளிலும் இந்த தாவரங்கள் காணப்படுகின்றன.
- புத்ராஜீவா எனப்படும் மருத்துவ தாவரங்களோடு நெருங்கிய தொடர்புடைய இவை ஓர் ஓர்பால் (Unisexual) தாவர இனமாகும். அதாவது தனித்தனி ஆண், பெண் தாவரங்களை கொண்டவை.
- வெளிர் மஞ்சள் நிற பூக்களை கொத்து கொத்தாகப் பூக்கும் இத்தாவரம் அடர் ஆரஞ்சு நிறத்திலிருந்து சிவப்பு நிறம் வரையிலான பழங்களைத் தரவல்லவை.
- இவை பிரத்தியேகமாக இவ்விரு தேசிய பூங்காக்களில் மட்டுமே காணப்படுகின்றன.
- சர்வதேச பன்னாட்டு பாதுகாப்பு சங்க விதிமுறைகளின் படி, ஆராய்ச்சியாளர்கள் இத்தாவரத்தை "மிகவும் அச்சுறுத்தல்" (Critically Endangered) நிலையில் உள்ள தாவர இனமாக மதிப்பிட்டுள்ளனர்.

## துங்கபத்ரா - நீர்நாய் பாதுகாப்பு காப்பகம்

- பல்லாரி மாவட்டத்தில் முத்லாபூர் கிராமம் முதல் காம்பிளி வரை 39 கி.மீ தூரத்திற்கு துங்கபத்ரா நதி நெடுகிலும் அமையுமாறு கர்நாடகா மாநிலம் தன்னுடைய முதல் நீர்நாய் பாதுகாப்பு காப்பகம் (first otter conservation reserve) ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.
- யுனெஸ்கோவின் புராதன பாரம்பரிய இடமான ஹம்பியின் வழியேயும் இந்த நீர்நாய் பாதுகாப்பு இருப்பு அமைந்துள்ளது.
- மஷீர் மீன்கள் (Masheer Fish), நன்னீர் முதலைகள் மற்றும் பெரிய மென் ஓட்டு ஆமைகள் (giant soft shelled turtles), ஆற்று நீர்நாய்கள் (Smooth Coated otters), காட்டு நீர்நாய்கள் (Smooth Clawed Otters) ஆகியவை இந்த பாதுகாப்பு காப்பகத்தில் அதிக எண்ணிக்கையில் அமைந்துள்ளன.
- ஆற்று நீர்நாய்களானது இந்தியாவில் நாடு முழுவதும் இமாலயம் முதல் தென்னிந்தியா வரை காணப்படுகின்றன.
- பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் (IUCN - International Union for Conservation of Nature) சிவப்பு பட்டியல் படி, ஆற்று நீர்நாய்கள் பாதிக்கப்படக்கூடிய (Vulnerable) விலங்கினமாகும்.
- மேலும் நீர் நாய்களின் பாதுகாப்பிற்காக காட்டு நீர் நாய் மற்றும் ஆற்று நீர் நாய் ஆகியவை முறையே இந்திய வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம் 1972-ன் அட்டவணை I மற்றும் அட்டவணை II-ன் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளன.
- வாழிட இழப்பு, இழுவை வலை மூலமாக மிதமிஞ்சிய மீன் பிடிப்பு (overfishing by trawlers), வேட்டையாடுதல், டைனமைட் மீன்பிடிப்பு (dynamite fishing) ஆகியவை காரணமாக நீர்நாய்கள் பெரும் அச்சுறுத்தலை சந்தித்து வருகின்றன.
- மேலும் நீர்நிலைகளில் ஆகாயத்தாமரைகளின் பெருக்கமும் இவற்றிற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன.

### ஆலிவ் ரெட்லி ஆமைகள் - ருசிகுல்யா

- ஒடிஸா மாநிலத்தில் கன்ஜம் மாவட்டத்தின் ருசிகுல்யா நதியின் முகவாயிலில் (River Mouth), அரிய உயிரினமாக கருதப்படும் ஆலிவ் ரெட்லி ஆமைகள் முட்டையிடுவதற்காக வெகுஜன அளவில் வளையமைத்து (Mass Nesting) வருகின்றன.
- ஆலிவ் ரெட்லி ஆமைகளின் வெகுஜன முட்டையிடல் பருவமானது ஒரு தனித்துவமான நிகழ்வாகும். இந்நிகழ்வின்போது ஒவ்வொரு பெண் ஆமையும் சுமார் 100 முதல் 150 முட்டைகளை இடும்.
- ருசிகுல்யா கடற்கரையானது உலகின் மிக முக்கிய ஆலிவ் ரெட்லி ஆமைகளின் வெகுஜன வளையமைப்பு இடமாக கருதப்படுகின்றது.

*ஆலிவ் ரெட்லி ஆமைகள் பற்றி*

- ஆலிவ் ரெட்லி ஆமைகள் கடல் ஆமைகளிலேயே மிகச் சிறிய ஆமைகளாகும். இவை ஓர் அனைத்துண்ணிகளாகும் (omnivorous).
- தென் அட்லாண்டிக், பசுபிக் பெருங்கடல், இந்திய பெருங்கடல் போன்ற வெப்ப மண்டல கடல்களில் மட்டுமே இவை வாழக் கூடியவை.
- இந்த ஆமைகள் அரிபடாஸ் (Aribadas) எனப்படும் ஒரே நேரத்திய ஒத்திசைவான, வெகுஜன எண்ணிக்கையில் முட்டையிடுதலுக்காக வளையமைக்கும் செயலுக்கு பெயர் பெற்றவை.
- இவை ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை முட்டையிட வளையமைக்கும்.
- இந்த ஆமைகள் பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்பு சங்கத்தின் (IUCN – International Union for Conservation of Nature) சிவப்பு பட்டியலின் (Red List) காப்பு நிலையில் (Conservation Status) 'அழிவாய்ப்பு இனம்' (Vulnerable) என பட்டியலிடப்பட்டுள்ளன.
- மேலும் இவை வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் அருகி வரும் இனங்கள் மீதான சர்வதேச வர்த்தக உடன்படிக்கையின் (Convention on International Trade in Endangered Species of Wild Fauna and Flora) பிற்சேர்க்கை 1-ல் (Appendix – I) ல் சேர்க்கப்பட்டுள்ளன.
- CITES உடன்படிக்கை வாஷிங்டன் உடன்படிக்கை (Washington Convention) என்றும் அழைக்கப்படும்.

## மாநிலச் செய்திகள்

### பூச்சிக் கொல்லிகளுக்கு தடை – பஞ்சாப்

- சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு உடனடி தீங்கு விளைவிக்கக்கூடிய இருபது பூச்சிக் கொல்லிகளின் விற்பனைக்கு பஞ்சாப் மாநில அரசு தடை விதித்துள்ளது.
- மோனோகுரோடோபோஸ், டிரைகுளோரோபான், பென்புராகார்ப் உட்பட முக்கியமான தீங்கு விளைவிக்கக்கூடிய இருபது பூச்சிக் கொல்லிகள் மாநிலம் முழுவதும் தடை செய்யப்பட்டுள்ளன.
- உலக சுகாதார நிறுவனத்தால் இந்த பூச்சிக் கொல்லிகளானது சுகாதாரம் மற்றும் மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய முதல் வகுப்பு (Class – I) பூச்சிக் கொல்லிகளாக வகைப் படுத்தப்பட்டுள்ளன.

## புவியியல் பரப்பிற்கான உலகின் சிறப்பு விருது

- ஹைதராபாத்தில் நடைபெற்ற உலக புவியியல் பரப்பு மன்றத்தின் (Geospatial world Forum) சந்திப்பில் ஒடிஸா மாநிலத்திற்கு 2018ஆம் ஆண்டிற்கான புவியியல் பரப்பின் உலக சிறப்பு விருது (Geospatial World Excellence Award) வழங்கப்பட்டுள்ளது.
- i3MS என்ற இணையதள அடிப்படையிலான மென்பொருளின் மூலம் உண்மை நேர அளவில் தனிமங்களின் உற்பத்தி, அனுப்புகை மற்றும் அவற்றின் சந்தை மதிப்பை கண்காணிப்பதற்கு வெற்றிகரமான தகவல் தொழிற்நுட்ப பயன்பாட்டை ஏற்படுத்தியதற்காக ஒடிஸாவிற்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- புவனேஸ்வரில் உள்ள விண்வெளி பயன்பாட்டு மையத்தால் கண்டுபிடிக்கப்பட்ட GPS வசதி இணைக்கப்பட்ட இணையதளத்தின் அடிப்படையிலான மென்பொருளே i3MS (Integrated Mines and Mineral Management System) ஆகும்.
- கனிம துறையில், பெரிய அளவில் கனிமங்களை கொண்டு செல்லும் நகர்வுடைய போக்குவரத்து வசதிகளின் மீது GPS சாதனங்களை பொருத்தி அவற்றை கண்காணிப்பது இதுவே முதல் முறையாகும்.

## இரு பெரிய சூரிய ஆற்றல் பூங்காக்கள்

- மத்தியப் பிரதேச மாநிலத்தில் இரு பெரிய சூரிய ஆற்றல் பூங்காக்களை அமைக்கத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுக்கு நிதியளிக்க இந்தியாவின் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் மேம்பாட்டு நிறுவனமானது (Indian Renewable Energy Development Agency Limited – IREDA) ரேவா அல்ட்ரா சோலார் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

***IREDA***

- மத்திய புது மற்றும் புதுப்பிக்கக்கூடிய ஆற்றல் அமைச்சகத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஓர் மினி ரத்னா நிறுவனமே IREDA ஆகும்.
- இந்த நிறுவனத்தின் குறிக்கோள் ''என்றென்றும் ஆற்றல்" (Energy Forever) என்பதாகும்.
- நாட்டில் புது மற்றும் புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் மூலங்களோடு தொடர்புடைய திட்டங்களை ஊக்குவிப்பதும், மேம்படுத்துவதும், அவற்றை அமைப்பதற்கு நிதியுதவி வழங்குவதும் இதன் நோக்கங்களாகும்.

## அஸ்ஸாமின் முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு

- "அஸ்ஸாமின் நன்மை" என்ற தலைப்பில் அஸ்ஸாம் மாநிலத்தின் முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு அண்மையில் கவுகாத்தியில் நடத்தப்பட்டது.
- மாநிலத்தின் உற்பத்தித் துறையில் உள்ள வாய்ப்புகளையும், புவியிடவமைப்பு நன்மையையும் (geostrategic advantages) வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு காட்சிப்படுத்துவதற்காக இந்த இரண்டு நாள் மாநாடு நடத்தப்பட்டுள்ளது.
- அஸ்ஸாம் மாநில அரசோடு இணைந்து இந்தியாவின் தொழிற்சங்க அமைப்பான பிக்கி (FICCI – Federation of Indian Chambers of Commerce and Industry) இந்த மாநாட்டை நடத்தியுள்ளது.
- ஆசியான் நாடுகளுக்கான இந்தியாவின் எக்ஸ்பிரஸ் வழித்தடமாக அஸ்ஸாம் மாநிலத்தை நிலைப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.

## திருநங்கைகளுக்கான நல்வாழ்வு ஆணையம் - மஹாராஷ்டிரா

- திருநங்கைகளின் அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக திருநங்கைகள் நல்வாழ்வு ஆணையத்தை (Transgenders Welfare Board) அமைக்க மஹாராஷ்டிரா அரசு முடிவு செய்துள்ளது.
- இதன் மூலம் திருநங்கைகளின் நல்வாழ்விற்காக இத்தகு நல்வாழ்வு ஆணையத்தை அமைக்கும் முதல் இந்திய மாநிலம் மஹாராஷ்டிரமாகும்.

## 32-வது சுரஜ்குண்ட் சர்வதேச கலை மேளா

- 32வது வருடாந்திர சுரஜ்குந் சர்வதேச கலை பொருட்கள் மேளா ஹரியானா மாநிலத்தின் சுரஜ்குண்ட்-ல் நடத்தப்பட்டது.
- இந்தியாவின் கலாச்சார பாரம்பரியம் மற்றும் கைவினைப் பொருட்களின் பல்வகைத் தன்மை மற்றும் செறிவினை காட்சிப்படுத்துவதற்காக 1987ஆம் ஆண்டிலிருந்து இந்த வருடாந்திர திருவிழாவானது நடத்தப்படுகின்றது.
- இவ்வாண்டு இத்திருவிழாவானது கிர்கிஸ்தான் நாட்டுடன் இணைந்து சுரஜ்குந் மேளா ஆணையம், மத்திய கலாச்சாரம், சுற்றுலா மேம்பாடு, வெளியுறவுத் துறை, ஜவுளித்துறை அமைச்சகம் ஆகியவற்றால் நடத்தப்பட்டுள்ளது.

## 88-வது மஹாமஸ்தகபிஷேகா திருவிழா

- கர்நாடகா மாநிலத்தின் சரவணபெலகோலாவில் பாகுபலி தெய்வத்தின் ஒற்றைக் கல் சிலைக்கான (Monolithic Statue) 88-வது மஹாமஸ்தகபிஷகா திருவிழா தொடங்கியுள்ளது.



*திருவிழாவைப் பற்றி*

- மஹாமஸ்தகபிஷேகா திருவிழாவானது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகின்றது.

- சமண சமூகத்தவரின் முக்கிய திருவிழாக்களில் ஒன்றாக இது சமண சமயத்தின் முக்கிய அடையாளமான பாகுபலி தெய்வத்தை கௌரவிப்பதற்காக நடத்தப்படுகின்றது.
- சமண சமய நூல்களின் படி பாகுபலி கைலாய மலையில் இறப்பு மற்றும் பிறப்பு சுழற்சியிலிருந்து விடுபட்டு மோட்சத்தை அடைந்தார்.
- கோமதேஷ்வரா சிலையானது இவருக்கு அர்ப்பணிக்கப்பட்டதால் இவர் கோமதேஷ்வரா என்றும் அழைக்கப்படுகின்றார்.
- கோமதேஸ்வரர் சிலையானது கங்கா வம்சத்தின் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டது. 57 அடி உயர ஒற்றைக் கல் சிற்பமான இது கர்நாடக மாநிலத்தின் ஹசன் மாவட்டத்தின் சரவணபெலகோலாவின் மலைகளில் உள்ளது.
- இது உலகின் மிகப்பெரிய தனித்து நிற்கின்ற (Free-Standing Statue) சிலைகளில் ஒன்றாகும்.

## தஸ்தக் பிரச்சாரம்

- உத்தரப்பிரதேச மாநில அரசானது யுனிசெப் (United Nations Children's Emergency Fund-UNICEF) அமைப்புடன் இணைந்து தஸ்தக் (Dastak) எனும் பிரச்சாரத்தை துவங்கியுள்ளது.
- மாநிலத்தில் உள்ள உயிர்க்கொல்லி நோய்களான ஜப்பான் மூளைக் காய்ச்சல் (Japanese Encephalitis -JE) மற்றும் கடின மூளை வீக்க குறைபாடு (Acute Encephalitis -AE) போன்றவற்றை முழுவதும் ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் வீடுவாரியான பிரச்சாரமே (door to door campaign) தஸ்தக் (Dastak) ஆகும்.
- இந்த தஸ்தக் பிரச்சாரத்தின் முழக்கம் (tagline)- "Darwaja Khatkhatao AES aur JE Ko bhagao"
- இந்த பிரச்சாரமானது உத்தரப்பிரதேச மாநிலத்தின் 38 JE மற்றும் AE பாதிப்புள்ள மாவட்டங்களில் வீடு வாரியாக மேற்கொள்ளப்பட உள்ளது.
- உத்திரப்பிரதேச மாநிலத்தில் JE மற்றும் AE பாதிப்புடைய பகுதிகளானது பெரும்பாலும் நேபாள நாட்டுடன் ஒட்டி அமைந்துள்ள உத்திரப்பிரதேசத்தின் தராய் (Tarai Region) பகுதிகளிலேயே உள்ளது.
- இப்பகுதியானது நாட்டின் ஒட்டு மொத்த AE சுமையில் 60 சதவீதத்தைக் கொண்டுள்ளது.

## சமூக ஊடகம் - மஹாமித்ரா

- சமூக ஊடகம் மூலமாக இளைஞர்களோடு தொடர்பு கொள்ள மகாராஷ்டிரா அரசாங்கம் 'சமூக ஊடகம் - மஹாமித்ரா' எனும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.
- இளைஞர்கள் தங்கள் வெற்றிக் கதைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளவும், சமூகத்தின் நல்லெண்ணத்திற்காக பாடுபடுபவர்களை சமூக ஊடகத் தலைவர்களாக அங்கீகரிக்கவும் அரசாங்கம் எண்ணுகிறது.
- இந்த திட்டத்தில் பங்கெடுக்க விருப்பமுள்ளவர்கள் இதில் பதிவு செய்யும் வண்ணம் அரசு ஒரு கைபேசி செயலியை வெளியிட்டுள்ளது.
- இந்த முயற்சியின் முக்கிய நோக்கம் ஆனது இளைஞர்கள் ஒரு வலுவான மற்றும் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கிட எவ்வாறு சமூக ஊடகத்தை பயன்படுத்திட வேண்டும் என்பதை உணர வேண்டும் என்பதாகும்.

## 21வது இந்தியப் பறவைகள் கண்காட்சி ஜெய்ப்பூர்

- இந்திய சுற்றுலாத்துறை மற்றும் வனவிலங்கு சமூகம் (The Tourism and Wildlife Society of India), இராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் உள்ள மான் சாகர் ஏரியில் 21வது இந்தியப் பறவைகள் கண்காட்சியை ஏற்பாடு செய்தது.
- இந்த வருடம், இந்தக் கண்காட்சியானது ஜெய்ப்பூரில் அரிதாகவும் அழியுந்தருவாயிலும் உள்ள வெண்கழுத்துப் பட்டாணிக் குருவிகளுக்கு (White napped tit bird) சமர்ப்பிக்கப்பட்டது.

### *வெண்கழுத்துப் பட்டாணிக் குருவிகள் (White Napped tit - Machlolophus nuchalis)*

- இந்த வெண்கழுத்துப் பறவையானது உறுதித்தன்மை உடைய, வலுவான அமைப்பைக் கொண்ட முக்கியமாக பக்கவாட்டிலும் மார்பகங்களிலும் மஞ்சள் நிறத்தைக் கொண்ட கருப்பு-வெள்ளை நிற பறவையாகும்.
- வெண்கழுத்துப் பட்டாணிக் குருவியானது (White napped tit - மச்லோலோபஸ் நூச்சாலிஸ் - Machlolophus nuchalis) இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டது. இது, மேற்கு இந்தியா மற்றும் தென்னிந்தியா என்று இரு பிரிவுகளாகப் பிரிந்து கிடக்கும் உலர்ந்த முள் புதர் காடுகளில் காணப்படுகிறது.
- இந்தப் பறவையானது உதய்ப்பூரிலும் கட்ச்-ன் சில பகுதிகளிலும் காணப்படுகிறது.
- இந்தப் பறவையை பொருத்தமான வாழ்விடப் பற்றாக்குறையின் காரணமாக அழிவின் விளிம்பில் உள்ள பறவையாக இயற்கை பாதுகாப்பிற்கான சர்வதேச ஒன்றியம் (International Union for Conservation of Nature - IUCN) வகைப்படுத்தியுள்ளது.

## மணிப்பூரின் முதல் பெண் தலைமை நீதிபதி

- நீதிபதி அபிலாஷா குமாரி மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமை நீதிபதியாக பதவியேற்றுள்ளார்.
- அம்மாநில ஆளுநர் நஜ்மா-ஹெப்துல்லா, இம்பாலிலுள்ள ஆளுநர் மாளிகையில் நீதிபதிக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இதன் மூலம் இவர் மணிப்பூர் உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் மற்றும் மூன்றாவது முழு நேர தலைமை நீதிபதியாவார்.
- இதற்கு முன்னர், இவர் குஜராத் உயர்நீதிமன்ற நீதிபதியாக பணியாற்றினார். இவர், ஹிமாச்சலப் பிரதேச முன்னாள் முதல்வர் திரு.வீரபத்திரசிங்கின் மகள் என்பது குறிப்பிடத்தக்கது.
- மணிப்பூர் மாநில உயர்நீதிமன்றத்தின் முதல் தலைமை நீதிபதி அபய்மனோகர் சாப்ரே ஆவார். இம்மாநிலத்தில் உயர்நீதிமன்றம் ஏற்படுத்தப்படுவதற்கு முன் இது கௌஹாத்தி உயர்நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவின் மிகப்பெரிய உலக மருந்து பொருட்கள் கருத்தரங்கு

- "இந்திய மருந்து பொருட்கள் மற்றும் இந்திய மருத்துவ சாதனங்கள் 2018" - எனும் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்கள் மீதான சர்வதேச கண்காட்சி மற்றும் கருத்தரங்கு பெங்களூருவில் நடைபெற்றுள்ளது.
- மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்கள் மீதான இந்த மூன்றாவது சர்வதேச கண்காட்சி மற்றும் கருத்தரங்கின் கருப்பொருள் - "மலிவான மற்றும் தரமான சுகாதாரம்"

(Affordable and Quality Healthcare)

- தொழிற்சங்க அமைப்பான பிக்கி (FICCI - Federation of Indian Chamber of Commerce Industry) உடன் இணைந்து மத்திய இராசயனம் மற்றும் உரத்துறை அமைச்சகத்தின் மருந்துப் பொருட்கள் துறை (Department of Pharmaceuticals) இந்த நிகழ்ச்சியை நடத்தியுள்ளது.
- இந்த மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ சாதனங்கள் மீதான கண்காட்சி மற்றும் கருத்தரங்கின் முக்கிய நிகழ்வாக உலக சுகாதார நிறுவனத்தினால் "ஒழுங்குமுறை அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் அவற்றின் முன்தகுதி" (Regulatory System Strengthening and Prequalification) எனும் தலைப்பின் மீது பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டுள்ளது.

## மோடிகேர்- மேற்கு வங்கம் வெளியேற்றம்

- 2018-19 ஆம் நிதி ஆண்டிற்கான பொது பட்ஜெட்டில் மத்திய அரசால் அறிவிக்கப்பட்ட சுகாதார மருத்துவ காப்பீட்டு திட்டமான (Health Care Insurance Plan) "மோடி கேர்" (Modi Care) திட்டத்திலிருந்து நாட்டின் முதல் மாநிலமாக மேற்கு வங்கம் வெளியேறியுள்ளது..
- தன்னுடைய மருத்துவ காப்பீடு திட்டமான சுவஸ்தய சதி திட்டத்தில் (Swasthya Sathi programme) ஏற்கனவே மாநிலத்தில் 50 லட்சம் மக்கள் பதிவு செய்துள்ளனர் என காரணம் சுட்டி மேற்கு வங்கம் மோடி கேர் திட்டத்திலிருந்து வெளியேறியுள்ளது.
- மத்திய நிதி அமைச்சரால் பிப்ரவரி 1 அன்று பொது பட்ஜெட்டில் தேசிய சுகாதார பாதுகாப்புத் திட்டம் (National Health Protection Scheme- NHPS) அறிவிக்கப்பட்டது.
- பிரான்ஸ், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் கூட்டு மக்கட் தொகைகளைக் காட்டிலும் அதிகமான மக்கட் தொகைக்கு தரமான சுகாதார சேவைகளை வழங்கவல்ல உலகின் மிகப்பெரிய சுகாதாரத் திட்டம் இதுவேயாகும்.

## நட்புறவுக் கதவுகள்

- இந்தியா-பாகிஸ்தான் சர்வதேச எல்லையில் அமைந்துள்ள எல்லைச் சாவடியான வாகா-வில் (Wagah) நடைபெறுவதைப் போல இந்திய-வங்கதேச எல்லையில் இருநாட்டு எல்லைக் காவல் படைகளுக்குமிடையே தேச முழக்கத்துடன் கூடிய ஆரவார கொடியிறக்க (beating retreat ceremony) கொண்டாட்டத்தை ஏற்படுத்துவதற்காக மேகாலயாவில் இந்தியா மற்றும் வங்கதேசத்திற்கு இடையே "நட்புறவுக் கதவுகள்" (Friendship gates) திறக்கப்பட்டுள்ளது.
- இந்திய-வங்கதேச எல்லையில் மேகாலயா தலைநகர் ஷில்லாங்கிற்கு அருகே அமைந்துள்ள ஒருங்கிணைந்த சோதனைச் சாவடியில் இந்த எல்லை நட்புறவுக் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.
- மேலும் எல்லைப் பாதுகாப்புப் படைக்கான வெளிச்சாவடி ஒன்றும் (Outpost) உம்சியேம் (Umsyiem) எனும் இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

## முதல் வண்ணத்துப்பூச்சி பூங்கா- மத்தியப் பிரதேசம்

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் முதல் வண்ணத்துப்பூச்சி பூங்கா ரைசென் மாவட்டத்திலுள்ள கோபால்பூர் என்னுமிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பூங்கா 3 ஹெக்டேர் நிலப்பரப்பைக் கொண்டது.

- 65 வகையான வண்ணத்துப்பூச்சியினங்கள் மற்றும் ஏறக்குறைய 137 தாவர வகைகளும் இங்கு இடம் பெற்றிருக்கின்றன.
- இந்தப் பூங்கா சூழலியல் சுற்றுலாவிற்கு (Eco-Tourism) வழி வகுக்கும் என கருதப்படுகிறது.
- வண்ணத்துப்பூச்சி பூங்காக்கள் மாசுபாடற்ற இடங்களாகவும், வேதிப் பொருட்களின் பயன்பாடற்ற இடங்களாகவும் திகழ்கின்றன. அதோடு, இவை வண்ணத்துப்பூச்சிகளைப் பாதுகாக்கவும் அவற்றின் இனங்களைப் பெருக்கவும் உதவி புரிகிறது.

## இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு மையம்-மும்பை

- இந்தியாவின் முதல் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence-AI) மையத்தை மகாராஷ்டிரா அரசு மும்பையில் அமைக்க உள்ளது.
- இந்த மையமானது நான்காம் தொழிற்புரட்சியை ஏற்படுத்துவதற்கான முக்கிய மையமாக இருப்பது மட்டுமில்லாமல் தரவுப் பகுப்பாய்வு மற்றும் கண்டுபிடிப்புகளில் மும்பையை முதலீட்டிற்கான இடமாகவும் மேம்படுத்தும்.
- இதற்கு முன்பாக மஹாராஷ்டிரா அரசு செயற்கை நுண்ணறிவை சுகாதாரத் துறையில் பயன்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
- அதோடு மட்டுமல்லாமல் மஹாராஷ்டிரா அரசு, கனடா அரசுடன் கூட்டுப் பணிக்குழு (joint working group) ஒன்றையும் ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கூட்டுப் பணிக்குழு AI ஒத்துழைப்பிற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## தேசிய வாழைப்பழத் திருவிழா

- கேரளாவின் திருவனந்தப்புரத்திலுள்ள கள்ளியூரில் பிப்ரவரி 17 ஆம் தேதி முதல் 21 தேதி வரை தேசிய வாழைப்பழ திருவிழா நடத்தப்பட்டது.
- நாட்டில் உள்ள பல்வேறு வாழைப்பழ வகைகளை காட்சிப்படுத்துவதற்காகவும் வாழைப்பழம் மற்றும் வாழை மரத்தினுடைய பிற பகுதிகளின் பலதரப்பட்ட பயன்களைக் காட்சிப்படுத்துவதற்காகவும் இந்தத் திருவிழா நடத்தப்படுகின்றது.
- தேசிய வாழைப்பழத் திருவிழாவின் கருப்பொருள் "பல்வகைமையைப் பாதுகாத்தல், அதன் அடையாளத்தை பராமரித்தல், மதிப்புக் கூட்டலை மேம்படுத்துதல் (Conserving Diversity, Preserving identity and promoting value addition) ஆகியனவாகும்.
- கள்ளியூர் கிராம பஞ்சாயத்துடன் இணைந்து அறிவியல் மற்றும் சமூக நடவடிக்கைகளில் புதுமைக்கான மையம் (Centre for innovation in Science & Social Action) இத்திருவிழாவை ஒருங்கிணைத்துள்ளது.
- உலகின் மிகப்பெரிய வாழைப்பழ உற்பத்தியாளர் இந்தியா என்பது குறிப்பிடத்தக்கது.

## மேக்னடிக் மகாராஷ்டிரா

- மேக்னடிக் மஹாராஷ்டிரா கூடுகை மாநாடு - 2018 (Magnetic Maharashtra Convergence Summit) என்ற மாநாட்டை மும்பையில் பிரதமர் தொடங்கி வைத்துள்ளார்.
- "இந்தியாவில் தயாரிப்போம்" (Make in India) திட்டத்தின் வழியிலான மகாராஷ்டிராவின் முதல் உலக முதலீட்டாளர்கள் மாநாடு இதுவாகும்.


- மாநிலத்திற்கு பத்து இலட்சம் கோடி முதலீடுகளை கொண்டு வருவதற்காக இந்த கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.
- மேலும் இம்மாநாட்டில் மகாராஷ்டிராவில் நான்காவது தொழிற்புரட்சிக்காக (Industrial Revolution) இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த தொழிற்துறை பகுதியை ரிலையன்ஸ் நிறுவனம் ஏற்படுத்த உள்ளதாக அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.
- வேலை வாய்ப்பு, நீடித்த தன்மை, உள்கட்டமைப்பு, எதிர்கால தொழிற்துறை ஆகிய 4 முக்கிய தூண்களினை கருத்துருவாகக் கொண்டு இந்த மாநாடு நடத்தப்பட்டுள்ளது.
- நாட்டின் மொத்த அந்நிய நேரடி முதலீட்டில் (FDI - Foreign direct Investment) 51% சதவீதம் மகாராஷ்டிராவில் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## நான்காவது சரக்குப் பெட்டக முனையம்

- மகாராஷ்டிராவின் மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகக் கழகத்தின் நான்காவது சரக்குப் பெட்டக முனையத்தை பிரதமர் துவக்கி வைத்தார்.
- இதனோடு சேர்த்து இந்த துறைமுகத்தின் சரக்குகளைக் கையாளும் திறன் இரண்டு மடங்காக அதிகரிக்கும்.
- இந்தியாவின் மிகப்பெரிய சரக்குப் பெட்டக முனையம் இதுவேயாகும்.
- இந்த முனையம் தாய்க்கப்பல் எனப்படும் நீண்டதூரம் செல்லும் கப்பல்களையும் மிகப்பெரிய சரக்குக் கப்பல்களையும் ஒரு கிலோமீட்டர் ஓடந்துறையில் வைத்து கையாளும் திறன் கொண்டது.
- நான்காவது சரக்குப் பெட்டக முனையம் வடிவமைப்பு, கட்டுமானம், நிதியுதவி, இயக்கம் மற்றும் பரிமாற்றம் என்ற அடிப்படையில் 30 வருட காலத்திற்கான சலுகைக் கால அளவில் 7915 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டு இருக்கின்றது.
- இந்தத் திட்டம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்றப்பட்டது.
- இந்த முனையம் தனி வழியான சரக்கு இரயில் பாதையோடும் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரே தடத்தில் (பாதையில்) 350 பெட்டகங்களை நிறுத்தும் வசதியும் கொண்டது.

## ஹைப்பர்லூப் திட்டம்

- ரிச்சர்ட் பிரான்சன் தலைமையிலான விர்ஜின் குழுமம் மும்பை மற்றும் புனே நகரங்களுக்கு இடையே ஒரு ஹைப்பர்லூப் (மீயொலி வேக) போக்குவரத்து அமைப்பை கட்டமைப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின் மூலமாக இரண்டு நகரங்களுக்கு இடையேயான பயண நேரம் தற்போதைய மூன்று மணி நேரத்திலிருந்து வெறும் 25 நிமிடங்களாக குறையும்.
- முன்மொழியப்பட்டுள்ள இந்த ஹைப்பர்லூப் போக்குவரத்து அமைப்பானது மத்திய புனேவை மும்பை சர்வதேச விமான நிலையத்துடன் இணைக்கும்.
- முழுவதும் மின் பயன்பாட்டுடைய அமைப்பான இது மணிக்கு 1000 கி.மீ. வேகத்தில் பயணிக்கும் திறனுடையது.




- ஹைப்பர்லூப் தொழில்நுட்பமானது ஐந்தாம் வகை போக்குவரத்து அமைப்பாக அறியப்படுகின்றது.
- எத்தகு உராய்வும் இன்றி பயணிக்கவல்ல இது ஓர் நீள் குழல் பயணவகை அமைப்பாகும்.

## இருசக்கர வாகன மருத்துவ ஊர்தி சேவை

- கோவா அரசாங்கமானது தனது கடலோர மாநிலத்தில் மருத்துவ உதவி தேவைப்படும் நோயாளிகளுக்கு விரைந்து சேவையை அளிப்பதற்காக இருசக்கர வாகன மருத்துவ ஊர்தி சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- கோவா முதல்வர் பாரிக்கர், சுகாதார அமைச்சர் விஸ்வஜித் ரானே முன்னிலையில், கடலோரப் பகுதிகள் போன்ற உயர் ஆபத்து கொண்ட இடங்களில் ஈடுபடுத்த உள்ள 20 இரு சக்கர வாகன மருத்துவ ஊர்திகளை தொடங்கி வைத்தார்.
- இந்த இருசக்கர வாகனங்களானது பிராண வாயு சிலிண்டர்கள் உட்பட மருத்துவ வசதிகளுடன் பொருத்தப்பட்டு இருக்கும்.

## வன உயிர் பாதுகாப்பு விரைவு தீர்ப்பு நீதிமன்றங்கள்

- வன உயிர் பாதுகாப்பிற்கான முக்கிய முன்னெடுப்பாக்க, புலிகள், காண்டாமிருகங்கள் மற்றும் பிற வன உயிர்களின் வேட்டையாடலை கட்டுப்படுத்துவதற்கு அஸ்ஸாம் மாநில அரசு மாநில வனப் பாதுகாவலர்களுக்கு சுய-குண்டேற்று துப்பாக்கிகள் (self-loading rifles - SLRs) போன்ற நவீன ஆயுதங்களை வழங்கியுள்ளது.

- புலிகள், காண்டாமிருகங்கள் மற்றும் பிற வன உயிர்களின் பாதுகாப்பு, மீட்பு, மற்றும் மறுவாழ்விற்காக ஆயுதங்கள் மற்றும் உபகரணங்களை நவீனப்படுத்துதல் என்ற புதிய திட்டத்தை அஸ்ஸாம் அரசு தொடங்கியுள்ளது.
- வன விலங்குகளின் வேட்டையாடல் மற்றும் அவை தொடர்பான பிற குற்றங்களை பிரத்தியேகமாக கையாளுவதற்காக நாட்டில் முதல் முறையாக 10 வன உயிர் விரைவுத் தீர்ப்பு நீதி மன்றங்கள் அஸ்ஸாம் அரசினால் அமைக்கப்பட்டுள்ளது.
- வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் ஐந்து தேசியப் பூங்காக்கள், 19 வன உயிர் சரணாலயங்கள் உள்ளன. 91 சதவீத இந்திய காண்டாமிருகங்களுக்கு அஸ்ஸாம் மாநிலம் வாழிடமாக உள்ளது.
- அஸ்ஸாமில் உள்ள ஐந்து தேசிய பூங்காக்களாவன
  - ✓ காஸிரங்கா
  - ✓ மனாஸ்
  - ✓ நமேரி
  - ✓ ராஜீவ் காந்தி ஒராங்
  - ✓ திப்ரு சைக்கோவா
- மனாஸ் மற்றும் திப்ரு சைக்கோவா ஆகியவை அஸ்ஸாமில் உள்ள உயிர்க்கோள இருப்புகளாகும் (Biosphere reserve).

## ஹரியானா - மானிய விலையில் உணவகங்கள்

- பரிதாபாத், குருகிராம், கிஸர், யமுனாநகர் மாவட்டங்களில் ஹரியானா அரசு, அந்தியோதயா ஆஹார் யோஜனா (Antyodaya Aahaar Yojana) திட்டத்தின் கீழ் மானிய விலை உணவகங்களைத் திறந்துள்ளது.
- இந்த உணவகங்கள் பத்து ரூபாய் விலையில் ஏழைகளுக்கு உணவு வழங்கும்.
- இந்தத் திட்டம், ஹரியானாவிலுள்ள பஞ்ச்குலா என்னுமிடத்தில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் தொடங்கப்பட்டது.
- அதிகாரப் பூர்வமாக வறுமைக் கோட்டிற்குக் கீழாக வகைப்படுத்தப்பட்ட ஏழைகள் மற்றும் வீடில்லாதவர்களுக்கு குறைந்த மற்றும் மலிவான விலையில் நல்ல தரமான, ஆரோக்கியமான உணவளிப்பதை நோக்கமாகக் கொண்டது.

## குஜராத் சட்டசபை - புதிய சபாநாயகர்

- வதோதரா தொகுதியைச் சேர்ந்த பாஜக சட்டமன்ற உறுப்பினர் ராஜேந்திர திரிவேதி, 14வது குஜராத் சட்டமன்றத்தின் சபாநாயகராக பட்ஜெட் தொடரின் முதல் நாளிலேயே ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- குஜராத் சட்டசபை அல்லது குஜராத் விதான் சபா ஓரவையை (கீழவை) கொண்ட இந்திய மாநில சட்டசபையாகும். இதன் தலைமையகம் காந்திநகரில் அமைந்துள்ளது.
- நடப்பில், 182 உறுப்பினர்களைக் கொண்டது இந்த சட்டமன்றம். இதில் ஒருவர் பரிந்துரைக்கப்பட்டவர் (Nominated). மற்றவர்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆவர்.

## கஜீரஹோ நடனத் திருவிழா

- மத்தியப் பிரதேச மாநிலத்தின் சத்தர்பூர் மாவட்டத்திலுள்ள கஜீரஹோ கோவில் நகரில் 44-ஆவது கஜீரஹோ நடனத் திருவிழா (Khajuraho Dance Festival) துவங்கியுள்ளது.
- மத்திய பிரதேச அரசின் மாநில கலாச்சார துறையினால் இத்திருவிழா நடத்தப்படுகிறது.
- 6 நாட்கள் நடைபெற உள்ள இத்திருவிழாவில் கதக் (Kathak), ஒடிஸி (Odissi), பரதநாட்டியம் (Bharathanatyam), குச்சுப்புடி (Kuchipudi), கதக்களி (Kathakali) மற்றும் மோகினியாட்டம் (Mohiniattam) உட்பட பல்வேறு நடனங்கள் காட்சிப் படுத்தப்பட உள்ளன.
- மேலும் இவ்வருடம் இத்திருவிழாவின் ஒரு பகுதியாக ஜெர்மனி, பிரான்ஸ், சீனா மற்றும் பல்வேறு நாடுகளினைச் சேர்ந்த சர்வதேச கலைஞர்களின் ஓவியங்களை காட்சிப்படுத்துவதற்காக கலைச் சந்தை (Art Mart) ஒன்றும் நடத்தப்பட உள்ளது.
- வழக்கமாக, இத்திருவிழாவின் போது சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட விஷ்வ நாதா ஆலயம் (Vishwanatha Temple) மற்றும் சூரியக் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட சித்ரகுப்தா ஆலயம் (Chitragupta Temple) ஆகிய ஆலயங்களின் முன்பு திறந்தவெளி அரங்கேற்ற மேடைகளில் நடனங்கள் இயற்றப்படும்.
- கி.பி. 950 – கி.பி. 1050 க்கு இடைப்பட்ட காலத்தில் சண்டேலா (Chandela) வம்ச ஆட்சியாளர்களால் கஜீரஹோவில் இக்கோயில்கள் கட்டப்பட்டன.
- இக்கோவிலில் உள்ள பாலுணர்வு வெளிப்படுத்துக் கற்சிலைகள் (Erotic Sculptures) உலகம் முழுவதும் அறியப்படுபவையாக உள்ளன.

## தடுப்பூசி அட்டை கட்டாயம்

- கேரள மாநில அரசானது தனது புதிய சுகாதாரக் கொள்கையில், மாநிலத்தில் முதலாம் வகுப்பிற்கான பள்ளிச் சேர்க்கைக்கு குழந்தையின் தடுப்பூசி அட்டையை (Vaccination Card) கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும் என முன்மொழிந்துள்ளது.
- ஐந்து வயதிற்கு குறைவான அனைத்து குழந்தைகளும் தடுப்பூசி திறனூட்டப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த வரைவு மருத்துவ கொள்கைக்கு மாநில கேபினேட் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- முதலாம் வகுப்பு பள்ளி சேர்க்கைக்கு தடுப்பூசி அட்டைச் சான்றிதழ்களின் கட்டாய சமர்ப்பித்தல் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.
- மேலும் இந்த வரைவு கொள்கைப்படி, திருநங்கைகளை மாநில சுகாதார கட்டமைப்பின் கீழ் கொண்டுவர, திருநங்கைகளுக்கென மருத்துவ மையங்கள் அனைத்து மாவட்ட மருத்துவமனைகளிலும் அமைக்கப்பட உள்ளது.

## பரிவர்தன் திட்டம்

- ஹரியானா அரசு சுகாதாரம் உட்பட 10 பிரச்சினைகளைக் குறிப்பிட்டுக் காட்டுவதற்காக பரிவர்தன் திட்டத்தை மாநிலத்தின் 46 வட்டாரங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தத் திட்டத்தின் கீழ், ஹரியானா மாநில அரசு, ஊழியர்களுக்கு (Workers) செய்முறைப் பயிற்சி அளிக்கும். இதன் மூலமாக வலுவான வேலையாட்களை மாநிலத்தில் உருவாக்க முடியும்.
- 10 பிரச்சனைகள்

1. நிதியளித்தல்
2. சுகாதார சேவைகளை மேம்படுத்துதல்
3. சந்தைப்பகுதிகளில் நெரிசலைக் குறைத்தல்
4. காற்று மாசுபாட்டை சோதித்தல்
5. திறம் வாய்ந்த கண்காணிப்பு (Effective Policing)
6. வேளாண்மையை நிலையானதாகவும், இலாபகரமானதாகவும் ஏற்படுத்துதல்
7. தூய்மை இந்தியா திட்டத்தை செயல்படுத்துதல்
8. இளைஞர்களை ஈடுபடுத்தல்
9. அடையாளம் தொடர்பான சேவைகள் (identity related services) கிடைப்பதை உறுதி செய்தல்.
10. சாலை விதிகள் மற்றும் நடத்தைகளை உறுதி செய்தல்,

- இந்த திட்டம் அனைத்து வித அரசின் திட்டங்களின் பயன்களும் பொதுமக்களை சென்றடைவதற்கான தனித்துவம் வாய்ந்த திட்டமாகும்.

## காண்டாமிருகங்கள் தினம் - செப்டம்பர் 22

- ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்களின் பாதுகாப்பு பற்றி மக்களிடையே பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அஸ்ஸாம் மாநிலம் செப்டம்பர் 22 ஆம் தேதியை ரைனோ தினமாக (Rhino Day) கொண்டாட உள்ளது.
- மேலும் காண்டாமிருகங்களின் பாதுகாப்பு மற்றும் பேணுதலுக்காக தேசிய ரைனோ திட்டத்தின் (National Rhino Project) வரிசையில் மாநில ரைனோ திட்டம் (State Rhino Project) ஒன்றையும் அஸ்ஸாம் மாநிலம் தொடங்க உள்ளது.
- உலகம் முழுவதும் அறியப்படுபவையாக உள்ள ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் இந்தியாவில் அஸ்ஸாமின் மனாஸ் (Manas) மற்றும் காஸிரங்கா தேசியப்பூங்காவில் மட்டுமே அதிகளவில் காணப்படுகின்றன .

## டிஜிட்டல் முறையிலான திட்ட அனுமதிகள்

- உத்திரப்பிரதேச மாநிலத்தின் முதல் முதலீட்டாளர் மாநாட்டின்போது "நிவேஷ் மித்ரா" (Nivesh Mitra) எனும் டிஜிட்டல் தளம் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்த டிஜிட்டல் தளம் மூலம் முதலீட்டாளர்கள் ஆன்லைன் வழியே தங்களுடைய திட்டங்களுக்கான அனுமதிகளுக்கு (Project Clearance) விண்ணப்பங்களை விண்ணப்பிக்கலாம்.
- இதனால் ஒப்பீட்டளவில் ஊழல் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.
- நிவேஷ் மித்ரா திட்டத்தைத் தொடங்கியுள்ளதன் மூலம் எத்தகு மனித ஆட்படலும் இன்றி திட்டங்களுக்கு முழுவதும் டிஜிட்டல் முறையிலேயே அனுமதி வழங்கும் சேவையை ஏற்படுத்தியுள்ள முதல் இந்திய மாநிலமாக உத்திரப்பிரதேசம் உருவாகியுள்ளது.

## மாநிலங்களவைத் தேர்தல்

- வரும் ஏப்ரல் மாதத்தில் காலியாகவுள்ள 58 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தலை தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- மார்ச் 23-ஆம் தேதி இத்தேர்தல் நடைபெறவுள்ளது.
- 16 மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 58 மாநிலங்களவை உறுப்பினர்களின் பதவிக்காலம் வரும் ஏப்ரல்-மே 2018-உடன் முடிவடைகிறது.
- இதில் அதிகபட்சமாக உத்திரப்பிரதேச மாநிலத்தில் 10 இடங்களுக்கு தேர்தல் நடைபெற உள்ளது.

## IHGF டெல்லி கண்காட்சி (வசந்தகாலம்) 2018

- ஜவுளித்துறை செயலாளர், திரு. அனந்த்குமார் சிங் டெல்லியில் நடந்த இந்திய கைவினை மற்றும் பரிசுக் கண்காட்சியின் (Indian Handicraft and Gift Fair - IHGF) 45வது பதிப்பை வெளியிட்டார்.
- இந்நிகழ்ச்சி கிரேட்டர் நொய்டாவில் உள்ள இந்திய கண்காட்சி மையத்தில் (India Expo-Centre and Mart) நடந்தது.
- கைவினைப் பொருட்கள் துறையானது இந்தியப் பொருளாதாரத்தில் முக்கியப் பங்கு வகிப்பதோடு, கிராமப்புறம் மற்றும் பகுதியளவு நகரமாக (Semi-Urban) வளர்ச்சியடைந்த இடங்களில் அதிகளவில் கைவினை கலைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்குகிறது.
- இது கலாச்சாரப் பண்பாட்டை பாதுகாப்பதோடு, கணிசமான அளவில் அந்நியச் செலாவணியை உருவாக்குகிறது.
- IHGF ஆனது ஆண்டுக்கு இருமுறை நடைபெறும் (வசந்தகாலம் மற்றும் இலையுதிர் காலப் பதிப்புகள்) ஆசியாவின் மிகப்பெரிய கைவினைக் கண்காட்சியாகும்.
- இந்தக் கண்காட்சி கைவினைப் பொருட்களுக்கான ஏற்றுமதி மேம்பாட்டு மையத்தால் (Export Promotion Council for Handi Crafts - EPCH) நடத்தப்பட்டது.

## 'ஒரு மாவட்டம் ஒரு உற்பத்தி பொருள்' திட்டம்

- மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்நாட்டு பொருட்களின் (Indigenous Products) உற்பத்தியை மேம்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட "ஒரு மாவட்டம்: ஒரு ஒரு உற்பத்தி பொருள்" (One district one product) திட்டத்திற்கு உத்திரபிரதேச கேபினேட் ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் அமைந்துள்ள பாரம்பரியத் தொழிற்சாலைகளுக்கு அவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய உந்துதல் வழங்கப்படும்.
- மேலும் இத்திட்டத்தின் கீழ் மாநிலத்தில் 3 நாட்கள் நடைபெற உள்ள UP திவாஸ் நிகழ்ச்சியில், ஒவ்வொரு மாவட்டத்தினுடைய ஓர் உள்ளூர் உற்பத்திப் பொருள் காட்சிப்படுத்தப்படும்.
- "ஒரு மாவட்டம் ஒரு உற்பத்திப் பொருள்" திட்டமானது அடிப்படையில் ஒரு ஜப்பானிய வணிக மேம்பாட்டு கருத்துருவாக்கமாகும்.

# பிரபலமானவர்கள் , விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இஹ்சான் டோக்ராமாசி பரிசு

- குடும்ப சுகாதாரம் சார்ந்த துறையில் மிகச்சிறந்த சேவையாற்றியமைக்காக உலக சுகாதார நிறுவனத்தின் கௌரவமிக்க பரிசான இஹ்சான் டோக்ராமாசி குடும்ப சுகாதார பவுண்டேஷன் பரிசிற்கு (Ihsan Dogramaci Family Health Foundation Prize) நிதி ஆயோக் உறுப்பினரான வினோத் பவுல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இவ்விருதைப் பெற உள்ள முதல் இந்தியர் இவரேயாவார்.
- ஜெனிவாவில் உள்ள உலக சுகாதார மையத்தின் தலைமையகத்தில் வருகின்ற மே மாதத்தில் இப்பரிசு இவருக்கு வழங்கப்பட உள்ளது.
- உலகளவில், குறிப்பாக வளரும் நாடுகளின் சமூகங்களில் அமைந்துள்ள குடும்பங்களினுடைய நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியத்தை அதிகரிப்பதற்காக வேண்டி இவர் ஆற்றிய தனித்துவமிக்க பங்களிப்பின் காரணமாக உலக சுகாதார நிறுவனத்தின் நிர்வாக வாரியத்தால் வினோத் பவுல் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

### *பரிசைப் பற்றி*

- குடும்ப சுகாதார களத்தில் மேற்கொள்ளப்படும் தனித்துவ சேவைகளுக்கு அங்கீகாரமளிப்பதற்காக உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்படும் ஓர் உலகளாவிய கௌரவமே இஹ்சான் டோக்ராமாசி குடும்ப சுகாதார பவுண்டேஷன் பரிசாகும்.
- இவ்விருதானது 1980-ஆம் ஆண்டு, இஹ்சான் டோக்ராமாசி எனும் குழந்தை நல மருத்துவரால் நிறுவப்பட்டது.

## SAI இயக்குநர் - நீலம் கபூர்

- நியமனங்களுக்கான மத்திய அமைச்சரவை குழு இந்திய விளையாட்டு ஆணையத்தின் (Sports Authority of India – SAI) புதிய இயக்குநர் ஜெனரலாக நீலம் கபூரை நியமித்துள்ளது.
- 1982ஆம் ஆண்டின் இந்திய தகவல் சேவை பணிப்பிரிவைச் சேர்ந்த இவர், பத்திரிக்கை தகவல் ஆணையத்தின் (PIB-Public Information Bureau) முதன்மை இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

### *இந்திய விளையாட்டு ஆணையம்*

- நாட்டில் விளையாட்டுத் துறையை மேம்படுத்துவதற்காக 1984ஆம் ஆண்டு மத்திய விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட தேசிய உச்ச விளையாட்டு அமைப்பே இந்திய விளையாட்டு ஆணையம் (SAI – Sports Authority of India) ஆகும்.
- இதன் தலைமையகம் டெல்லியிலுள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் ஆகும் .

## அணுசக்தி எரிபொருள் ஆய்வகம் - தினேஷ் ஸ்ரீவஸ்தவா

- அணுசக்தி எரிபொருள் ஆய்வகத்தின் (Nuclear Fuel Complex) தலைமை செயல் நிர்வாகியாக

புகழ்பெற்ற விஞ்ஞானியான தினேஷ் ஸ்ரீவஸ்தவா நியமிக்கப்பட்டுள்ளார்.

***அணுசக்தி எரிபொருள் ஆய்வகம்***

- பிரதமர் அலுவலகத்தின் கீழ் செயல்படும் அணுசக்தித் துறையின் (Department of Atomic Energy) முக்கிய தொழிற் பிரிவே தேசிய எரிபொருள் ஆய்வுக் கூடமாகும்.
- 1971ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட இதன் தலைமையகம் ஹைதராபாத்தில் உள்ளது.

## சாகித்ய அகாடமியின் பாஷா சம்மன் விருது 2018

- மாகாஹி மொழி எழுத்தாளரான ஷேஷ் ஆனந் மதுகருக்கு சாகித்ய அகாடமியின் 2018ஆம் ஆண்டிற்கான பாஷா சம்மன் (Basha Samman) விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதைப் பெறும் இரண்டாவது மாகாஹி மொழி எழுத்தாளர் இவரேயாவார்.
- மாகாஹி மொழியின் "எக்லாவ்யா" மற்றும் "மகாஹி புலாசல் ஹே" போன்றவை இவரின் புகழ் பெற்ற படைப்புகளாகும்.

***பாஷா சம்மன் விருது***

- நடப்பில் பொதுவாக சாகித்ய அகாடமி விருதானது இந்தியாவின் 24 பிராந்திய மொழிகளுக்கு வழங்கப்படுகின்றது.
- ஆனால் பாஷா சம்மன் விருதானது சாகித்ய அகாடமியின் 24 மொழிகளுள் அல்லாது ஆனால் அவற்றிற்கு சமமாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பேசப்படும் பிற மொழிகளுக்கு வழங்கப்படுகின்றது.
- சமவகையில் தங்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என்பதை பிற மொழி எழுத்தாளர்களும் (அதாவது சாகித்ய அகாடமியின் 24 மொழி தவிர்த்த பிற கவிஞர்கள்) உணர்வதற்காக வேண்டி பாஷா சம்மன் விருது ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது.

## ஆசிய பல்கலைக் கழகங்களுக்கான டைம்ஸ் தரவரிசை 2018

- ஆசியாவில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசையை டைம்ஸ் உயர் கல்விக்கான உலக பல்கலைக்கழகங்கள் தரவரிசை அமைப்பு வெளியிட்டுள்ளது.
- இதில் முன்னணி 50 ஆசிய பல்கலைக்கழகங்களில் இரு இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.
- முதல் 50 இடங்களில், இந்தியாவின் இந்திய அறிவியல் நிறுவனம் (Indian Institute of Science) 29-வது இடத்திலும், மும்பையின் இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனம் (Indian Institute of Technology-IIT) 44-வது இடத்திலும் உள்ளன.
- கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் இவ்வாண்டு மொத்தம் 17 இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் முதல் 200 இடங்களில் உள்ளன.
- கடந்த ஆண்டிற்கான பட்டியலில் 41-வது இடத்திலிருந்த சென்னையின் இந்திய தொழில்நுட்ப கழகமானது (Indian Institute of Technology-IIT) பெரிதளவு பின்தங்கி நடப்பாண்டிற்கான பட்டியலில் 103 வது இடத்தைப் பிடித்துள்ளது.
- கடந்த ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டிற்கான தரவரிசை பட்டியலில் சற்று அதிகமான இந்திய உயர்கல்வி நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## ICC-ன் முதல் தனி பெண் இயக்குநர்

- ❖ பெப்சிகோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் தலைமை செயல் அதிகாரியான இந்திரா நூயி சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (International Cricket Council - ICC) முதல் தனி பெண் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இரண்டாண்டு காலத்திற்கு தனி இயக்குநராக (Independent Director) இந்திரா நூயி நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ இரண்டாண்டு பதவி காலமுடைய ஒரு நியமன காலத்திற்கு இவர் மேலும் இருமுறை நியமிக்கப்படலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.
- ❖ அதிகபட்சமாக ஒருவரை 6 ஆண்டுகள் வரை தலைவராக நியமிக்கலாம் என்பது ICC-யின் நியமன விதியாகும்.
- ❖ சர்வதேச அளவில் கிரிக்கெட் தொடர்பான நிர்வாக ஆளுகையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் கிரிக்கெட் சட்ட திருத்தங்களின் ஒரு பகுதியாக 2017-ஆம் ஆண்டு ICC-ஆல் தனி இயக்குநர் என்ற புதிய பொறுப்பு ஏற்படுத்தப்பட்டது.

## AICFB - விளம்பரத் தூதர்

- ❖ கிராண்ட் மாஸ்டர் விதித் குஜராத்தி அகில இந்திய பார்வையிழந்தோர்களுக்கான செஸ் கூட்டமைப்பின் (All India Chess Federation for the Blind - AICFB) விளம்பரத் தூதராக நியமிக்கப்பட்டு உள்ளார்.



- ❖ விதித் குஜராதி இந்தியாவின் நான்காவது கிராண்ட் மாஸ்டர் ஆவார்.

- இந்தியாவின் மற்ற மூன்று கிராண்ட் மாஸ்டர்கள்
    1. விஸ்வநாதன் ஆனந்த்
    2. கிருஷ்ணன் சசிகிரண்
    3. பெந்தலா ஹரிகிருஷ்ணா
- பார்வையற்றவர்களுக்கான தேசிய முதல் தர சதுரங்க சாம்பியன்ஷிப் மும்பையில் நடத்தப்பட்டது.
- இதில் பங்கேற்கும் முன்னணி வீரர்கள் பல்கேரியாவில் ஜூலை மாதத்தில் நடக்கவிருக்கும் உலக அணி சாம்பியன் ஷிப் போட்டிகளுக்கும் (World Team Championship) போலந்தில் நடக்கவிருக்கும் உலக பார்வையற்றோர் ஜுனியர் சாம்பியன் ஷிப் போட்டிகளுக்கும் (World Junior for Blind) இந்திய அணிக்கான குழுவில் சேர்க்கப்படுவர்.

## சாகித்ய அகாடமியின் புதிய தலைவர் - சந்திர சேகர கம்பர்

- கன்னட இலக்கியவாதியும் (litterateur) ஞான பீட விருது பெற்றவருமான சந்திர சேகர் கம்பர் சாகித்ய அகாடமியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு இவர் சாகித்ய அகாடமியின் தலைவராக பதவி வகிக்க உள்ளார்.
- ஹிந்தி கவிஞர் மாதவ் கௌசிக் சாகித்ய அகாடமியின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இலக்கியத்திற்கான நாட்டின் உயரிய அமைப்பான சாகித்ய அகாடமியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள மூன்றாவது கன்னட எழுத்தாளர் இவராவார்.
- மேலும் இவர் ஞானபீட விருது, சாகித்ய அகாடமி விருது, பத்ம ஸ்ரீ, காளிதாஸ் சம்மன் போன்ற பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

### *சாகித்ய அகாடமி விருது*

- இலக்கியத்திற்கான இந்தியாவின் தேசிய அகாடமியான (National Academy of letters) சாகித்ய அகாடமி 1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் டெல்லியின் இரபிந்திர பவனில் உள்ளது.
- இது இந்திய மொழிகளின் இலக்கியங்களை மேம்படுத்துவதற்கென அமைக்கப்பட்ட ஓர் நிறுவனமாகும்.
- ஆங்கிலம் உட்பட மொத்தம் 24 இந்திய மொழிகளில் இலக்கியப் பணிகளை மேற்கொள்ளும் ஒரே அமைப்பு சாகித்ய அகாடமியாகும்.
- மேலும் இது இந்திய மொழி இலக்கியங்களின் ஆய்வு, பிரசுரிப்பு மற்றும் மேம்பாடு போன்றவற்றை மேற்கொள்ளும் மத்திய இலக்கிய ஆராய்ச்சி நிறுவனமாகும்.

## பிரேசிலுக்கான இந்திய தூதர்

- 1987 ஆண்டின் இந்திய அயலுறவு பணி அதிகாரியான அசோக் தாஸ் பிரேசிலுக்கான இந்தியாவின் புதிய தூதராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- நடப்பில் மத்திய வெளியுறவு விவகாரத்துறை அமைச்சகத்தில் கூடுதல் செயலாளராக பணியாற்றி வரும் இவர் இதற்கு முன் ஐஸ்லாந்திற்கான இந்திய தூதராகவும்

பணியாற்றியுள்ளார்.

- பிரிக்ஸ் பொருளாதார குழுவில் உறுப்பினர்களாக உள்ள இந்தியா மற்றும் பிரேசிலானது ஜெர்மனி மற்றும் ஜப்பானுடன் இணைந்து ஜி-4 குழுவின் உறுப்பினர்களாகவும் உள்ளது.
- இந்தியா மற்றும் பிரேசில் தென் ஆப்பிரிக்காவுடன் இணைந்து இப்சா பேச்சுவார்த்தை மன்றத்தினையும் (IBSA) ஏற்படுத்தியுள்ளது.
- தெற்கத்திய நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவதும் (South-South Cooperation), ஆசிய-ஆப்பிரிக்க-தென் அமெரிக்க நாடுகளிடையே பெரிய அளவிலான புரிதலை ஏற்படுத்துவதும் இப்சாவின் நோக்கமாகும்.

## இப்ராஹிம் பரிசு - எல்லன் ஜான்சன் சர்லீப்

- முன்னாள் லைபீரிய அதிபரான எல்லன் ஜான்சன் சர்லீப்–பிற்கு 2018 ஆம் ஆண்டிற்கான ஆப்பிரிக்கத் தலைமைத்துவத்தில் சாதனை புரிந்தமைக்கான இப்ராஹிம் பரிசு (Ibrahim Prize for Achievement in African Leadership) வழங்கப்பட்டுள்ளது.



- எல்லன் ஜான்சன் சர்லீப் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஆப்பிரிக்க நாட்டுப் பெண் தலைவராவார் (first elected female head of state in Africa).
- மேலும் எல்லன் ஜான்சன் சர்லீப் இவ்விருதைப் பெறும் முதல் பெண் தலைவருமாவார்.
- ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவிக்காலத்தில் மெச்சத்தகுந்த முறையில் சிறப்பாக தலைமையாற்றிய தலைவர்களுக்கு ஆப்பிரிக்காவில் வழங்கப்படும் உயரிய விருதே ஆப்பிரிக்கத் தலைமைத்துவத்தில் சாதனை புரிந்தமைக்கான இப்ராஹிம் பரிசு ஆகும்.
- பரிசுக்குத் தகுதியானவர் கடைசி மூன்றாண்டுகளில் தன்னுடைய பதவிக்காலத்தை முடித்திருக்க வேண்டும்
- எல்லன் ஜான்சன் சர்லீப் ஆப்பிரிக்க நாடான லைபீரியாவில் 12 ஆண்டுகள் அதிபராக பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.
- இவரது பதவிக்காலம் இவ்வாண்டின் ஜனவரி 22ஆம் தேதியுடன் முடிவடைந்தது.

## யாஷ் சோப்ரா நினைவு விருது

- பிரபல புகழ்பெற்ற பாடகி ஆஷா போஸ்லே-விற்கு ஐந்தாவது யாஷ் சோப்ரா நினைவு விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2012ஆம் ஆண்டு மறைந்த முன்னணி பட இயக்குநரான யாஷ் சோப்ராவின் நினைவாக யாஷ் சோப்ரா நினைவு விருது எம்.பி. T.சுப்பராமி ரெட்டி அவர்களால் நிறுவப்பட்டது.
- இந்தி சினிமாத்துறைக்கு சிறப்பாக பங்காற்றியமைக்காக ஆஷா போஸ்லே-விற்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் பழம்பெரும் பாடகி லதாமங்கேஸ்கர், அமிதாப் பச்சன் போன்றோர் இவ்விருதினைப் பெற்றுள்ள முக்கிய பிரபலங்களாவர்.

## அறிவியல் மற்றும் பொறியியல் அகாடமி விருது

- இந்தியாவைச் சார்ந்த பதிகணினியல் பொறியாளர் விகாஸ் சத்யேவிற்கு அறிவியல் மற்றும் பொறியியல் அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது.
- அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் நடைபெற்ற ஆஸ்கார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விருதுகள் 2018 விழாவின் பொழுது இவ்விருது வழங்கப்பட்டது.
- இந்த அறிவியல் மற்றும் பொறியியல் அகாடமி விருதானது திரைப்பட தொழில்துறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் அறிவியல் முன்னேற்றங்களையும் சாதனைகளையும் அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்படுகிறது.
- சத்யேவின் குழுவானது "ஷாட் ஓவர் K1 காமிரா" அமைப்பு எனும் படக்கருவியினை கருத்துருவாக்கம் செய்து, வடிவமைத்து அதனை செயல்படுத்தியதற்காக இந்த விருது அக்குழுவிற்கு வழங்கப்பட்டது.
- ஷாட் ஓவர் K1 படக்கருவி அமைப்பானது மேற்பரப்பிலிருந்து உயரமான இடத்தில் உபயோகிக்கப்படும் படக்கருவி அமைப்பாகும்.
- இந்த அமைப்பானது ஹெலிகாப்டரின் அடிப்பகுதியில் பொருத்தும் வகையில் படக்கருவி மற்றும் ஒளி வில்லை அமைப்பை உடையது ஆகும்.
- இந்த படக்கருவி அமைப்பின் முக்கிய பணியானது ஹெலிகாப்டரின் அதிர்வுகள் படக்கருவியின் நிலையை அதிரச் செய்யாது நிலையான காட்சிகளைப் பதிவு செய்ய உதவுவது ஆகும்.
- இந்த படக்கருவி அமைப்பினை வடிவமைத்த குழுவினர்,
    1. விகாஸ் சத்யே
    2. ஜான் காயல்
    3. பிராட் ஹர்ன்மடெல்
    4. ஷான் பக்கிங்ஹாம்

## 2017ஆம் "வருடத்திற்கான தொடக்க நிறுவனம்" ('Start Up of the year' 2017)

- இந்தியாவின் முதல் மற்றும் மிகப்பெரிய குறுவிநியோகத் தளமான (Micro-delivery platform)

மில்க் பேஷ்கட் (Milk basket) ஆனது 2017ஆம் 'வருடத்திற்கான தொடக்க நிறுவனம்' என்று 7வது சிறு வணிக விருதுகளில் அங்கீகரிக்கப்பட்டது.

- வருடத்திற்கான தொடக்க நிறுவனங்கள் என்ற விருதானது உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் பெரியதாக வளரக்கூடிய சிறந்த ஆற்றலைக் கொண்டிருக்கும் 7 வருடம் அல்லது அதற்கும் குறைவான வயதைக் கொண்ட இளம், சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.
- மிகவும் விரும்பத்தக்க விருதுகள் நிகழ்ச்சியாகக் கருதப்படும் சிறு வணிக விருதுகள் 2018 (Small business awards 2018) பிரான்சைஸ் இந்தியா குழுமத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விருது வழங்கும் விழா புது தில்லியில் நடைபெற்றது.

## கிருஷ்ண குமாரி கோலி

- இஸ்லாமிய பெரும்பான்மை நாடான பாகிஸ்தானின் செனட் அவைக்கு இரண்டாவது பெண் செனட் உறுப்பினராக பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தைச் சேர்ந்த கிருஷ்ண குமாரி கோலி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- இதுவரை பாகிஸ்தான் மக்கள் கட்சியைச் (PPP-Pakistan People's Party) சேர்ந்த ரத்னா பகவன்தாஸ் சாவ்லா மட்டுமே பாகிஸ்தான் செனட்டின் ஒரே இந்து பெண் உறுப்பினராக இருந்து வருகிறார்.
- பாகிஸ்தானின் செனட் அவைக்கு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் பாகிஸ்தானிய தலித் சமூகப் பெண் கிருஷ்ணா குமாரி கோலி ஆவார்.
- சிந்து சட்டமன்றப் பேரவையிலிருந்து செனட் அவைக்கான சிறுபான்மையினர் இடத்தில் ஆளும் கட்சியான PPPஆல் நியமிக்கப்பட்டுள்ள கிருஷ்ணகுமாரியின் ஆவணங்களை பாகிஸ்தான் தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டுள்ளது.
- பாகிஸ்தான் அட்டவணை சாதிகள் அவசரச் சட்டம் 1957-ன் அட்டவணை எண்-23ல் கிருஷ்ண குமாரி கோலியின் சாதி குறிப்பிடப்பட்டுள்ளது.

## நடிகை ஸ்ரீதேவி மறைவு

- புகழ்பெற்ற நடிகை ஸ்ரீதேவி துபாயில் காலமானார்.
- 1969-ஆம் ஆண்டு "துணைவன்" எனும் தமிழ் திரைப்படத்தில் குழந்தை நட்சத்திரமாக திரைத் துறையில் ஸ்ரீதேவி அறிமுகமானார்.
- 1978 ஆம் ஆண்டு "சொல்வ சவான்" (Solva Sawan) எனும் திரைப்படம் மூலம் இவர் ஹிந்தி திரைத்துறையில் அறிமுகமானார்.
- இந்திய சினிமாவில் தமிழ், தெலுங்கு, ஹிந்தி, மலையாளம், கன்னடம் போன்ற பல்வேறு மொழிகளில் இவர் நடித்துள்ளார்.
- நாட்டின் நான்காவது குடிமை விருதான பத்மஸ்ரீ விருது 2013-ஆம் ஆண்டு இவருக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## குன்வர் பாய்

- தூய்மை இந்தியா திட்டத்தின் நல்லெண்ணத் தூதர், குன்வர் பாய் மரணமடைந்தார்.

அவருக்கு வயது 106.

- தூய்மை இந்தியா திட்டத்தால் ஈர்க்கப்பட்ட குன்வர்பாய் அவருடைய சொத்தாக இருந்த ஆடுகளை விற்று, ரூ. 22,000 நிதியைப் பெருக்கினார். இந்தப் பணத்தை, சத்தீஸ்கர் மாநிலத்தின், தாம்தரி மாவட்டத்தில் அமைந்துள்ள கோத்தபாரி கிராமத்தில் கழிப்பறையைக் கட்டுவதற்கு பயன்படுத்தினார்.
- குன்வர் பாய், தன்னுடைய இந்த முயற்சிக்காக (Open Defecation Free) பிரதமரால் கவுரவிக்கப்பட்டார். 2016-ஆம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தின் நல்லெண்ணத் தூதராக அவர் அறிவிக்கப்பட்டார்.
- குன்வர் பாயின் முயற்சியால், தாம்தரி மாவட்டம் இந்தியாவின் முதல் திறந்த வெளிக் கழிப்பறையில்லா மாவட்டமாக உருவெடுத்தது.

### முன்னாள் மத்திய அமைச்சரவை செயலாளர் TSR சுப்பிரமணியன் மறைவு

- முன்னாள் மத்திய அமைச்சரவை செயலர் TSR சுப்பிரமணியன் டெல்லியில் காலமானார்.
- இவர் 1961-ஆம் ஆண்டு உத்திரப்பிரதேச மாநிலப் பிரிவைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரியாவார்.
- குடிமைப்பணி அதிகாரிகளின் பணிகளில் அரசியல் தலையீட்டைத் தடுக்க உச்சநீதிமன்றத்தில் பொது நல வழக்கைத் தாக்கல் செய்தார். இதை விசாரித்த உச்சநீதிமன்றம் குடிமைப்பணி அதிகாரிகளுக்கு தனிவாரியம் அமைக்க மத்திய, மாநில அரசுகளுக்கு 2013-ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பித்தது.
- மத்திய ஜவுளித்துறை அமைச்சகத்தின் செயலாளராக பணியாற்றியுள்ள இவர், கல்வி மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பாக மத்திய அரசால் அமைக்கப்பட்ட குழுக்களின் தலைவராகவும் செயல்பட்டுள்ளார்.
- இவர் இந்திய ஆட்சி அமைப்பு முறை (Indian Polity), ஆட்சிமுறை (Governance) தொடர்பாக மூன்று புத்தகங்களை எழுதியுள்ளார். அவை,
    1. Journeys Through Babudom and Netaland - Government of India.
    2. Government in India: An Inside View
    3. India at Turning Point: The Road to Good Governance.

## விளையாட்டுச் செய்திகள்

### டேபுள் டென்னிஸ் தேசிய போட்டிகள்

- 2018 ஆம் ஆண்டிற்கான 11 ஈவன் தேசிய சீனியர் டேபுள் டென்னிஸ் சாம்பியன் ஷிப் போட்டியில் தமிழ்நாடு டென்னிஸ் வீரர் அஜந்தா ஷரத் கமல் வெற்றி பெற்றுள்ளார். இது இப்போட்டியின் 79 ஆவது பதிப்பாகும்.
- இதனோடு சேர்ந்து இவர் இதுவரை 8 முறை ஆண்களுக்கான ஒற்றையர் தேசிய சாம்பியன் ஷிப் பட்டத்தை வென்று கமலேஷ் மேத்தாவுடன் சமநிலை வகிக்கிறார்.
- மேலும் பெண்கள் பிரிவில் மேற்கு வங்கத்தின் சுதிர்தா முகர்ஜி சாம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

## U-19 கிரிக்கெட் உலகக்கோப்பை

- நியூசிலாந்தின் மவுண்ட் மவுண்கனுய்–யில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா அணியை வீழ்த்தி இந்திய U-19 அணி 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பையை வென்றுள்ளது.
- இந்த வெற்றியோடு சேர்த்து மொத்தம் நான்கு முறை U-19 உலகக் கோப்பை வென்ற உலகின் முதல் நாடாக இந்தியா உருவாகியுள்ளது.
- மேலும் இப்போட்டியின் ஆட்ட நாயகன் விருது மற்றும் தொடர் நாயகன் விருது முறையே இந்திய அணி வீரர்களான மன்ஜோத் கல்ராவுக்கும், சுப்மன் கில்-லுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் அனுகுல் ராய் மொத்தம் 14 விக்கெட்டுகளை வீழ்த்தித் தொடரின் முன்னணி விக்கெட் சாய்ப்பாளராக உருவாகியுள்ளார்.
- இது வரை ஆஸ்திரேயா அணி மூன்று முறை U-19 உலகக் கோப்பையை வென்றுள்ளது.
- இது வரை ஆறு முறை இந்திய அணி U-19 உலகக் கோப்பையில் இறுதிப் போட்டியில் விளையாடியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
- அணியின் பயிற்சியாளர் ராகுல் டிராவிட் ஆவார்.

## இந்திய ஓபன் 2018

- BWF வோர்ல்டு டூர் சூப்பர் 500 பாட்மின்டன் போட்டியின் இறுதி ஆட்டத்தில் சீனாவின் ஷி யுகி தைவான் வீரர் சோவ் டியன் செனினை வீழ்த்தி இந்திய பாட்மிண்டன் ஓபனின் ஆண்கள் ஒற்றையர் பாட்மிண்டன் பட்டத்தை வென்றுள்ளார்.
- இந்திய பாட்மிண்டன் ஓபனின் ஆண்கள் ஒற்றையர் பட்டத்தை வெல்லும் முதல் சீனர் இவரேயாவார்.
- பெண்கள் ஒற்றையர் பிரிவில் சீனாவின் பெய்வேன் ஜாங் இந்தியாவின் சிந்துவை வீழ்த்தி இந்திய ஓபன் பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றுள்ளார்.
- இது பெய்வான் ஜாங்-கின் முதல் சர்வதேச பட்டமாகும்.

## முதல் பெண் கிரிக்கெட்டர் – 200 ODI விக்கெட்டுகள்

- இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஜீலன் கோஸ்வாமி ஒருநாள் போட்டியில் 200 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள முதல் பெண் கிரிக்கெட்டராக சாதனை படைத்துள்ளார்.
- தென் ஆப்பிரிக்க நாட்டின் கிம்பர்லி நகரில் தென் ஆப்பிரிக்க மகளிர் கிரிக்கெட் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்தில் தொடக்க வீராங்கனையான லௌரா வோல்வார்டின் விக்கெட்டை சாய்த்து ஜீலன் தன்னுடைய 200 ஆவது விக்கெட்டை கைப்பற்றினார்.
- அதே போல், ஆண்களுக்கான ஒருநாள் போட்டியில் 200 விக்கெட்டுகளை வீழ்த்தியவரும் இந்தியரே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தியாவின் கபில்தேவ் இச்சாதனையைப் படைத்தவராவார்.

- மேலும் ஜீலன் கோஸ்வாமி சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் (ICC – International Cricket Council) 2007-ஆம் ஆண்டின் சிறந்த வீரருக்கான விருதையும் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கேலோ இந்தியா விளையாட்டுகள்

- கேலோ இந்தியா பள்ளிகளுக்கான விளையாட்டுகளின் (Khelo India School Games - KISG) முதல் மற்றும் துவக்கப் பதிப்பு புது தில்லியில் உள்ள இந்திரா காந்தி உள்விளையாட்டு அரங்கில் ஜனவரி 31, 2018 முதல் பிப்ரவரி 08, 2018 வரை நடைபெற்றது.
- பிரதமர் நரேந்திர மோடி இப்போட்டிகளை துவங்கி வைத்தார். கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இப்போட்டிகள் நடத்தப்பட்டன.

**MEDALS TALLY: TOP 10**

| | G | S | B | Total |
|---|---|---|---|---|
| Haryana | 38 | 26 | 38 | 102 |
| Maharashtra | 36 | 32 | 43 | 111 |
| Delhi | 25 | 29 | 40 | 94 |
| Karnataka | 16 | 11 | 17 | 44 |
| Manipur | 13 | 13 | 8 | 34 |
| Uttar Pradesh | 10 | 24 | 28 | 62 |
| Punjab | 10 | 5 | 20 | 35 |
| Kerala | 7 | 11 | 10 | 28 |
| Tamil Nadu | 6 | 11 | 11 | 28 |
| West Bengal | 5 | 4 | 6 | 15 |

- 102 பதக்கங்களைப் பெற்று (38 தங்கம், 26 வெள்ளி, 38 வெண்கலம்) ஹரியானா மாநிலம் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.
- 111 பதக்கங்களைப் பெற்ற (36 தங்கம், 32 வெள்ளி, 43 வெண்கலம்) மகாராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடத்தையும், டெல்லி மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

## தேசிய கால்பந்துப் போட்டி - தமிழகம்

- ஒடிஸா மாநிலத்தின் கட்டாக் நகரில் உள்ள பராபதி விளையாட்டரங்கில் நடைபெற்ற தேசிய மகளிர் சீனியர் கால்பந்து சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் மணிப்பூர் அணியை 2-1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தமிழக மகளிர் கால்பந்து அணி முதன் முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.
- தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் தொடரில் முதல் முறையாக தமிழக அணி இறுதி ஆட்டத்தில் விளையாடியுள்ளது.
- தமிழக மகளிர் கால்பந்து அணி சார்பாக அணி கேப்டன் இந்துமதி ஒருகோலும் இந்திராணி ஒருகோலும் அடித்தனர். மணிப்பூர் சார்பாக ரதன் பாலா ஒருகோல் அடித்தார்.

## பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்

- பாட்மிண்டன் பயிற்சியாளர் மற்றும் அனைத்து இங்கிலாந்து பாட்மிண்டன் சாம்பியனான (All England Champion) கோபி சந்த் இந்தியாவின் மிகப்பெரிய, உடற்கல்வி

பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கக் கூடிய திட்டத்தை (Train the Trainers) தொடங்கியுள்ளார்.

- இத்திட்டத்தின் மூலம் குஜராத்தில் உள்ள 1500 உடற்கல்வி ஆசிரியர்களுக்கு உடற்கல்வி தொடர்பான நவீன பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.
- உடற்கல்வி ஆசிரியர்களின் திறன்களை வளர்ப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.
- அதன் மூலம் அவர்களால் விளையாட்டில் உயரவேண்டுமென ஆர்வம் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கு சரியான விளையாட்டு தொழில்நுட்பத்தை வழங்க இயலும்.
- இது ELMS ஸ்போர்ட்ஸ் பவுண்டேஷனின் இலாப நோக்கமற்ற திட்டமாகும்.
- இந்தியாவின் ஒலிம்பிக் பதக்க வீரரான அபினவ் பிந்த்ராவும், கோபிசந்த்தும் இத்திட்டத்திற்கான அறிவுரையாளர் (Mentor) மற்றும் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ATP டென்னிஸ் தரவரிசை - ரோஜர் பெடரர்

- ரோட்டர்டேம் ஓபனை வென்றதைத் தொடர்ந்து ஆண்கள் ஒற்றையருக்கான ATP தரவரிசையில் உலகின் மிகவும் வயதான உலக நம்பர் 1 வீரராக சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர் உருவாகியுள்ளார்.
- 20 முறை கிராண்ட்ஸ்லாம் வென்றுள்ள வீரரான ரோஜர் பெடரர் ரோட்டர் டேமில் நடைபெற்ற போட்டியில் கிரிகோர் டிமிட்ரோவினை வீழ்த்தி தன்னுடைய 97வது பட்டத்தை வென்றார்.
- இதற்கு முன் ATP தரவரிசையின் மிகவும் வயதான நவம்பர் 1 வீரர் என்ற சாதனையை கொண்டிருந்த அமெரிக்காவின் ஆண்ட்ரே அகாசியை காட்டிலும் பெடரர் 3 மாதம் பெரியவராவார்.



| Oldest World Number 1s in Men's Tennis | |
|---|---|
| Roger Federer | 36 years, 195 days |
| Andre Agassi | 33 years, 133 days |
| Rafael Nadal | 31 years, 260 days |
| Roger Federer | 31 years, 88 days |
| Jimmy Connors | 30 years, 340 days |
| Ivan Lendl | 30 years, 158 days |

## புவனேஸ்வர் குமார் சாதனை

- சர்வதேச கிரிக்கெட்டின் மூன்று வடிவங்களிலும் 5 விக்கெட்டுகளை (Five Wicket haul) வீழ்த்தியுள்ள முதல் இந்திய பந்து வீச்சாளர் என்ற சாதனையை புவனேஸ்வர் குமார் படைத்துள்ளார்.

- இதற்கு முன் இத்தகு சாதனையைப் படைத்துள்ள பிற சர்வதேச பந்து வீச்சாளர்கள் உமர்குல், டிம் சௌதி, அஜந்தா மெண்டிஸ், லசித் மலிங்கா, இம்ரான் தாஹீர்.

## விராட்கோலியின் சாதனைகள்

- சர்வதேச அளவில் 17,000 ரன்களை அதிவேகமாக குவித்த பேட்ஸ்மேன் என்ற சாதனையை விராட்கோலி படைத்துள்ளார்.
- தென்னாப்பிரிக்காவிற்கு எதிரான ஆறாவது ஒரு நாள் போட்டியின் போது, தன்னுடைய 363-வது போட்டியில் கோலி இச்சாதனையைப் படைத்துள்ளார்.
- கடந்த ஆண்டு 381 போட்டிகளில் இச்சாதனையை படைத்த தென்னாப்பிரிக்காவின் ஹசிம் அம்லாவின் சாதனையை கோலி முறியடித்துள்ளார்.
- மேலும், ஒரே நேரத்தில் நடப்பாண்டிற்கான டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளுக்கான ஐசிசி தரவரிசையில் 900 புள்ளிகளைப் பெற்றுள்ள உலகின் இரண்டாவது வீரர் என்ற சாதனையையும் கோலி படைத்துள்ளார். முதலாவதாக தென்னாப்பிரிக்காவின் ஏ.பி.டிவில்லியர்ஸ் இச்சாதனையைப் படைத்திருந்தார்.
- மேலும் டெஸ்ட் மற்றும் ஒரு நாள் என இரு வடிவங்களிலும் ஒரே நேரத்தில் 900 புள்ளிகளை வென்ற உலகின் 5 வீரர்களுள் தற்போது கோலியும் ஒருவராவார்.

## காமன்வெல்த் நாடுகளுக்கான பிரிட்ஜ் சாம்பியன்ஷிப்

- பிப்ரவரி 14 முதல் 18 வரை ஆஸ்திரேலியாவின் கோல்டுகோஸ்ட் பகுதியில் நடைபெற்ற 5வது காமன்-வெல்த் நாடுகளுக்கான பிரிட்ஜ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் “A” அணி தங்கம் வென்றுள்ளது.
- கிரண்குமார் நாடார் தலைமையிலான இந்தியாவின் “A” அணி ஆஸ்திரேலிய அணியை வென்றுள்ளது.
- இந்த காமன்வெல்த் பிரிட்ஜ் சாம்பியன்ஷிப் போட்டிகள் காமன்வெல்த் நாடுகளுக்கிடையே நடைபெறும்.
- இதன் முதல் போட்டி இங்கிலாந்தின் மான்செஸ்டர் நகரில் நடைபெற்றது.
- இதன் நான்காவது போட்டி ஸ்காட்லாந்தின் கிலாஸ்கவ் நகரில் 2014 ஆம் ஆண்டு நடைபெற்றது.

## ஷிவ் சத்ரபதி மாநில விளையாட்டு விருதுகள்

- இந்திய கிரிக்கெட் அணியின் உறுப்பினர்களான அஜிங்க்ய ரஹானே, ரோஹித் சர்மா ஆகியோருக்கு ஷிவ் சத்ரபதி மாநில விளையாட்டு விருதுகள் மகாராஷ்டிரா அரசால் வழங்கப்பட்டுள்ளது.
- ரோஹித் (2015-2016) மற்றும் ரஹானே (2016-2017) ஆகியோர் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் சிறப்பாக விளையாடியமைக்காக (Outstanding Performance) தேர்ந்தெடுக்கப்பட்டனர்.
- மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இவ்விருவருக்கும் பதக்கம், சான்றிதழ், ரூபாய் 3 லட்சம் வழங்கப்பட்டது.

- முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் பிரவீன் ஆம்ரே 2016-2017 ஆண்டிற்கான பயிற்சியாளருக்கான விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருக்கு பதக்கம், சான்றிதழ், ரூபாய் ஒரு லட்சம் வழங்கப்படும்.

### உலகக்கோப்பை ஜிம்னாஸ்டிக்

- மெல்பர்னில் நடைபெற்ற ஜிம்னாஸ்டிக் உலகக் கோப்பை போட்டியில் அருணா புத்தா ரெட்டி தனி நபர் பதக்கத்தை வென்று உலகக் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் பதக்கம் வென்ற முதல் இந்திய ஜிம்னாஸ்டிக் வீரர் என்ற வரலாற்றை படைத்துள்ளார்.
- அருணா ரெட்டி, 13.649 புள்ளிகள் பெற்று வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார். சுலோவேனியாவின் ஜாஸா கைஸ்லேப் தங்கப்பதக்கத்தையும், ஆஸ்திரேலியாவின் எமிலி ஒயிட் ஹெஎட் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.
- ரெட்டி தன்னுடைய முதல் தேசிய பதக்கத்தை 2005-இல் வென்றார். 22 வயதாகும் ரெட்டி, ஆஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்கும் இந்திய அணியின் குழுவில் இடம்பெறுகிறார்.

## முக்கிய தினங்கள்

### உலக சதுப்பு நிலங்கள் தினம்

- பூமிக்கும், மனித குலத்திற்கும் இடையே சதுப்பு நிலங்களின் (Wet lands) மதிப்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் பிப்ரவரி இரண்டாம் தேதி உலக சதுப்பு நிலங்கள் தினம் (World Wetlands Day – WWD) கொண்டாடப்படுகின்றது.
- நகரங்களை வாழத்தகு இடங்களாக உருவாக்குவதில் சதுப்புநிலங்கள் ஆற்றும் போற்றத்தகு பங்களிப்பை முன்னெடுத்து காட்டுவதற்காக "நீடித்த நகர்ப்புற எதிர்காலத்திற்கான சதுப்பு நிலங்கள்" (Wetlands for a sustainable Urban Future) என்ற கருப்பொருளில் 2018ஆம் ஆண்டு உலக சதுப்பு நில தினம் கொண்டாடப்படுகின்றது.
- ராம்சார் (Ramsar) என்ற ஈரானிய நகரில் 1971 ஆம் ஆண்டு பிப்ரவரி இரண்டாம் தேதி உலகிலுள்ள சதுப்புநிலங்களை பாதுகாப்பதற்காக ஓர் உலகளாவிய உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதை குறிக்கும் விதமாக ஆண்டுதோறும் பிப்ரவரி 2ஆம் தேதி உலக சதுப்பு நிலங்கள் தினம் கொண்டாடப்படுகின்றது.
- 1982 ஆம் ஆண்டிலிருந்து இந்தியா ராம்சார் உடன்படிக்கையின் (Ramsar Convention) உறுப்பினராக இருந்து வருகின்றது.
- 1997ஆம் ஆண்டு முதல் முறையாக உலக சதுப்புநிலங்கள் தினம் கொண்டாடப்பட்டது.
- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாட்டிற்கான அமைச்சகமானது சதுப்புநில பாதுகாப்பிற்கான இந்தியாவின் முதன்மை அமைச்சகமாகும்.

### உலக புற்று நோய் தினம் – பிப்ரவரி 4

- உலக மக்களிடையே புற்றுநோயைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அவற்றின் தடுப்பு, கண்டறிதல் மற்றும் சிகிச்சை போன்றவற்றை ஊக்குவிப்பதற்கும்

உலகம் முழுவதும் ஆண்டுதோறும் ஜனவரி 4ஆம் தேதி உலக புற்றுநோய் தினம் கடைபிடிக்கப்படுகின்றது.

- 2018-ஆம் ஆண்டிற்கான உலக புற்றுநோய் தினத்தின் கருத்துரு "நம்மால் முடியும் என்னால் முடியும்" (We Can I Can).
- "We Can I Can" என்பது 2016 முதல் 2018 வரையிலான 3 ஆண்டு காலத்திற்கு உலக புற்றுநோய் தினத்தின் நோக்கத்தை பரப்புவதற்காக ஏற்படுத்தப்பட்ட சிறப்பு பிரச்சாரமாகும்.
- சர்வதேச புற்றுநோய் கட்டுப்பாட்டுச் சர்வதேச சங்கத்தினால் (Union for International Cancer Control – UICC) 2008 ஆம் ஆண்டு உலக புற்று நோய் தினம் நிறுவப்பட்டது.
- 2020-ல் புற்றுநோயினால் உண்டாகும் உடல்நலக்குறைவு மற்றும் இறப்புகளை குறைப்பதே இத்தின அனுசரிப்பின் நோக்கமாகும்.

## மராத்திய காலாட் படை தினம் - 250வது படைப்பிரிவு தினம்

- மராத்திய காலாட் படை (Maratha light infantry) தன்னுடைய 250வது படைப்பிரிவு தினத்தை பிப்ரவரி 4 ஆம் தேதி கொண்டாடியுள்ளது.
- இந்திய ராணுவத்தின் மிகப் பழமையான மற்றும் பல்வேறு இராணுவப் பதக்க கௌரவங்களை உடைய காலாட் படைகளில் மராத்திய காலாட் படையும் ஒன்றாகும்.
- 1768 ஆம் ஆண்டு மராத்திய காலாட் படை உருவாக்கப்பட்டது. இது பின்னாளில் ஜன்கிபால்டன் (jangipaltan) என்றழைக்கப்பட்டது.
- மராத்திய காலாட்படை பிரிவு தினமாக பிப்ரவரி 4 ஆனது பெரும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் 1670ஆம் ஆண்டு இந்நாளில் தான் மராத்திய சத்ரபதி சிவாஜி கொன்டானா கோட்டையை கைப்பற்றினார்.
- இக்கோட்டையானது சின்கர் (Sinhgarh) எனவும் பிரபலமாக அழைக்கப்படுகின்றது.

## தேசிய யுனானி தினம்

- ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மாதம் 11ம் தேதி, மிகச் சிறந்த யுனானி ஆய்வாளரான ஹக்கிம் அஜ்மல்கானின் பிறந்த தினத்தை குறிப்பிடும் வகையில் தேசிய யுனானி தினம் கொண்டாடப்படுகின்றது.
- சிறந்த கல்வியாளரும், சுதந்திரப் போராட்ட வீரருமான ஹக்கிம் அஜ்மல் கான் சிறந்த இந்திய யுனானி மருத்துவரும், யுனானி மருத்துவத்தில் அறிவியல் ஆராய்ச்சிக்கான அடித்தளமிட்டவரும் ஆவார்.
- மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் கீழ் உள்ள யுனானி மருத்துவத்திற்கான மத்திய ஆராய்ச்சி மையம், தேசிய யுனானி தினக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக சர்வதேச யுனானி மருத்துவத்திற்கான மாநாடு என்று இரண்டு நாள் கருத்தரங்கை நடத்துகின்றது.
- இந்த மாநாட்டின் கருத்துரு - பிரதான சுகாதார முறையுடன் யுனானி மருத்துவ முறையை ஒருங்கிணைத்தல்.

## தேசிய குடற்புழு நீக்க தினம்

- 1 முதல் 19 வயது வரையிலான அனைத்து குழந்தைகளிடத்தும் குடற்புழுத் தொற்றுகளை குணப்படுத்த ஒரு ஒற்றை நிலையான அணுகுமுறை கொண்ட தினமே தேசிய குடற்புழு நீக்க தினமாகும்.
- இந்த தினம் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 10ம் தேதியும் ஆகஸ்டு 10ம் தேதியும் அனுசரிக்கப்படுகிறது.
- குழந்தைகளில் உண்டாகும் நாடு தழுவிய பொதுசுகாதார அச்சுறுத்தலான குடற்புழுத் தொற்று மற்றும் அது தொடர்பான குறைபாட்டை கையாளுவதே இத்தின அனுசரிப்பின் நோக்கமாகும்.
- மிகவும் பொதுவான நோய் தொற்றுகளில் ஒன்றான மண் பரவு குடற்புழுவின் (Soil Transmitted Helminth-STH) கட்டுப்படுத்துதலில் சுகாதார முதலீடுகளை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அளிப்பதற்காக மருத்துவ வல்லுனர்கள், மாநில அரசு மற்றும் பிற பங்கெடுப்பாளர்களை ஒருங்கிணைப்பதற்காக இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.

## தேசிய உற்பத்தித்திறன் தினம்

- இந்தியாவில் ஆண்டுதோறும் பிப்ரவரி 12ஆம் தேதி அன்று தேசிய உற்பத்தித்திறன் (Productivity) தினமும், பிப்ரவரி 12 முதல் 18 ஆம் தேதி வரை தேசிய உற்பத்தி திறன் வாரமும் தேசிய உற்பத்தித்திறன் குழுவால் (National Productivity Council) கொண்டாடப்படுகின்றது.
- 2018ஆம் ஆண்டிற்கான தேசிய உற்பத்தித்திறன் வாரத்தின் கருத்துரு "தொழிற்சாலை 4.0 இந்தியாவிற்கான முன்னேறும் வாய்ப்புகள்" (Industry 4.0 Leap Frog opportunity for India).
- தொழிற்துறையின் உற்பத்திப் பொருட்கள், மதிப்புக் கூட்டு சங்கிலிகள் (Value Chains) மற்றும் வணிக மாதிரிகள் போன்றவற்றினுடைய உட்தொடர்பை அதிகரிப்பதும், அவற்றின் டிஜிட்டல் மயமாக்கலை அதிகரிப்பதும் இந்த 'தொழிற்சாலைகள் 4.0' தொடக்கத்தின் நோக்கமாகும்.

### *தேசிய உற்பத்தித்திறன் குழு*

- தேசிய உற்பத்தித்திறன் குழுவானது (National Productivity Council-NPC) இலாப நோக்கற்ற, திட்டப் பணி சார்ந்த (Mission Oriented) ஓர் உச்ச, தன்னாட்சியுடைய அமைப்பாகும்.
- இது 1958 ஆம் ஆண்டு மத்திய தொழிற்துறை அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது.
- இவ்வாண்டு இக்குழு தன்னுடைய 60வது நிறைவு ஆண்டை கொண்டாடி வருகின்றது.
- இந்தியப் பொருளாதாரத்தின் அனைத்து துறைகளின் உற்பத்தித் திறன்களுக்கான காரணிகளை (Causes of Productivity) மேம்படுத்துவதே இக்குழுவின் நோக்கமாகும்.
- டோக்கியோவை தலைமையிடமாகக் கொண்ட, அரசுகளுக்கிடையேயான அமைப்பான ஆசிய உற்பத்தித்திறன் அமைப்பின் (Asian Productivity Organization) ஓர் உள்ளடக்கப் பிரிவே தேசிய உற்பத்தித்திறன் குழுவாகும்.
- இந்தியா இந்த அமைப்பின் நிறுவன உறுப்பினராகும்.

## உலக வானொலி தினம் - 13 பிப்ரவரி

- பொழுதுபோக்கு, தகவல் அளிப்பு மற்றும் தொலைத்தொடர்பு போன்றவற்றிற்கான பயன்படு ஊடகமாக ரேடியோவைக் கொண்டாட உலகம் முழுவதும் ஆண்டுதோறும்

பிப்ரவரி 13ஆம் தேதி உலக ரேடியோ தினம் கொண்டாடப்படுகின்றது.

- 2018 ஆம் ஆண்டிற்கான உலக ரேடியோ தினத்தின் கருத்துரு - "ரேடியோ மற்றும் விளையாட்டு" (Radio and sports).
- தன்னுடைய 36 வது பொது அவை கூடலில் யுனெஸ்கோ பிப்ரவரி 13ஆம் தேதியை தேசிய வானொலி தினமாக அறிவித்தது.
- பின்னர் ஐ.நா. பொது அவையால் பிப்ரவரி 13 ஆனது உலக வானொலி தினமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- 2012ஆம் ஆண்டு முதல் உலக ரேடியோ தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## ராமகிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த நாள் விழா

- இராமகிருஷ்ண பரமஹம்சரின் 182-வது பிறந்த நாள் விழா பிப்ரவரி 18, 2018 அன்று கொண்டாடப்பட்டது.
- பிப்ரவரி 18, 1836 அன்று கடாதர் சட்டோபாத்யாய் (Gadadhar Chattopadhyay) என்ற இயற்பெயர் பெற்ற இவர், மேற்கு வங்க மாநிலத்தின் ஹீக்ளி மாவட்டத்திலுள்ள கமர்புகுர் (Kamarpukur) என்ற இடத்தில் பிறந்தார்.
- இவருடைய ஆன்மீக இயக்கமானது மத பாகுபாடு மற்றும் சாதி வேறுபாடு ஆகியவற்றை நிராகரித்ததன் மூலம் மறைமுகமாக தேசியவாதத்திற்கு உதவி புரிந்தது,.
- இராமகிருஷ்ணரின் மத மற்றும் ஆன்மீக தத்துவமான ஷாக்டோ (Shakto), அத்வைதம், வேதாந்தம் , உலகளாவிய சகிப்புத் தன்மை ஆகியவற்றை மையமாகக் கொண்டது.
- இராமகிருஷ்ணரின் சீடர்களில் முதன்மையானவர் விவேகானந்தர். இராமகிருஷ்ணரின் தத்துவங்களை உலக அரங்கில் நிறுவியதில் (in establishing) விவேகானந்தர் ஒரு கருவியாக செயல்பட்டார்.
- இராமகிருஷ்ணரின் கருத்துக்களை முன்னெடுத்துச் செல்வதற்காக, 1897ல் விவேகானந்தர், இராமகிருஷ்ண இயக்கத்தை ஆரம்பித்தார்.

## உலக சமூகநீதி நாள் – பிப்ரவரி 20

- வறுமை, சமூக புறக்கணிப்பு மற்றும் வேலை வாய்ப்பின்மை போன்ற சமூகப் பிரச்சனைகளை கையாளுவதற்கென மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக ஆண்டு தோறும் உலகம் முழுவதும் பிப்ரவரி 20 ஆம் தேதி உலக சமூக நீதிநாள் (World Social Justice Day) கொண்டாடப்படுகிறது.
- 2018 ஆம் ஆண்டிற்கான சமூக நீதி நாளின் கருத்துரு ⇒ "முன்னேற்றத்திலுள்ள தொழிலாளர்கள்; சமூக நீதிக்கான தேடல்" (Workers on the Move: The Quest for Social Justice)
- நவம்பர் 26, 2007 அன்று ஐ.நா. பொது அவை தன்னுடைய 63-வது பொது அவை கூடுகையிலிருந்து பிப்ரவரி 20 ஆம் தேதியானது ஆண்டுதோறும் உலக சமூக நீதி தினமாக கொண்டாடப்படும் என அறிவித்தது.

## சர்வதேச தாய்மொழி தினம் – பிப்ரவரி 21

- மொழியியல் (Linguistic), பன்மொழித்துவம் (multilingualism) மற்றும் கலாச்சார

பன்முகத்துவத்தைப் பற்றி விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக உலகம் முழுவதும் ஆண்டு தோறும் பிப்ரவரி 21 ஆம் தேதி சர்வதேச தாய்மொழி (Mother Language) தினம் கொண்டாடப்படுகிறது.

- 2018 ஆம் ஆண்டிற்கான உலக தாய்மொழி தினத்தின் கருத்துரு = "மொழியியல் பன்முகத்துவம் மற்றும் நீடித்த வளர்ச்சியில் பன்மொழித்துவத்தை கணக்கில் கொள்ளுதல்" (Linguistic Diversity and Multilingualism Count for Sustainable development).
- மொழியியல், பன்மொழித்துவம், கலாச்சார பன்முகத்துவத்தை ஊக்குவிப்பதற்காக 1999 ஆம் ஆண்டு யுனெஸ்கோ அமைப்பினால் இத்தினம் முதன் முதலாக பிரகடனப்படுத்தப்பட்டது.

# இதரச் செய்திகள்

## கூகுளின் இணைய பாதுகாப்புப் பிரச்சாரம்

- இணைய பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை இந்திய மக்களிடையே ஏற்படுத்துவதற்காக சர்வதேச இணைய தேடுபொறி நிறுவனமான கூகுள் "பாதுகாப்பு சோதனை செய்தாயா?" (Security Check Kiya) என்ற பிரச்சாரத்தை தொடங்கியுள்ளது.
- இணைய வழியில் வங்கி கணக்குகள் திருடப்படுவதிலிருந்து (Account Hijacking) இணையத்தை முதல் முறையாக பயன்படுத்தும் பயன்பாட்டாளர்களை காப்பதும், தீங்கிழைக்கும் செயலிகளிலிருந்து (Malicious Apps) ஆன்ட்ராய்டு கைபேசிகளை பாதுகாப்பதும், கைபேசி தொலைந்தால் அதிலிருந்து சம்பந்தப்பட்டவரின் தனிப்பட்ட அனைத்து தரவுகளும் கசிந்து விடாமல் பாதுகாப்பதும் இந்த பிரச்சாரத்தின் முக்கிய நோக்கங்களாகும்.
- இந்த பிரச்சாரமானது ஆண்டுதோறும் பிப்ரவரி 6 ஆம் தேதி கொண்டாடப்படுகின்ற பாதுகாப்பான இணைய தினத்தின் (Safer Internet Day) அனுசரிப்பின் போது வெளியிடப்பட்டுள்ளது.
- கூகுள் ப்ளே புரோடெக்ட் (Google Play Protect) என்ற கூகுள் சேவையானது தீங்கிழைக்கும் செயலிகளிலிருந்து ஆன்ட்ராய்டு கைபேசிகளை ஸ்கேன் செய்து பாதுகாக்க உதவும்.
- கூகுளின் மற்றொரு சேவையான "Find my Device" ஆனது தொலைந்த ஆன்ட்ராய்டு கைபேசிகளை பயனாளர்கள் எளிதாக இடம் கண்டறிய (locate) உதவும்.

## உலகின் பரபரப்பான சர்வதேச விமானநிலையம்

- ஏர்போர்ட் கவுன்சில் இன்டர்நேஷனல் (Airport Council international) எனும் நிறுவனத்தினால் 2017 ஆம் ஆண்டிற்கான உலகின் பரபரப்பான விமான நிலையங்களின் (World's Busiest Airport) பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
- சர்வதேச வான் பயணத்திற்கான வகைப்பிரிவில் உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையமாக துபாய் சர்வதேச விமான நிலையம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- லண்டனின் ஹீத்ரோ விமான நிலையம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- ஒட்டுமொத்த விமான சேவைகள் வகைப் பிரிவில், உலகின் மிகவும் பரபரப்பான சர்வதேச விமான நிலையமாக ஜார்ஜியாவில் உள்ள ஹாட்ஸ்பீல்டு-ஜாக்சன் அட்லாண்டா சர்வதேச

விமான நிலையம் அறிவிக்கப்பட்டுள்ளது.

- ஒற்றை ஓடுதள பயன்பாட்டு வசதியுடைய விமான நிலையங்களுள் உலகின் மிகவும் பரபரப்பான விமான நிலையமாக, மும்பையின் சத்ரபதி சிவாஜி மஹாராஜ் சர்வதேச விமான நிலையம் அறிவிக்கப்பட்டுள்ளது.
- மும்பை சத்ரபதி சிவாஜி விமான நிலையம் நாளொன்றுக்கு சுமார் 837 விமானப் போக்குவரத்தை கையாளுகிறது.

## தூய்மை இந்தியா துப்புரவு பூங்கா - புது தில்லி

- மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகம், சுற்றுச்சூழல் சுகாதார நிலையம் மற்றும் டாடா அறக்கட்டளை ஆகியவை இணைந்து புது தில்லியில் ஒரு துப்புரவு பூங்காவை அமைத்துள்ளன.
- சுகாதாரத் துறையில் உள்ள பல்வேறு தொழில்நுட்பங்களைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த பூங்காவானது அமைக்கப்பட்டுள்ளது.
- இந்தப் பூங்காவானது கழிப்பறை தொழில்நுட்பங்கள், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மை தொழில்நுட்பங்கள் போன்றவற்றை சுருக்கமான விளக்கங்களுடன் காட்சிப் படுத்துகின்றது.

## இந்தியாவிற்கான கல்வியின் தாக்கத்திலான பத்திரம்

- இந்தியாவில் இரண்டு லட்சத்திற்கும் மேற்பட்ட குழந்தைகளின் கல்வியை மேம்படுத்த ஒரு புதிய 10 மில்லியன் டாலர் மதிப்பிலான வளர்ச்சியின் தாக்கத்திலான பத்திரம் ஒன்றை பிரிட்டனின் இளவரசர் சார்லஸ் வெளியிட்டுள்ளார்.
- தெற்காசியாவில் நிலவி வரும் வறுமையை ஒழிப்பதற்காக 10 வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்து அரச குடும்பத்தின் மூலம் ஏற்படுத்தப்பட்ட தெற்காசியாவின் மிகப்பெரிய வகையைச் சேர்ந்த இப்பத்திரத்தின் சமீபத்திய வெளியீடு பிரிட்டிஷ் ஆசியன் அறக்கட்டளையால் (British Asian Trust) ஏற்படுத்தப்பட்ட சமீபத்திய நிதி திரட்டும் முயற்சியாகும்.
- பிரிட்டிஷ் ஆசியன் அறக்கட்டளையின் 10ம் ஆண்டு துவக்கவிழாவை கொண்டாட நடத்தப்பட்ட விழாவில் இப்பத்திரம் அறிமுகம் செய்யப்பட்டது.
- இந்த புதிய பத்திரம் இங்கிலாந்தின் சர்வதேச வளர்ச்சிக்கான துறையுடன் (Department for International Development DfID) இணைந்து காமிக் நிவாரண அமைப்பு, மிட்டல் நிறுவனம் மற்றும் யுபிஎஸ் ஆல்டிமஸ் நிறுவனம் ஆகியவற்றின் உதவியுடன் பிரிட்டிஷ் ஆசியன் அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.
- இந்தப் பத்திரம் தெற்காசியாவில் உள்ள விளிம்பு நிலைச் சமூகத்தில் இருந்து வரும் ஆரம்பப் பள்ளி குழந்தைகளின் எண்ணியல் பயிலும் திறனையும், எழுத்தறிவையும் மேம்படுத்தும் எண்ணத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

## கூகுள் நிறுவனத்திற்கு அபராதம்

- ஆன்லைன் இணைய தேடல் தொடர்பான விவகாரத்தில் இந்திய இணைய சந்தையில் நியாயமற்ற வணிக நடைமுறைகளை (Unfair Business Practices) மேற்கொண்டமைக்காக

உலகின் பிரபல தேடுபொறி நிறுவனமான கூகுள் மீது இந்திய போட்டி ஒழுங்குமுறை ஆணையம் (CCI - Competition Commission of India) 136 கோடி ரூபாயை அபராதமாக விதித்துள்ளது.

*இந்திய போட்டி ஒழுங்குமுறை ஆணையம்*

- ❖ தொழிற் போட்டிச் சட்டம் 2002-ன் கீழ் (Competition Act 2002) ஏற்படுத்தப்பட்ட ஓர் பகுதி நீதித்துறை மற்றும் சட்டப்பூர்வ (Quasi-Judicial and Statutory Body) அமைப்பே இந்திய போட்டி ஒழுங்குமுறை ஆணையமாகும்.
- ❖ மத்திய அரசால் நியமிக்கப்படும் ஒரு தலைவர் மற்றும் 6 உறுப்பினர்களை இந்த ஆணையம் கொண்டுள்ளது.
- ❖ தொழிற் போட்டித் தன்மை (Competition) மீது பாதக விளைவுகளை ஏற்படுத்தும் வணிக நடைமுறைகளை (Business Practices) ஒழிப்பதும், வணிக சந்தையில் தொழிற் நிறுவனங்களிடையே போட்டித்தன்மையை மேம்படுத்துவதும் அதனை நீடிக்கச் செய்வதும், வாடிக்கையாளர்களின் நலனை காப்பதும், இந்திய சந்தையில் அனைவருக்கும் வர்த்தக சுதந்திரத்தை உறுதி செய்வதும் இதன் கட்டாயப் பணிகளாகும்.
- ❖ இது மத்திய பெரு நிறுவன விவகாரத்துறை (Ministry of Corporate Affairs) அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்றது.

## இந்தியாவின் முதல் ரேடியோ திருவிழா

- ❖ உலக ரேடியோ தினத்தை (பிப்ரவரி 13) முன்னிட்டு இந்தியாவின் முதல் ரேடியோ திருவிழா யுனெஸ்கோ அமைப்புடன் இணைந்து ரேடியோ மற்றும் தொலைக்காட்சியில் பணிபுரியும் பெண்களுக்கான சர்வதேச சங்கத்தால் (International Association of Women in Radio and Television) புதுதில்லியில் ஒருங்கிணைக்கப்பட்டது.
- ❖ உலக ரேடியோ தினத்தின் கருத்துருவான ரேடியோ மற்றும் விளையாட்டு எனும் கருத்துருவைத் தாண்டி சமூக மாற்றத்திற்கான மேடையாக ரேடியோ ஊடகத்திற்கு உள்ள ஆற்றலை ஆராய இத்திருவிழா நடத்தப்பட்டுள்ளது.

-------------